Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 12/00
දිනමුරසු වාරමලර
ஒக். 01–07, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 376

# சொல்வாக்குக்கு இல்லாத செல்வாக்கு யாருக்கு வெற்றி வாய்ப்பு?



## கடத்தல் லிஸ்ட்டில் ரஜினி?

## கன்னி ராசி கிளிண்டன்

## பழமும் பலனும்

## சின்னத்திரை சில்மிஷங்கள்

# முரசம்

## சிறு பிள்ளைத்தனம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தேர்தல் அறிவித்து விட்டது.
தேர்தலை அறிவித்த
சில வாரங்களிலேயே
அனர்த்தங்கள் சில
நிகழ்ந்துவிட்டன.
முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்
அமைச்சர் அஷ்ரஃப்
ஹெலி விபத்தில்
எதிர்பாராத விதமாகக்
காலமாகிவிட்டார்.
அவரின் மரணம்
சிறுபான்மை இனத்தின்
ஒரு பலம்மிக்க தலைவரை
இழக்கச் செய்ததுடன்,
முஸலிம் காங்கிரஸிற்குள்ளும்
பாரிய ஒரு
தலைமை இடைவெளியைத்
தோற்றுவித்து விட்டது.

இதற்கு சிலகாலத்திற்கு
முன்னர்தான்
இலங்கைத் தொழிலாளர்
காங்கிரஸின் தலைவரும்
அமைச்சருமான
தொண்டமான் காலமானார்.
அதுவும் ஒரு
சிறுபான்மை இனத்தின்
பலம்மிக்க தலைமையை
இழக்கவைத்த
நிகழ்வாக அமைந்தது.

தமிழ் மக்களைப்
பொறுத்த வரையில்
பாராளுமன்ற அரசியலில்
வலுவான தலைமை
இல்லாதிருக்கிறது.

முன்னொரு காலத்தில்
தமிழ்பேசும் மக்களின்
உரிமைக்காகப்
போராடும் அமைப்பாக
முன்வந்திருந்த
தமிழர் விடுதலைக் கூட்டணி
போராட்டத்தை
முன்னெடுக்க முடியாமல்
திணறியதோடு,
தலைமை வகிக்க முடியாத
கையாலாகாதவர்களாய்
அம்பலப் பட்டுப் போயினர்.

அரசியலில் தம்மால்
எதையுமே சாதிக்க முடியாதவர்களாய்
அவர்கள் கைவிரித்து விட்ட போதும்
பாராளுமன்றக் கதிரைகளில் மட்டும்
குறியாக உள்ளனர்.

ஆனால் இப் பாராளுமன்றத்தில்
தாம் என்ன சாதிக்கப் போகிறார்கள்
என்பதை மட்டும்
அவர்களால் கூற முடிவதில்லை.
வெறுமனே,
மற்றவர்கள் அக் கதிரைகளைப்
பிடித்துவிடுவார்கள் என்பதற்காகத்
தாம் போட்டியிடுவதாகப்
போலிக் காரணங்களைக்
காட்டி வருகிறார்கள்.

இவ்வாறுதான்
யாழ். மாநகர சபையிலும்
மேயர் பதவியைத்
தக்கவைத்துக் கொண்டார்கள்.

ஆனால் அச் சபையை
இயக்க முடியாதவர்களாய்
பின்வாங்கி விட்டார்கள்.
இரண்டு மேயர்கள் புலிகளால்
அடுத்தடுத்து கொல்லப்பட்ட நிலையில்
இப்போது நீண்டகாலமாக
மேயரே இல்லாது
முடமாக்கி வைத்துள்ளார்கள்.

தாம் முன்வைத்த கால்
சரியானதென்ற உறுதிப்பாடிருந்தால்,
எவர் எதிர்ப்பினும்
யாழ். மாநகர சபையை
முன்னெடுத்துச் சென்றிருக்க வேண்டும்.
அல்லது, புலிகளின் கருத்துப்படியே
அதைத் தவறென்று எண்ணினால்
முழுமையாக வாபஸ் பெற்றிருக்கவேண்டும்.

ஆனால் இப்போது
இரண்டும் கெட்டான் நிலையில்
நிற்கிறார்கள்.
இதேவேளை கூட்டணிக்குள்ளும்
இந்தச் சபையை ஏற்றது பிழையென
ஜோசப் பரராசசிங்கத்தின் அணி
மாற்றுக் கருத்தைக்
கொண்டிருக்கிறது.

இரண்டுபட்ட போக்குகள்
தெளிவாகத் தெரியும்
கூட்டணியோ இப்போது
கட்சியென்ற கட்டமைப்பிலிருந்து
தளர்ந்து விட்டது.
'கட்டவிழ்ந்து உருளைக்கிழங்கு மூட்டை' போல்
அதன் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும்
இஷ்டம் போல் செயற்படக்கூடிய
ஒழுங்கற்ற நிலைமை அதிலுள்ளது.

நீலன் திருச்செல்வம்
அரசியலமைப்பை தீட்ட
ஜோசப் எதிர்க்கிறார்.
அண்மையில் சமர்ப்பித்த
அரசியல் அமைப்பு வரைவு குறித்து
ஜோசப் அணி எதிர்க்க,
சம்பந்தரும் சங்கரியும்
ஆதரிக்கும் பாங்கினை
வெளிக்காட்டினர்.

இந்நிலையில்
எதிர்வரும் பாராளுமன்றத்தில்
முக்கிய விடயமாக அமையவுள்ள
தீர்வு திட்டத்தில்
ஆக்கபூர்வமாக அழுத்தம் செலுத்தி
தமிழ் பேசும் மக்களுக்கு
சாதகமாக்கவல்ல
பிரதிநிதித்துவத்தை
எப்படி ஏற்படுத்துவது என்பதே
இந்தத் தேர்தலில்
தமிழ்பேசும் மக்கள்
எதிர்கொள்ளும்
பிரதான கேள்வியாகியுள்ளது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஆன்மீகம்

## நிம்மதி பெறும் நேரியவழி



சிவபெருமானை முழுமுதற்கடவுளாக நினைத்து வழிபடும் சமயமே சைவசமயமாகும். இச்சமயத்தில் உள்ளவர்கள் கைக் கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகள் பலவிருப்பினும், எல்லா நியமங்களையும் பேணமுடியாதவர்கள் இயல்புக்கு ஏற்றவகையில் முக்கியமாகவுள்ள சிலவற்றையேனும் இக் காலகட்டத்தில் பின்பற்றிவரவேண்டும். அப்போதுதான் வாழ்வில் நிம்மதி தோன்றும். நாளாந்தம் ஆலய தரிசனம் செய்ய முடியாதவர்கள் சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரிய, சந்திர கிரகணம், சிவராத்திரி, முதலிய புண்ணிய காலங்களிலாவது தவறாது ஆலயம் சென்று சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும். இயன்றளவு இல்லறம் சிறக்க நல்ல அறநெறிக்கருத்துக்களை வழங்கும் சைவ சமய நற்சிந்தனை நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டும். சூதாட்டம் துன்மார்க்கம், பேராசை போன்ற வழிகளில் மனதை அலைய விடாது கடவுளை நம்பி செய்யும் நமது தொழிலை திறம்பட செய்து அன்போடு கூடிய அறநெறி வாழ்க்கையைப் பின் பற்றி ஆசாரசீலராக உண்மைச் 'சைவர்களாக' அன்பே சிவம், அதுவே பிரம்மம்! என்று மனம் கனிந்து மங்களகரமாக நிம்மதி பெற்று வாழப் பழகிக் கொள்வோமாக!

அ.அரசரெத்தினம்-சேனையூர்-06.

## எளிமையாக வாழுங்கள்

"உங்களை விடக் கீழே உள்ளவர்களைப் பாருங்கள்! உங்களை விட மேலே உள்ளவர்களைப் பார்க்காதீர்கள்! இறைவன் உங்களுக்கு வழங்கிய அருளை அற்பமாகக் கருதாமலிருக்க இது ஏற்றதாகும்!" என்று நபி (ஸல்) கூறியதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள்.

**ஆதாரம்: அஹ்மத், திர்மிதீ, முஸ்லிம்**

"நரகம் யார்மீது ஹராம் என்பதை உங்களுக்கு அறிவிக்கட்டுமா? மக்களுடன் நெருக்கமாக இருப்பவரும், எளிமையாக நடப்பவருமே அவர்கள்," என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அறிவிக்கின்றார்கள்.

**ஆதாரம்: அஹ்மத், தப்ரானி திர்மிதீ**

நபி (ஸல்) அவர்கள் சாய்ந்து கொள்ளும் தலையணை உள்ளே சருகுகள் நிறைக்கப்பட்ட தோல் பையாக இருந்தது என்று ஆயிஷா (ரலி) அறிவிக்கின்றார்கள்.

**ஆதாரம்: புகாரீ, முஸ்லிம், திர்மிதீ**

எம்.ஜே.எம்.பஸீல்-காத்தான்குடி-04.

## ஆண்டவர் மன்னிப்பார்

யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி நினிவே மாநகருக்குச் சென்று ஒரு நாள் முழுவதும் நடந்ததும் உரத்த குரலில், "இன்னும் நாற்பது நாளில் நினிவே மாநகரம் அழிக்கப்படும்!" என்று அறிவித்தார். நகரமக்களும் மனம் மாறி சாக்குடை உடுத்துக் கொண்டு சாம்பலில் அமர்ந்து கொண்டனர்.

அரசனும் அவ்வாறே சாக்குடை உடுத்தி சாம்பலில் உட்கார்ந்து கடவுளை புகழ்ந்து பாடினான்.

"இவ்வாறு செய்தால் கடவுள் தம் மனத்தை மாற்றி அவரது கொடுஞ்சினம் தணிந்து நம்மை அழிக்க மாட்டார்!" என்றான். நகர மக்களும் அவ்வாறே செய்தனர். இதைப்பார்த்த ஆண்டவர் தமது கடும் கோபத்தைத் தணித்து, நினிவே மக்கள் மீது மனமிரங்கி அவர்களை மன்னித்தார்.

நாமும் எமது பாவவழிகளில் இருந்து விலகி அயலவருடன் அன்பாய் இருந்து கடவுளிடம் எமக்காகவும் எமது நாட்டுக்காகவும் ஒருமனதாய் செபித்தால் கடவுள் எமது நாட்டுக்கு நீதியுடன் கூடிய சமாதானத்தை தந்து எமது நாட்டில் நடக்கும் அழிவுகளில் இருந்து எம்மைக் காப்பார்.

**(யோனா 3:1)** ம.அருள்தாஸ்-மண்டைதீவு

## கவிதைப் போட்டி இல.376



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 07.10.2000

கவிதைப் போட்டி இல.376
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.373

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### உறவு

மழையின்றி மண்ணே
இல்லையம்மா-நீ இன்றி
நான் இல்லையம்மா.
வயலுக்கு அணை வரம்பம்மா
எனக்குத் துணை நீயம்மா!
ஆறு வற்றினால் ஊற்றை
நம்பலாமம்மா-நீ
வற்றிப் போனால்
யாரை நம்புவதம்மா?

ரி.மோகன்குமார்-கலகா.

### பரிசுக்குரிய கவிதை

### எம்மை ஆதரியுங்கள்!

**புனல் காய்ந்த இம்மருதத்தில்**
**மங்கையர் எம்மால்-பயிரை**
**விதைக்கவும், முடியும்;**
**வளமூட்டவும் முடியும்!**
**அறுக்க வேண்டியது**
**நீங்களே!-ஆம்**
**பயிர்களையல்ல-இருமுறை**
**எம் சின்னத்தை.**

**பி.லக்ஸ்மன்-வவுனியா.**

### காரணம்?

அயல் நாட்டுப் பெண் நிலவைத்தொட
நாங்கள் மூன்றாம் பிறையைத்
தேடுகிறோம்;
காரணத்தை இன்று தேடாதீர்-அது
என்றோ விதைக்கப்பட்ட விஷச் செடி!

எம்.சிவகுமார்-வவுனியா.

### ஒற்றுமை

கூட்டமாய்
கூடியமர்ந்து...
கும்மாளமடிக்கும் மாந்தரே!
உங்களிடமுள்ள
பொறாமை நீங்கின்...
ஒற்றுமை என்றும் ஓங்கும்
வேற்றுமை என்றும் மங்கும்
இந்நிலை என்றும் பொங்கும்

எம்.எ.ப்.எ.ப்.பாரிஹா-
பேருவளை.

### எது உண்மை?

ஏன் இந்த ஆனந்தச் சிரிப்பு
இழந்து விட்ட சுதந்திரம் கிடைத்து
விட்டதென்றா? இல்லை
இறந்து போன சந்ததிகள் உயிர்
பெற்று விட்டனரென்றா? எது?
நீங்கள் சிரிக்கப்போவது இன்னும்
சில நிமிடங்களோ! வினாடிகளோ!
என்பது மட்டும் உண்மை!

எஸ்.சுதாகர்-கொழும்பு 11.

### சமாதானப் புறா

இவர்கள் ஏன் வானத்தைப் பார்க்கிறார்கள்?
வானில் எதனைக் கண்டு விட்டனர் என்று
பார்க்கிறீர்களா?
இவர்கள் கண்டது வானில் பறக்கும்
சமாதானப் புறாவை!

ச.சசிகரன்-தெஹிவளை.

### வீர திலகங்கள்

வன்செயல்களுக்கும்
இனவாத இம்சைகளுக்கும்
சீக்கிரமாய் விடிவு காண
வீர திலகங்களாக இணைந்துள்ளீரோ?
ஆம் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கும்
வீராங்கனைகளை இன்றே
விழிக்கச்செய்யுங்கள்!

எம்.ரஞ்சிதமலர்-ஹல்கரனோயா.

### நான் அறியேன்

ரம்பையோ, ஊர்வசியோ,
மேனகையோ, அல்ல தேவலோக
கன்னிகளோ அதை நான் அறியேன்!
ஆனால்,
ஷெல் வந்து விழுந்தால்,
சிதறிடுவீர்கள் அதை
நான் அறிவேன்!

அ.சிங்கராஜா-ஒந்தாச்சிமடம்.

### எழுச்சி

பெண்ணடிமை
தீர்ந்திடின்
உலக
பேதமை தீர்ந்திடும்
என்ற
புதிய
கோஷத்தோடு
புறப்பட்டு
விட்டனரோ....?

பு.புவனேஸ்வரி-பசறை.

### நாளைய அபலைகள்

இன்றைய சுமங்கலிகளே! நீங்கள்
நாளைய அபலைகள்!

செ.நேசமலர்-மொனறாகலை.

# வாசக[ர்]சாலை

## ஏனிந்தத் திடீர் மாற்றம்?

முரசு ஆசிரியருக்கு,

எழுத்துச்சிற்பி எஸ்.டி.சிவநாயகம் அவர்களைப் பற்றிய தொடரில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அன்று நடைபெற்ற அரசியல் சமுதாயமாற்றங்களையிட்டு சுவைபட திரு.இரா.பத்மநாதன் எழுதிவருகிறார். இன்றைய இளம் உள்ளங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பல அருமையான சம்பவங்களை எழுதிவந்தார்.

ஆனால், திடீரென்று கட்டுரை ஆசிரியர் தான் எடுத்துக் கொண்ட பொருளை விட்டு வேறு பாதையில் செல்வதை, சில வாரங்களாக அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை.

'பழைய உண்மைகளைக் கிளறவேண்டாம்', என்று கட்டுரை ஆசிரியரை எவராவது எச்சரிக்கை செய்து விட்டார்களோ தெரியவில்லை.

எது எவ்வாறானாலும், மறைந்து போன உண்மைகளை மீண்டும் அம்பலத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்று, அரசியல் சமூக விவகாரங்களைக் கற்றறிய விரும்பும் எம் போன்றவர்களுக்காக கட்டுரை ஆசிரியரை அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

எம்.ஏ.நஸீம்-நிந்தவூர்-03.

நஸீம் அவர்களுக்கு,

கட்டுரை ஆசிரியரிடம் உங்கள் மடலைக் கொடுத்தேன். அவர் இவ்வாறு கூறுகிறார்:

"(தேர்தல்) காலத்தின் கட்டாயத்தால் சற்றுப் பாதை விலக வேண்டியதாயிற்று. தேர்தல் முடிந்த பின்னர் பழைய பாதையில் உங்களை இட்டுச்செல்வேன்!"

-ஆசிரியர்-

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு,

373வது முரசில் இடம்பெற்ற கவிதை திருட்டுப்பற்றிய ஆக்கத்தை கண்ணுற்று அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்தேன். காரணம் என் போன்ற வளர்ந்து வரும் இளங்கவிஞர்களுக்கு ஊக்கம் கொடுத்து வரும் தினமுரசு வார இதழுக்கு எத்தனை கோடி நன்றிகள் கூறினாலும் போதாது. அக்கரப்பத்தனை வாசகரை நினைத்து கவலையடைகிறேன். இனி அவர் தனது சொந்த கற்பனையில் எழுதி வரும் ஆக்கங்களையும் தாங்கள் நிராகரித்து விடுவீர்கள் என்பதில் என் போன்ற பலருக்கு சந்தேகமில்லை. தினமுரசில் எனது கவிதை இடம்பெறாதா, என ஒவ்வொருவரும் ஏங்கிக் கொண்டிருக்கும் வேளையில், இப்படியான நிகழ்வுகள் சரியில்லை ஐயா! தொடர்ந்து உங்களுக்கு ஆதரவைத்தருவதற்கு நாங்கள் தயார் ஐயா!

சி.சிவகுமாரன்-வட்டகொடை.

சிநேகிதனே...!

உந்தன் வருகைக்காக நாம் நாட்களை எண்ணி உன்னைப் பெற்றுக் கொள்வதிலும் ஒரு சுகத்தைக் காண்கின்றோம்.


அதில் நாட்டு நடப்புக்களுடன் பல சுவையான அம்சங்களையும், சிறுகதைகளையும், தொடர்கதைகளையும் சுவைபடத் தந்து, தேன் துளிகளாய் 'தேன் கிண்ணம்' பகுதியில், இனிமையான கவிதைகளைப் புகுத்தி, 'தகவல் பெட்டியில்' நாம் அறிந்திராத பல தகவல்களைத் தருகிறாய்.

எம்மை மகிழ்ச்சிப் படுத்துவதிலேயே முழுமூச்சாய் ஈடுபடும் உன்னில்... நாம் மறந்து விட்டாலும் மறக்கமுடியாத பெரியோர்களை நீ... எமக்கு நினைவுபடுத்தத் தவறுவதில்லை.

அந்த வகையில் முரசு 372ல் அன்னை 'தெரேசா'வின் மூன்றாண்டு நினைவு தினத்தை நினைவு கூர்ந்து சில தகவல்களையும் தந்த முரசுக்கு நன்றி.

என்றும் உன் பணிக்கு வாசக நெஞ்சங்களின் வாழ்த்துக்கள் பல!

முஸம்மில்-குவைத்.





தமிழ்க் கட்சிகளுக்கு உள்ள சுயநல பேதங்களையும், நோக்கம் கருத்துக்கள் என்பவை 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' கட்டுரையில் எடுத்துக்காட்டப் பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கடந்த காலபோக்கையும் தற்போது கொண்டுள்ள கொள்கை பற்றிய கருத்துக்களை விளக்கியது.

'அலசுவது இராஜதந்திரி' கட்டுரையில் ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் மக்களை ஏமாற்றி சுயநலபோக்கு கொண்டதை தெளிவுபட எடுத்துக்காட்டியது.

செல்வி.வே.சிவானந்தி-கிரான்.

முரசு. வாரம் தோறும் அள்ளி வரும் அனைத்து அம்சங்களுமே பிரமாதம். தற்போதைய இலங்கை பொதுத்தேர்தல் நிலவரங்களையும் அரசியல் நிலவரங்களையும் அவ்வப்போது வெளியிடுவதில் தினமுரசுக்கு நிகர் தினமுரசுவே. மேலும் உன்னில் இடம்பெறும் சிறுகதை, தொடர் கதை, பலரச திரட்டு, 'அண்டை மண்டல' விவகாரம், 'சினிமா' இதுபோன்ற இன்னொரன்ன அம்சங்கள் மெருகூட்டுகின்றன. முரசில் மேலும் பல போட்டி நிகழ்ச்சிகளை சேர்த்தால் சிறப்பாக இருக்குமல்லவா? எமது ஆசை விரைவில் நிறைவேறுமா?

ஏ.சீ.எம்.முஸம்மில்-குளியாப்பிட்டிய.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# போர் வேகம் தணியாத நிலையில் தேர்தல் சுமுகமாக நடைபெறுமா?

## வடக்கே எழுந்துள்ள விடை காணமுடியா வினா!

**யாழ்** குடாநாட்டில், பொதுத் தேர்தலுக்கான நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் அரச தரப்பினர் இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து நடத்தி வருவதானது ஒரு குறுகிய நோக்கத்தின் அடிப்படையிலேயே இடம்பெற்று வருவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

"பொதுத் தேர்தல் தினத்துக்கு முன்னதாகவே ஆனையிறவு முகாமை விடுதலைப் புலிகளிடமிருந்து மீளக் கைப்பற்றி விடுவோம்!" என்று பிரதம மந்திரி ரத்னசிறி விக்கிரமநாயக்க தனது தேர்தல் பிரசார பொதுக் கூட்டங்களில் கூறி வந்திருக்கின்றார். இதிலிருந்து தென்னிலங்கையில் போர் வெற்றியை எடுத்துக் காட்டி வாக்குகளைச் சேகரிக்கவே ஆளும் கட்சியினர் கருதுகின்றனர் என்று தோன்றுகின்றது. இருப்பினும், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைக்கும் தேர்தலுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று வட மாகாண இராணுவத் தளபதி அன்டன் விஜேந்திரா தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் பூரணமாகக் கொண்டு வருவதும் யாழ் குடாநாட்டில் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களை முறியடிப்பதுமே புதிய இராணுவ நடவடிக்கையின் ஒரே நோக்கமாகும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தென்மராட்சியில் இராணுவம் அதிநவீன ஆயுதங்களுடனும் புதிய படைபலத்துடனும் தங்கள் தாக்குதலை தொடங்கியுள்ளனது. இருப்பினும் விடுதலைப் புலிகளும் மூர்க்கத்தனமாக தங்கள் எதிர்த் தாக்குதல்களை தொடர்ந்து வருகின்றன. இதனால் அங்கு வாழ்ந்து வந்த மக்கள் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களுக்கும் சென்றுள்ளனர். இருப்பினும் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் அனைவருமே முழுமையாக வெளியேறியுள்ளனர் என்று சொல்வதறகில்லை. வெளியேறிய மக்களும் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாட வேண்டிய நிலைதான் ஏற்பட்டுள்ளது. வெளியேறியவர்கள் தங்கள் உடமைகள் அனைத்தையும் ஆங்காங்கே விட்டுச் சென்றுள்ளனர். அதுமட்டுமல்லாமல், வயதானவர்கள், நோயாளிகள் ஆகியோரையும் அதேயிடங்களில் விட்டுவிட்டே சென்றிருப்பார்கள்.

இராணுவத்தினரும், விடுதலைப் புலிகளும் எட்டத்திலிருந்தே ஏவும் கணைகளால் தாக்குதல்களைத் தொடர்வதால் எத்தனையோ உயிர்கள் மாண்டு போயிருக்கக் கூடும். வீடுகளும், பள்ளிக்கூடங்களும், கோயில்களும், தேவாலயங்களும், பொழியும் குண்டுகளால் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். ஆகவே போர் ஓயாமல் சேதங்களை மதிப்பிட முடியாது.

"போரை நிறுத்துங்கள்!" என்று பல தரப்பில் இருந்தும் கோரிக்கைகள் விடப்பட்டும் கூட இருதரப்பினரும் செவி சாய்க்காமல் தொடர்ந்து குண்டுகளை வீசி சர்வ நாசத்தை ஏற்படுத்திக் கொண்டு வருவதையே காணக் கூடியதாக இருக்கின்றது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட ஊடகவியலாளர்கள், தென்மராட்சியில் தாங்கள் கண்ட காட்சிகளை மிக பரிதாபகரமாக விமர்சிக்கின்றனர். படப் பிடிப்பாளர்கள் எடுத்து வந்துள்ள புகைப்படங்களும் அங்கு ஏற்பட்டுள்ள பேரழிவின் அவலத்தையே சித்தரிக்கின்றன.

இந்நிலையில் யாழ் மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை எவ்வாறு செலுத்தப் போகிறார்கள் என்ற வினாவே எல்லோருக்கும் எழுந்துள்ளது. ■

## திகைப்பைத் தரப்போகும் தேர்தல் முடிவுகள்!

**இ**லங்கையின் பதினோராவது பாராளுமன்றத்துக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான பொதுத் தேர்தல் முடிவுகள் எவருமே எதிர்பார்க்காத ஒரு திருப்பத்தை ஏற்படுத்தப் போகிறது என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

இம்முறை தேர்தலில் 29 அரசியல் கட்சிகளும் 99 சுயேச்சைக் குழுக்களும் களத்தில் குதித்துள்ளன. இதுவரைகாலமும் நடந்து முடிந்த தேர்தல்களில் இரு பெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஆட்சி பீடத்தை அலங்கரித்து வந்தன. இம்முறை இந்த இரு கட்சிகள் மீதும் பொதுமக்களுக்கு வெறுப்பே அதிகம் தலைதூக்கியிருக்கிறது. முற்போக்கு பிற்போக்கு என்று இரண்டு கட்சிகளுமே ஒரு தரப்பினரை மறு தரப்பினர் திட்டித் தீர்த்து வந்தபோதிலும் எவர் பதவியேற்றாலும் பழைய பாணியிலேயே நிர்வாகம் நடைபெற்று வந்திருக்கிறது. இதனால் பொதுமக்கள் இவையிரண்டையும் ஒதுக்கிவிட்டு மூன்றாவதான ஓரணியின் மீது தமது பார்வையைச் செலுத்தலாம். இருப்பினும் அந்த மூன்றாவது எதுவாக இருக்கலாம் என்பதை நிர்ணயிக்க வாக்காளப் பெருமக்களால் முடியாத நிலையேற்பட்டுள்ளது.

பல உதிரிக் கட்சிகள் தேர்தல் களத்தில் குதித்து, தாம் தான் இந்த நாட்டை நல்ல வழிக்கு இட்டுச் செல்ல இலாயக்குடையவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய உதிரிக்கட்சிகள் தாராளமாக வாக்குகளைப் பிரிப்பதற்கே உதவப் போகின்றன.

இவ்வாறு வாக்குகள் பல கோணங்களில் சிதறும் போது, உருப்படியாக எந்தக் கட்சிக்கும் கூடுதலான வாக்குகளைப் பெறக் கூடிய சூழ்நிலை ஏற்படப் போவதில்லை. தேர்தல் முடிவுகள் வெளியாகத் தொடங்கியதும் உதிரிக்கட்சிகள் தனித்தனி குழுக்களாகச் சேர்ந்து கூட்டணிகளை அமைத்து தத்தமக்கே ஆட்சி உரிமையை வழங்கும்படி ஜனாதிபதியைக் கேட்கப் போகின்றன.

இத்தகைய இக்கட்டான நிலைதான் புதிய பாராளுமன்றத்தில் தோன்றப் போகிறது என்று இந்த நாட்டில் அனுபவமுள்ள அரசியல் அவதானிகள் கூறி வருகின்றனர். நீதியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் அண்மையில் இதே கருத்தை அடிப்படையாகக் கொண்டே சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அடுத்து அரசாங்கத்தை அமைக்கப் போகும் எந்தக் கட்சியும் சிறுபான்மையினரின் ஆதரவை நாடிப் பெற்றேயாக என்று தெளிவாகக் காட்டியிருக்கிறார்.

## திருமலையில் தேர்தல் பிரசாரம்

## அமைதியாகவே இடம்பெறுகிறது?

**தி**ருகோணமலை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன. ஆயினும் இவை பண்பாகவும் அமைதியாகவும் நிதானத்துடன் நடைபெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றன.

பாக்கியதுரை தலைமையிலான சுயேச்சைக்குழுவும், சூரிய மூர்த்தி தலைமையிலான சுயேற்சைக்குழுவும் சோர்ந்து போன நிலைமையில் 'கடனே' என்று பிரசாரத்தில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியினரின் தமிழ் வேட்பாளர் ஒருவர் "என்னைப் பாராளுமன்றம் அனுப்புங்கள்!" என்று கோரி விடுத்த சுவரொட்டியில் விருப்பு வாக்கை வேறு வேட்பாளரின் பெயரைத் தெரிவித்து "அவருக்கே அளியுங்கள்!" என்று அப்பாவித்தனமாகப் பிரசாரம் செய்து வருகிறார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடும் ஒரு தமிழ் வேட்பாளர் பொது ஜன முன்னணிக்கு திருக்கோணமலை மாவட்டத்தில் மூன்று ஆசனங்கள் நிச்சயமாகக் கிடைக்கும்; அதனால் தானும் பாராளுமன்ற உறுப்பினராக வர வாய்ப்புண்டு என்று வெகுளித்தனமான துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட்டிருக்கிறார்.

ஈ.பி.டி.பி., ரெலோ ஆகிய கட்சிகள் தனி நபரை முதன்மைப் படுத்தாது, கட்சிச் சின்னத்தையே முதன்மைப் படுத்தி வாக்குக் கோரி வருகின்றன. வரதர் அணி சார்பிலான சுயேச்சைக் குழு, இளமை வேகத்தால் கடந்த காலங்களில் நிகழ்ந்த தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்து வாக்காளர்களை அணுகி வருகின்றது.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சி குமார் பொன்னம்பலத்தின் படத்தையும் அவரருகே தலைமைவேட்பாளரின் படத்தையும் ஒட்டி வாக்குகளைப் பெற முயற்சி செய்கிறது.

பேரினவாதக் கட்சிகளின் சுவரொட்டிகள் அதிக அளவில் வண்ணமாகக் காட்சியளிக்கின்றன. ரெலோ தலைவர் அடைக்கலநாதரின் படம் போட்ட சுவரொட்டிகளும் காணப்படுகின்றன. ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் 'கட் அவுட்'டுக்கள் நகரின் பல இடங்களில் காணப்படுகின்றன.

சுவரொட்டிகள் ஒட்டுகையில் கூட நேர்த்தி கடைப்பிடிக்கப்படுகிறது. ஒருவரது சுவரொட்டியை மறைக்காமல் மற்றவர் சுவரொட்டி ஒட்டுவதில் நேர்மை தெரிகிறது. 'தொடரும்' என்ற தலைப்பில் மூன்றாம் நான்காம் தரத்திலான துண்டுப்பிரசுரங்கள் அவ்வப்போது மர்மமான முறையில் வெளியாகி சுயேச்சைக்குழுக்களையும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக்கூட்டணி என்பவற்றையும் சாடி வெளிவருகின்ற போதிலும் மக்கள் இவற்றை கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

## யாழில் சங்கிலியன் படை!

## வாக்காளர் அட்டைகள் எரிப்பு!

**நா**டெங்கிலும் வாக்காளர் அட்டை விநியோகம் துரித கதியில் நடைபெற்று வருகின்றது. போர் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் யாழ் குடா நாட்டிலும் வாக்காளர் அட்டைகள் விநியோகம் துவங்கி விட்டது.

இருந்த போதிலும் வாக்காளர் அட்டை விநியோகத்திற்கு வேறு பல அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

குடியிருப்பாளர்களுக்கு வாக்காளர் அட்டைகளை வழங்கிக் கொண்டிருந்த போது, குறுக்கிட்ட 'சங்கிலியன் படை' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டவர்கள், தபாற்காரனின் கையிலிருந்த ஒரு தொகை வாக்காளர் அட்டைகளை பறித்தெடுத்து எரித்துவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற இன்னொரு சம்பவத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசுரங்களை மேற்படி சங்கிலியன் குழுவினரே பறித்தெடுத்துச் சென்றதோடு எச்சரிக்கை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பை அடுத்த வெலிக்கடைப் பகுதியில் வாக்காளர் அட்டை விநியோகத்தில் ஈடுபட்டிருந்த தபாற்காரரை வழிமறித்துத் தாக்கிய ஒரு குழுவினர், அவரைக் காயப்படுத்தியதோடு அவரிடமிருந்த வாக்காளர் அட்டைகளையும் பறித்துக் கொண்டு சென்றுள்ளனர். ◖

## புளொட் உறுப்பினர் சுட்டுக்கொலை!

## நிலக்கண்ணிவெடிக்கு இளைஞன் பலி!

**ம**ட்டக்களப்பு-வாழைச்சேனை, கல்மடுவில் முன்னாள் புளொட் உறுப்பினர் ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாலையா தேவராஜன் (24) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராகும். 23ம் திகதி மாலை 7.30 மணியளவில் வீட்டுக்கு வந்து கூப்பிட்ட ஏழு இளைஞர்கள், அவரை அவ்விடத்திலேயே சுட்டுவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை வவுனியா-செட்டிக்குளம் கிழக்கு பகுதியில் நிலக்கண்ணி வெடியில் அகப்பட்டுக் கடும் காயங்களுக்குள்ளாகியிருந்த சுப்பிரமணியம் செந்தில்நாதன் (24) என்ற இளைஞன் அம்பியூலன்ஸ் வண்டியில் எடுத்துச் செல்லப்படும்போது காலமானார். ■

## வடக்கு-கிழக்கில் பணியாற்றும் படையினருக்கு காணி வழங்கல்

**வ**டக்கு கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் வீடமைப்பு வசதிகளுக்காக அரசாங்கக் காணிகள் வழங்கப்பட வேண்டும் என்ற திட்டத்தை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க 1997ம் ஆண்டு கொண்டு வந்திருந்தார்.

இதன் பிரகாரம் மீகொடவத்த, யடகொலுவத்த, களுத்துறை, கொழும்பு ஆகிய பகுதிகளில் ஏற்கனவே 180 துண்டுக் காணிகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன.

மேலும், மகாவலி அபிவிருத்திப் பிரதேசம், அனுராதபுரம், குருநாகல், இரத்தினபுரி, புத்தளம் போன்ற பகுதிகளில் மேலும் காணித் துண்டுகள் வழங்கப்படவிருக்கின்றன. ■

## அமைதியைக்குலைக்கும் அடாவடித்தனங்கள்!

(கண்டி நிருபர்)

**மு**ஸ்லிம்கள் பெரும் அளவில் வாழும் பாத்ததும்பறைத் தொகுதியைச் சேர்ந்த மடவளை நகர் அரசியல்வாதிகளின் கெடுபிடிகளுக்கு தளமாக அமைந்துவிட்டதால், அப்பகுதியில் அமைதியை விரும்பும் மக்கள் அல்லோலகல்லோலப் பட்டுள்ளனர்.

மரண வீட்டுக்கு கண்டியில் இருந்து வாகனம் மூலமாக சென்ற கோஷ்டியினர் சிறிமல்வத்தைச் சந்தியில் குடிபோதையில் வந்து முஸ்லிம்களின் கடைகளுக்கு இழைத்த அட்டகாசத்தின் விளைவால் நகரில் ஏற்பட்ட முறுகல் நிலையால் அங்கு பதற்றமும் கடையடைப்பும் நிகழ்ந்துள்ளன.

இந்தச் சம்பவத்தினால் கடைகளுக்கும் வீடுகளுக்கும் சேதம் ஏற்பட்டன. தவறைப் புரிந்தவர்கள் கைதாகி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

இந்த காடைத்தனம் இடம் பெற்று ஒரு வாரம் கூட கழியவில்லை. கடந்த 20ம் திகதி இரு பிரதான அரசியல் கட்சி ஆதரவாளர்களுக்கு இடையே இடம் பெற்ற சுவரொட்டிச் சமாசாரத்தின் விளைவாக ஐ.தே.கட்சி வேட்பாளர் ஒருவருக்குரிய எல்ப் லொறி ஒன்று மடவளை தெல்தெனிய சந்தியில் தீக்கிரையானது.

இந்தச் சம்பவத்தினால் ஏற்பட்ட குரோதம் காரணமாக 21ம் திகதி நள்ளிரவு அதே சந்தியில் டயர் எரிப்பும் தாராளமாக இடம் பெற்றது.

அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் இந்த நகரில் இவ்வாறு இடம்பெறும் கெடுபிடிகளுக்கு நாம் எப்படி பலிக்கடாவாக இருக்க இயலும், என அப்பகுதி மக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றனர். அடிக்கடி இடம்பெறும் இந்தச் சம்பவங்கள் இறுதியில் இனக்கலவரத்துக்கு களம் அமைத்து விடுமோ எனவும் அஞ்சுகின்றனர்.

இதே வேளையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தையும் மத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் கெஹலிய ரம்புக்வெலயும் பாத்ததும்பறை தொகுதியின் இரு பெரும் அரசியல் கட்சிகளின் அமைப்பாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ○

## மிருக வதையைத் தடுக்க புதிய சட்டம் தேவை!

(கண்டி நிருபர்)

**ச**ட்ட விரோதமாக மாடுகள் அறுக்கும் முறையும் மிருகங்களுக்கு வதை கொடுக்கும் நடைமுறையும் ஒழிக்கப்படும் பொருட்டு இப்போதுள்ள சட்டதிட்டங்கள் புதுப்பிக்கப்பட வேண்டுமெனவும் இதனூடாக தண்டனை வழங்கும் விதிகளும் அதிகரிக்கப்படவேண்டு மெனவும் கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் சந்திரதாஸ நாணயக்கார வலியுறுத்தி யிருக்கிறார்.

கண்டியில் மல்வத்தை பீடத்தின் மக்நாயக்க தேரரிடம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

நீதியரசருடன் கால் நடை நட்பு அமைப்பின் தலைவர் எச்.ஜீ.பி.ஜயசேகர, திருவாளர்கள் லால் வீரசிங்க, பீ.எச்.பாலசந் திரா, எச்.ஸி.பெரேரா உட்பட பிரஸ்தாப அமைப்பின் வேறு உறுப்பினர்களும் மகா நாயக்கரை அன்னாரின் வாசஸ்தலத்தில் சந்தித்தனர்.

சட்ட விரோதமாக வாகனங்களில் நெருக்கமாக கால்நடைகள் அடைக்கப்பட்டு எடுத்துச் செல்லும் குற்றச் செயலுக்கு அபராதமாக 100/- ரூபா மாத்திரமே விதிக்கப்படுகின்றது. உலகில் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ள பௌத்த நாடாகிய இலங்கையில் சட்ட விரோதமாக மாடுகள் அறுப்பதும், கன்றுகளை ஈனக் கூடிய பசுக்களை வதை செய்து அறுப்பதும் வருடக் கணக்காக எம் நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்களாகும்.

இவ்வாறு கால் நடைகளை உணவுக்காக அறுத்தும் மேலதிகமாக பிறநாடுகளுக்கு இறைச்சியை ஏற்றுமதி செய்யும் நடைமுறையும் எந்த வகையிலும் இலங்கைக்கு ஏற்றதல்ல எனவும் இந்த அமைப்பின் போஷகரான நீதியரசர் திரு. நாணக்கார, மகாநாயக்கரை அன்னாரின் வாசஸ்தலத்தில் சந்தித்த வேளையில் வலியுறுத்தியுள்ளார். ■

## றவூப் ஹக்கீமுக்கு கண்டியில் ஆதரவு அதிகரிப்பு!

(கண்டி நிருபர்)

**எ**திர்வரும் பொதுத் தேர்தலில் அமைச்சர் அஷ்ரஃப்பின் அகால மறைவின் பின்னர் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் தேசிய ஐக்கிய முன்னணியின் முதன்மை வேட்பாளரான பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் றவூப் ஹக்கீமுக்கு ஆதரவு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

றவூப் ஹக்கீமின் சொந்த ஊர் கலகெதரையாகும். அவர் திருமணம் செய்த வகையில் அவரது மாமனாரும் கண்டியைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதியும் வெளிநாட்டு தூதுவராகக் கடமை புரிபவரும் ஆவார்.

கண்டி மாவட்டத்தில் 90,000 முஸ்லிம் வாக்காளர்கள் இருக்கின்றனர். எதிர்க்கட்சி சார்பில் இரு முக்கியஸ்தர்களும், ஆளும் கட்சி சார்பில் ஹக்கீமுடன் மற்றொருவரும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அமைச்சர் அஷ்ரஃப்பின் மறைவு இப்பகுதி முஸ்லிம்களிடையே குறிப்பாக அக்குறணை மடவளை, கலகெதரை, நாவலபிட்டி, கல்ஹின்னை, உடுநுவரை ஆகிய முஸ்லிம் ஊர்களில் இந்த மனமாற்றம் ஏற்பட்டுள்ளதால் றவூப் ஹக்கீமின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. ■

## அரச உடமைகளை அசிங்கப்படுத்தும் தேர்தல் பிரசுரங்கள்!

**அ**ரச அலுவலகங்களிலும், கட்டடங்களிலும், போக்குவரத்து பஸ்களிலும் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் சுவரொட்டிகள் கண்டபடி ஒட்டப்பட்டு அசிங்கமாகக் காட்சியளிக்கின்றன.

அரச பஸ்களை முழுவதுமாக மறைத்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதால் பஸ்களை அடையாளம் காண முடியாத நிலை தோன்றியுள்ளது. பஸ் நிலையங்கள், டிப்போக்கள் என்பன குப்பை தொட்டிகள் போன்று காட்சி தருகின்றன."

அத்துடன் பல அரச அலுவலகங்கள் அரச காரியாலங்கள் போன்றே அலுவல்கள் நடைபெறுகிறது. அரச வாகனங்கள், அலுவலகத் தளபாடங்கள், உபகரணங்கள் என்பனவும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பாவிக்கப்படுகின்றன என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. ■

மறைந்த எழுத்தாளர் செ.கதிர்காமநாதன் நினைவாக...

# கடல் கடந்து புலம் பெயராத இலங்கையில் வசிப்பவர்களுக்கான

## சிறுகதைப் போட்டி

ஒன்றினை ஃபிரான்ஸ் நாட்டிலுள்ள 'உயிர் நிழல்' அமைப்பு நடத்தவிருக்கிறது. இப்போட்டி யில் முதல் 3 இடங்களையும் பெறும் எழுத்தாளர்களுக்கு முறையே ரூபா 35 ஆயிரம், ரூ 25 ஆயிரம், ரூ 15 ஆயிரம் பரிசாக வழங்கப்படவிருக்கிறது. மேலும் சிறந்த 6 கதைகளுக்கு தலா ரூ 5 ஆயிரம் வழங்கப்படுகிறது.

**போட்டிக்கான விதிகள்:**

1. புலம் பெயராத தமிழ்மொழி பேசும் இலங்கையில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. சிறுகதைகள் முன்னர் பிரசுரிக்கப் படாதவையாக இருத்தல் வேண்டும்.
3. சிறுகதைகள் படைப்பாளிகளின் சொந்த ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு சிறுகதை மட்டுமே போட்டிக்காக அனுப்பி வைக்க முடியும்.
5. போட்டியாளர்கள் தமது சிறுகதை களுடன் அவர்களுடைய முழுப்பெயர், பிறந்த திகதி, தற்போதைய வதிவிட விப ரங்கள் ஆகியவற்றை அறியத்தர வேண்டும்.
6. சிறுகதைகள் அனைத்தும் 30 ஒக்டோபர் 2000க்கு முன்னர் கிடைக்கப் பெற வேண்டும்.

☆ மூவர் கொண்ட நடுவர் குழுவினால் சிறு கதைகள் பரிசீலிக்கப்பட்டு பரிசு தீர்மானிக் கப்படும்.

☆ தெரிவு செய்யப்படும் முதல் மூன்று சிறு கதைகளுக்கும் முறையே ரூபாய் 35,000, ரூபாய் 25 000, ரூபாய் 15 000 தலா வழங் கப்படும். மற்றும் ஆறு சிறு கதைகளுக்கு தலா ரூபாய் 5000 வழங்கப்படும்.


☆ முடிவுகள் 31.12.2000க்கு முன் அறிவிக் கப்படும்.

☆ பரிசுகள் இலங்கையில் வைத்து கையளிக் கப்படும்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

**Uyirnizhal**
**EXIL. 27 Rue Jean Moulin,**
**92400 Courbevoie,**
**France.**

# ஒலிம்பிக் திருவிழா




இரு நூறுக்கும் மேற்பட்ட நாடுகள் பங்குபற்றும் ஒலிம்பிக் போட்டிகள் சிட்னி நகரில் கோலாகலமாக நடந்து வருகின்றன. கிட்டத்தட்ட ஒரு குட்டி உலகமே அவுஸ்திரேலியா சென்று கூடியுள்ளது.

இந்தச் சூழலில் சிட்னி நகர மக்களுக்குப் போட்டிகள் தொடங்குவதற்கு முன்னரே, அவுஸ்திரேலிய அரசு, 'உங்கள் நகருக்கு வரும் விருந்தினர்களுக்கு நீங்கள் பலவிதங்களில் வரவேற்புக் கூறலாம்' என்று விளம்பரப்படுத்தியது.

அதற்காக ஒரு நீண்ட பட்டியலையும் வெளியிட்டது. அந்தப் பட்டியலில் என்ன இருந்தது என்பதற்குச் சில உதாரணங்கள் இவை:

- ★ புன்னகை செய்யுங்கள்.
- ★ மெதுவாகவும் தெளிவாகவும் பேசுங்கள்.
- ★ பல்வேறு ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நடைபெறும் இடங்களைச் சிபார்சு செய்யுங்கள்.
- ★ உங்கள் பூகோள அறிவைத் தூசி தட்டி வைத்துக் கொள்ளுங்கள்.
- ★ நல்ல ஹொட்டல்களாகச் சிபார்சு செய்யுங்கள்.
- ★ பிறநாடுகளின் பெருமைகளை அங்கீகரியுங்கள்.
- ★ பொறுமை தேவை.
- ★ புகையிரதங்களும் பஸ்களும் போகும் இடங்கள் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.
- ★ நாட்டுப் பற்றுக் கொண்ட அவுஸ்திரேலியராக இருங்கள்.
- ★ 'கங்காருகளா?' ட்ரொங்கா மிருகக் காட்சிசாலைக்குச் செல்ல வழி காட்டுங்கள்.
- ★ டாக்ஸி பிடிக்க உதவுங்கள்.
- ★ ஒலிம்பிக் முடிவுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளுங்கள்.
- ★ 'ஒலிம்பிக்ஸுக்குப் பிறகும் கொஞ்ச நாள் தங்கியிருப்பீர்கள் அல்லவா?' என்று கேளுங்கள்.
- ★ தாராள மனம் இருக்கட்டும்.
- ★ உங்கள் வாகனங்களில் பிறர் உட்கார்ந்து கொள்ள உதவுங்கள்.
- ★ சிறிய நாட்டினருக்கும் பெரிதான உற்சாக வரவேற்புக் கொடுங்கள்.
- ★ ஒவ்வொரு நொடியையும் ஆனந்தமாக அனுபவியுங்கள்.

நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பான சில தகவல்கள்:

### ஒலிம்பிக் கிராமத்தில் விபத்து

ஒலிம்பிக் கிராமத்தில், இங்கிலாந்து தடகள வீரர்கள் சென்ற பஸ், நின்று கொண்டிருந்த இன்னொரு பஸ்ஸுடன் மோதியது. இதில் இங்கிலாந்து வீரர் ஒருவர் காயமடைந்தார்.

### கைதிக்கு அழைப்பு

சர்வதேச ஒலிம்பிக் செயற்குழு உறுப்பினர் முகம்மட் ஹஸன் தற்போது இந்தோனேசியா சிறையில் இருக்கிறார். இந்தோனேசியாவில் சுகார்ட்டோ ஆட்சியில் பலகோடி ரூபாய் ஊழல் தொடர்பாக இவர் சிறையில் உள்ளார். இவரை ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளுமாறு, சர்வதேச ஒலிம்பிக் செயற்குழுத் தலைவர், தற்போதைய இந்தோனேசிய ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பினார்.



### இம்முறை அதிகம்

ஒலிம்பிக் போட்டிகள் உலகம் முழுவதும் 370 கோடிப் பேர் தொலைக்காட்சி மூலம் பார்ப்பார்கள் என்று சர்வதேச ஒலிம்பிக் செயற்குழு நிர்வாகி மதிப்பிட்டுள்ளார். கடந்த 1996ம் ஆண்டு நடந்த அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியைப் பார்த்தவர்களை விட இம்முறை 70 கோடி பேர் அதிகமாகும். சிட்னி ஒலிம்பிக் போட்டி 220 நாடுகளில் நேரடியாக ஒளிபரப்பாகிறது.

### டிக்கெட் விற்பனையில் சாதனை

ஒலிம்பிக் போட்டிக்கான டிக்கெட்டுக்கள் விற்பனையில் புதிய சாதனை ஒன்று படைக்கப்பட்டுள்ளது. கடந்த 1996ம் ஆண்டு அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் 82.3 சதவீத டிக்கெட்டுக்களே விற்பனையாகின. ஆனால் இம்முறை ஒலிம்பிக் போட்டி தொடங்கும் முன்னரே 80 சதவீத டிக்கெட்டுக்கள் விற்றுத் தீர்ந்துவிட்டன.

### உணவு எடுத்துச் செல்ல எதிர்ப்பு?

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் கிராமத்தில் உள்ள பெரும்பாலான உணவு விடுதிகளை, ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'கொடக்சோ' என்ற கம்பனி நடத்தி வருகிறது. அனால் அந்த விடுதியின் உணவுப் பொருட்களின் விலை அதிகம் என்று பார்வையாளர்கள் வீட்டிலிருந்தே உணவுகளை எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். இதனால் தங்கள் விற்பனை பாதிக்கும் என்று, 'கொடக்சோ' நிறுவனம் உணவுப் பொருட்களை ஒலிம்பிக் கிராமத்திற்குள் கொண்டு செல்லத் தடை விதிக்கும்படி ஒலிம்பிக் போட்டி அமைப்பாளர்களை வற்புறுத்தியது.

### டிக்கெட்டுக்கள் மாயம்

ஒலிம்பிக் உதைபந்தாட்ட போட்டியும் நடைபெறுகின்றது. இப்போட்டிகளுக்கான டிக்கெட்டுக்களைச் சிலர் தபால் மூலமே பெற்றுக் கொள்ள விண்ணப்பித்திருந்தனர். டிக்கெட்டுக்களும் அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் அவை மாயமாகி விட்டன. இதனால் டிக்கெட் கிடைக்காத இரசிகர்கள் தங்களது அடையாள அட்டையைக் காட்டி போட்டிகளைப் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜேர்மனியில் நடைபெறும் புத்தகத்திருவிழா

புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் 23 நூல்களை வெளியிடும் புத்தகத்திருவிழா ஜெர்மன்-ஸ்டெட்டிட்னர் நகரிலுள்ள டோட்மண்ட் ஹோர்ட், கோதே உள்ளக விளையாட்டரங்கில் செப்டம்பர் 30ம் திகதி பிற்பகல் நடைபெறுகிறது.

சென்னை மாநகரிலுள்ள மணிமேகலைப் பிரசுரத்தின் இயக்குநரான திரு.ரவி தமிழ்வாணன் அவர்கள், ஜெர்மனியிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் வாழும் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் அனுசரணையுடன் இப்புத்தகத்திருவிழாவை நடத்தவிருக்கின்றார்.

தமிழ்வாணன் அரங்கில் நடைபெறும் இத்திருவிழாவில் முத்தமிழ் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. இலண்டனிலிருந்து வெளியாகும் 'மேகம்' ஆசிரியர் டாக்டர் க.இந்திரகுமார் சிறப்பு விருந்தினராக இவ்விழாவில் பங்கேற்கிறார்.

ஈழவரலாற்றை எடுத்துரைக்கும் நூல்கள் சிறுகதை, கவிதை, கட்டுரை, பக்திச்சுவை தரும் ஆக்கங்கள் ஆகிய பலதுறைகளையும் சார்ந்த 23 நூல்களும் அன்றைய தினம் வெளியிடப்படவுள்ளன.

# படமெடுத்தாடும் பாம்புக் காய்



படமும் அதற்கான விளக்கமும் விசித்திரமாக இருக்கிறதே என்று வாசகர்கள் முணுமுணுக்கிறது கேட்கிறது. படத்தில் நீங்கள் காண்பது படமெடுத்தாடும் பாம்புபோல் தெரிகிறதல்லவா? இது உண்மையில் படமெடுத்தாடும் பாம்பல்ல. படமெடுத்தாடும் முருங்கைக்காய்.

இந்த விசித்திரமான முருங்கைக்காய், அம்பாறை மேல் நீதிமன்ற மொழி பெயர்ப்பாளர் எல்.டீ.அல்விஸ் அவர்களுடைய பாண்டிருப்பிலுள்ள வீட்டில் முருங்கை மரத்திலுள்ள காய் படமெடுத்தாடும் பாம்பு போன்ற உருவத்தில் உருவாகி இருக்கிறது. அந்தப் பாம்புக் காயைப் பறித்து நிலத்தில் வைத்து இந்தப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வேடிக்கைக்காயை மக்கள் திரளாக வந்து பார்த்துச் செல்லுகின்றனர்.

படமும் தகவலும் ஏ.எல்.எம்.முக்தார்-சாய்ந்த மருது.

விளம்பரப் பகுதி


**மனோதத்துவ வைத்தியம்**

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் செப்டெம்பர் 24 முதல் 30 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.

T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் ஒக்டோபர் 07, 08 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் திகதிகள் அறிவிக்கப்படும்.ள**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNIINN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM

NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



உலகப் புகழ்பெற்ற

**எக்ஸ் ஒயில்**

TRADE MARK

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984



"உங்களது பெரிய பிரச்சனை, நடுத்தர பிரச்சனை சின்னப் பிரச்சனை. நம்பிக்கையாக உங்களுக்கு செய்து தரப்படும். 100% உத்தரவாதம். உங்கள் பிரச்சனைக்குரிய விடை உடனடியாக. உங்கள் பிரச்சனை எதுவாகினும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் செய்து தரப்படும். பெண் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, வாழ்க்கையில் வெற்றி, பணக்காரனாக வேண்டுமா? தொடர்பு கொள்ளுங்கள்."

தொடர்பு கொள்ளும்இடம்:

விலாசம் :

**PR.DANSOKHO ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.**
**தொலைபேசி-0142552036**



**வீடு உடன் விற்பனைக்கு**

சாய்ந்தமருது கல்யாண வீதியில் (கல்முனை சாஹிரா கல்லூரிக்கு அருகில்) 2 தொலைபேசிகள், சகல வசதிகளும் கொண்ட 10 பேர்ச் வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 067-22507, 21548, 21133





**கலை அலங்கார வகுப்புக்கள்**

- ★ சிகை அலங்காரம்
- ★ அழகுக்கலை
- ★ மணப்பெண் அலங்காரம்
- ★ 4 மாத கற்கைநெறி

Facial Bleaching முடிவெட்டுதல் போன்றவைகளையும் செய்து கொள்ள முடியும்.

வகுப்புக்கள் வார, வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.


**ஆரம்பம்: விரைவில்**

சான்றிதழ்கள் வழங்கப்படும்

**FASNAZ BEAUTY SALON**

142, டபிள்யூ, ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06. தொலைபேசி: 589457





**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும்இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831






**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவா "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

# சொல்வாக்குக்கு இல்லாத செல்வாக்கு

## யாருக்கு வெற்றி வாய்ப்பு?

11வது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலுக்கு நேரம் நெருங்கிவிட்ட நிலை.

இந்தப் பொதுத் தேர்தலின் பெறுபேறுகளிலேயே இந்த நாட்டில் கொழுந்துவிட்டெரியும் இனப்பிரச்சனைக்கு இலங்கை அரசாங்கத்தால் ஏதாவது அரசியல் தீர்வை முன்வைக்க முடியுமா முடியாத என்ற விடை தங்கியுள்ளது.

இந்தப் பாராளுமன்றத்தின் காலத்தில் பேசிப் பேசி கடைசியாக அதன் ஆயுட்காலம் முடியும் தருணத்தில்தான் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் தீர்வு யோசனைகள் வேடிக்கைப் பொருளாக ஆக்கப்பட்டு பின்வாங்கப்பட்டது.

அந்த ஆலோசனைகளை அடுத்த பாராளுமன்றத்தில் விவாதிக்கப் போவதாக ஆளும் கட்சி கூறுகிறது. அப்படியாக அங்கு ஓர் அரசியல் தீர்வு விவாதிக்கப்படுமேயானால் அதில் தமிழ்த் தரப்பின் பங்கு, பலம் என்பன முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையும். அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டமும் தேர்தல் அவசரத்திலும், புலிகளின் ஆனையிறவுத் தாக்குதலையடுத்து யாழ்ப்பாணம் பறிபோய்விடக்கூடிய நிலையில் வெளிநாடுகளின் அவசர உதவிவேண்டிப் பரிதவித்த வேளையிலும் அதற்காக வெளிநாடுகளைத் திருப்தி செய்ய வேண்டிய ஒரு கட்டாயக் கட்டத்திலும் முன்வைக்கப்பட்ட திட்ட.மாகவே அமைந்திருந்தது. அதனால் அத் திட்டத்தில் தமிழ்த் தரப்புடனான நிதானமான பரிசீலனை நிகழ்ந்திருக்கவில்லை. சொல்லப் போனால் முஸ்லிம் தரப்பினை வலியுறுத்திய அமைச்சர் அஷ்ரப்புடன் கண்டுகொண்ட இணக்கப்பாடுடளவுகூட தமிழ்த் தரப்பினருடன் காணப்படவில்லை. இவ்வினப்பிரச்சனைக்கான தீர்வு என்பதில் தமிழ்த் தரப்பே பிரதான பாத்திரவாளிகளாக இருந்தும் அவர்கள் குறித்து அத்துனை முக்கியத்துவம் காட்டப்படவில்லை. இதற்குக் காரணம் பாராளுமன்றத்தில் இருந்த தமிழ்த் தரப்புகளுக்கு, முஸ்லிம் தரப்பினருக்கு இருந்த அளவுகூட பேரம்பேசும் பலம் இருக்கவில்லை.

எனவே எதிர்வரும் பாராளுமன்றத்தில் தீர்வுத் திட்டத்தில் ஏதாவது முன்னேற்றகரமான மாற்றங்களை முன்தள்ள வேண்டுமானால் அதற்குரிய பேரம் பேசும் பலத்தை தமிழ்த் தரப்பு ஈட்டிக் கொள்வது அவசியமானதாக இருக்கும்.

ஆனால் அத்தகைய ஆளுமையை வகிக்கக்கூடிய தன்மையை தமிழ்த் தரப்பில் யாரால் வெளிக்காட்ட முடியும் என்பதைத் தீர்மானிப்பதே இத் தேர்தலில் தமிழ மக்கள் கருத்துக் கெடுக்கும் பிரதான விடயமாக இருக்கும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் தமது ஆளுமையற்ற நொடிந்த தோற்றப்பாட்டையே கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தியிருந்தனர். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக யாழ். மாநகரசபையை கூட்டணியினர் நடத்திய விதம் விளங்குகிறது.

கூட்டணி வெறுமனே குறைகூறும் கடசியாக மட்டுமே இதுவரை அரசியல் நடத்தி வந்தது. அதனால் எதையும் பொறுப்பேற்று நடத்த முடியவில்லை. அப்படியிருக்க முதற்தடவையாக யாழ். மாநகரசபை நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்தது.

அதைப் பொறுப்பெடுக்கும்போதே அது எத்தகைய பெரிய சவால் என்பது கூட்டணிக்குப் புரிந்திருக்கும். ஏனெனில் புலிகள் அவ் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை எதிர்த்ததோடு அதை நிர்வகிக்க முனைவது தமக்குச் சவாலாக ஒரு நிர்வாகத்தை நடத்துவதாகவே கருதியிருந்தனர்.

ஆனால் கூட்டணியோ, எப்படியாவது யாழ். மாநகரசபையைக் கைப்பற்றிக் கொண்டால் தம்மைத் தமிழ் மக்களின் தலையாய பிரதிநிதியாக விளம்பிக் கொள்ளலாம் என்ற குறிக்கோளுடன் அத்தேர்தலில் குதித்து, முன்னைய காலத்தில் இருந்த செல்வாக்குகளின் எச்ச சொச்சத்தினால் அச் சபையைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆனால் அவர்களுக்கு அதனைக் கைப்பற்றுவதில் இருந்த அக்கறை அதை நிர்வகிப்பதில் இருக்கவில்லை. உண்மையில் அதை நிர்வகிப்பது குறித்து அவர்களுக்கு எந்த சிரத்தையும் இருக்கவில்லை. வெறுமனே அதன் தலைமைப் பதவியைத் தக்கவைத்துக்கொண்டு சபையைக் கிடப்பில் போட்டுவைத்தாலும் கவலையில்லை என்ற எண்ணமே அவர்களுக்கு இருந்தது.

அவ்வாறு இருந்துவிட்டால் வெளியுலகுக்கு தமக்குத்தான் யாழ் மக்களின் செல்வாக்கு உள்ளதாகக் காட்டிக்கொள்ளவும் முடியும். அதேவேளை தாமும் ஒரு தப்பித்தல் நாடகத்தை நடத்தியபடி காலம் கடத்திக் கொண்டிருக்கவும் முடியும் என்ற அரசியல் சூட்சுமத்தை அவர்கள் புரிந்திருந்தனர்.

எவ்வாறெனில், இந்தச் சபையை நிர்வகிக்க முடியாமைக்கு அரசாங்கத்திடம் புலிகளின் அச்சுறுத்தலைக் காரணமாகக் காட்டிக் கொண்டு, அதேவேளை வெளியே மக்களிடம் அரசாங்கம் எந்த உதவியும் செய்யவில்லை என்று கூறியபடி கையை விரிக்கவும் முடியும்.

இவ்வாறு இருந்தபோதும் அது விரும்ப முடியாத சவால்களை எதிர்கொள்ளவே நேர்ந்தது. உண்மையில், எதிர் கொண்டது என்று கூறுவதற்குப் பதில் சவால்களின் முன்னால் அது நிறுத்திவைக்கப்பட்டது என்பதே பொருந்தும். ஆம் புலிகள் அதன் யாழ். மேயர்களை அடுத்தடுத்து படுகொலை செய்தனர்.

அப்போதும் அதை ஒரு சவாலாகக் கூட உணர்ந்ததாக கூட்டணியினர் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. முதலாவது யாழ். மேயர் சரோஜினி சுட்டுக் கொல்லப்பட்ட போது, அவர்கள் அப்பாவித்தனமாகப் பாவனை செய்தபடி 'நாம் என்ன கெடுதல் செய்தோம் என்று இப்படிச் செய்தார்களெனப் புரியவில்லை' என்று கூறி விழித்தார்கள்.

ஆனால் உண்மையில் கூட்டணியினருக்கு மிக நன்றாகவே தெரியும். யாழ்.மாநகர சபையை நிர்வகிக்க முனைவது புலிகளுக்கு மாற்று நிர்வாகமொன்றை நிகழ்த்துவதாகவே அமையும் என்பது.

அப்படியான ஒரு நிர்வாகத்தைப் பொறுப்பெடுப்பதானால் புலிகளை எதிர்கொள்ளவும் திராணி இருக்கவேண்டுமென்பது வெளிப்படையான உண்மை. இதில் புலிகளை ஏமாற்றி, நாம் ஒரு பாவமும் செய்யவில்லை என்று காட்ட விளைவது சிறுபிள்ளைத்தனமானதே. ஆனால் கூட்டணியினர் சிறுபிள்ளைகளல்லர். அவர்கள் தம்மைச் சிறுபிள்ளைகளாக முகபாவம் செய்துகொள்வது தாம் தெரிந்தே எடுத்த இந்தச் சவாலை முகம் கொடுக்க வேண்டிய அவசியத்திலிருந்து நழுவி விடுவதற்கேயாகும்.

உண்மையில் கூட்டணியினருக்கு தாம் எடுத்த தீர்மானம் சரி என்பதில் உறுதிப்பாடிருந்தால் தமக்கு எதிராக புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்களிடம் தமது கருத்தை வலியுறுத்தியிருக்க வேண்டும். அத்தோடு தாம் பொறுப்பெடுத்த மாநகர சபை நிர்வாகத்தை, என்ன இடர்வந்தாலும் தொடர்ந்து நிர்வகித்து தம்மால் சாதிக்க முனைந்தவற்றைச் சாதித்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறன்றி கூட்டணி பின்வாங்கும் போக்கையே கடைப்பிடித்தது.

அதில் குறிப்பாக இப்போது பாராளுமன்ற ஆசனத்துக்காக யாழ்ப்பாணத்தில் கூட்டணிப் பட்டியலைத் தலைமைதாங்கிப் போட்டியிடும் ஆனந்தசங்கரி நடந்துகொண்ட விதம் தான் வேடிக்கையானது. யாழ். மேயர் சரோஜினி புலிகளால் படுகொலை செய்யப்பட்டதும், அவருக்கு நிகழ்த்திய ஈமைக் கிரியையின் போது, ஆனந்தசங்கரி, கூட்டணி கொலை மிரட்டல்களுக்குப் பயந்து விடப்போவதில்லையென மிக உணர்ச்சிகரமாக வீறாப்பாக உரையாற்றினார். அவ்வுரையைக் கேட்ட சில பத்திரிகையாளர்கள் அவரிடம் சுடச்சுடப் பேட்டிகண்டபோது, அடுத்த மேயராக நிற்க உங்களில் யார் தயாராக உள்ளார்கள் என்று கேட்டனர். அதற்கு அவர் "யாரும் வராவிட்டால் நானாவது அப் பதவியை ஏற்று நடத்துவேன்!" என அன்றைய உற்சாகத்தில் வீறாப் புரைத்துவிட்டார்.

இதனை அப்படியே பத்திரிகைகள் பிரசுரித்து விட்டன. பத்திரிகையில் தான் கூறிய வீறாப்பு வெளிவந்துவிட்டதைக் கண்டதும் தான் தான் வில்லங்கத்தில் மாட்டிவிடப் போகிறாரெனப் பீத்திக்கொண்டு சம்பந்தப்பட்ட பத்திரிகைகளை வைதார். தான், யாரையாவது அப் பதவியை ஏற்கவைக்க உற்சாகப் படுத்துவதற்குச் சொன்ன வாசகத்தை இவர்கள் பத்திரிகையில் போட்டுவிட்டார்கள். தனக்கு அப் பதவியை ஏற்கும் எண்ணம் சிறிதும் இல்லை. இவர்கள் என்னை வீணாக மரண ஆபத்துள் தள்ள முனைகிறார்கள். என்று அப்பத்திரிகைகள் மீது சீறினார்.

அதேபோலவே, அவர் அம் மேயர் பதவியை ஏற்கத் துணியவில்லை. மாறாக எங்கேயோ இருந்த சிவபாலனை அப் பதவிக்கான பலிக்கடாவாகத் தள்ளி, இறுதியில் அவரையும் புலிகளின் குறிக்கு இலக்காகிப் பலியாகக் காரணமாயினார்.

அதன்பின்னாவது தான் கூறிய அந்த வாக்குறுதிக்கேற்ப ஆனந்தசங்கரி நடந்து கொள்ளவில்லை. "யாரும் முன்வராவிட்டால் நானாவது மேயர் பதவியை ஏற்பேன்!" எனச் சூளுரைத்த ஆனந்த சங்கரி, வெற்றிடமாகி விட்டிருந்த யாழ். மேயர் பதவியை எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

இத்தகைய தப்பிக்கும் குள்ளத்தனம் ஆனந்தசங்கரிக்கு மட்டுமல்ல, கூட்டணியின் தலைவர்கள் பலருக்கும் இருந்துவருகிறது. இப்போது பொதுத்தேர்தல் வந்ததும் வாக்குகளுக்காக யாழ்ப்பாணம் சென்றுள்ள மற்றைய முன்னணித் தலைவர் மாவை சேனாதிராஜா கூட இப்போது யாழ். மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறாரென்றால் ஏன் அவரால் யாழ். மேயர் பொறுப்பை ஏற்க முடியாமல் போனது என்பதற்கு பதில்கூற மாட்டாதவராகவே இருக்கிறார்.

ஒன்றில் மாநகரசபையைப் பொறுப்பேற்றது பிழையெனவும் தம்மால் அதை நிர்வகிக்க முடியாதெனவும் அவர் ஒத்துக் கொண்டிருக்க வேண்டும். அல்லது அம்முடிவு சரியானதெனவும் தமக்கு நிர்வகிக்க முடியுமெனவும் அவர் கருதினால் யாழ். மக்களுக்காக அவர் தானே முன்வந்து அப் பதவியைப் பொறுப்பேற்றிருக்க வேண்டும்.

ஆனால் அவரோ, யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவராக இருந்துகொண்டும் இதனை ஏற்க முன்வராது தான் தப்பித்துக்கொள்ளவே முனைந்தார். அப்படி இப் பதவியை ஏற்கத் திராணியற்றவராகப் பின்னடித்துவிட்ட அவர் நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டதையடுத்து அம்பாறையில் வெற்றிடமான பாராளுமன்ற ஆசனத்தை மட்டும் அடுத்த கேள்வியின்றி ஏற்றுக்கொண்டார். ஆகமொத்தத்தில் தான் சார்ந்த யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பிரச்சனைக்கு முகம்கொடுக்க முடியாதவர் அம்பாறையின் பொறுப்பை எப்படி ஏற்க முனைந்தார் என்ற கேள்விக்கும் உரியவரானார்.

அம்பாறையின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொண்டாலும் அவர் அம்பாறையை அம்போவென விட்டுவிட்டு அரசாங்கத்திடம் பின்கதவால் பெற்றுக் கொண்ட சிராவஸ்தி வதிவிடத்திலேயே முடங்கிக் கொண்டார்.

இவர்களைப் பொறுத்தவரை பாராளுமன்றப் பதவிகள் பாதுகாப்பான உத்தியோகங்கள். ஏனெனில் அதை வகித்துக் கொண்டால் தமிழ்ப் பகுதிகளுக்குத் தலைகாட்டாமல் கொழும்பிலேயே பாதுகாப்பாக இருந்துவிடலாம். ஆனால் மாநகரசபை போன்ற நேரடி நிர்வாக வேலைகளில் இறங்கினால் யாழ்ப்பாணத்தில் நின்று செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். எனவே அதைப் புத்திசாலித்தனமாகத் தட்டிக் கழித்துவிட்டு பாராளுமன்றத்தைப் பிடித்துக் கொள்வோமெனவே எண்ணமிடுகிறார்கள். அதற்கு தேர்தல் காலத்தில் மட்டுமே கொஞ்சம் 'றிஸ்க்' எடுத்து மக்களிடம் செல்ல வேண்டும். அதை ஒருவாறு சமாளித்துவிட்டால் பின்னர் பிரச்சனையில்லையென நினைக்கிறார்கள்.

இத்தகைய மனோபாவத்தால் அவர்களால் ஒரு ஆளுமைகொண்ட தலைமையாக விளங்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி திருகோணமலையிலும் கூட்டணி இத்தகைய பின்வாங்கிய போக்கையே கடைப்பிடித்தது.

அதன் தற்போதைய தலைமைப் பீடத்தை ஏற்றிருக்கும் சம்பந்தன் திருகோணமலையில் எந்தவொரு ஆணித்தரமான திட்டத்தையும் செயற்படுத்தவில்லை. அத்தோடு அம் மக்களது பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கவும் இல்லை. மூதூர் எம்.பி. தங்கத்துரையைப் புலிகள் படுகொலை செய்ததன் விளைவாக அவ் வெற்றிடத்தை நிரப்பி எம்.பி. ஆகிக் கொண்டபோதிலும் அவர் திருகோணமலை மக்களுக்குச் சேவைசெய்ய முன்வராது தனது பதவிக்காலத்தின் பெரும்பகுதியை பாராளுமன்ற வாசிகசாலையிலேயே கழித்து வந்தார்.

தேர்தல் வந்துவிட்டதும் தான் உசாராகிக்கொண்ட சம்பந்தன், திருகோணமலை மக்களை இறுதிநேரத்திலாவது ஏதாவது வகையில் திருப்திப்படுத்த எத்தனித்து, அமைச்சர் அஷ்ரப்பின் தயவை நாடி, ஒருசில துறைமுக வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க விளைந்தார். இப்படி இறுதி நேரத்தில் யாரையாவது பிடித்து எதையாவது செய்து கொடுத்துவிட்டால் திருப்தியடைந்து விடும் மடத்தனமான மக்கள் கூட்டமாக அவர் தமது மக்களைக் கணித்து வைத்திருப்பது வேதனையானது. என்றாலும் அதுகூட அவருக்குப் பயனளிக்கப் போவதில்லை. ஏனெனில் இவ்வாறு அவர் திருகோணமலையிலுள்ள வேலையில்லாதவர்கள் எல்லோருக்கும் நிவாரணம் தர முடியாது. விரல்விட்டு எண்ணக்கூடிய சொற்ப எண்ணிக்கையானவர்களுக்கே அவரது இந்த உத்தி பலிக்கும்.

அதேவேளை, திருகோணமலையின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்புணர்வை அவர் தவறவிட்டுவிட்டார். திருகோணமலையில் தமிழ்க்கட்சிகள் யாவும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டால் வாக்குகளைச் சிதறடிக்காமல் அங்கு வரக்கூடிய பிரதிநிதித்துவங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

ஆனால், அதற்கு கூட்டணி ஒத்துவரவில்லை. இதற்குப் பிரதான காரணம் சம்பந்தரின் சுயநல சிந்தனையே. ஏனெனில் அவர் இம்முறை தேசியப் பட்டியலில்தான் போட்டியிடுகிறார். தேசியப் பட்டியலில், தான் தெரிவாக வேண்டுமென்றால் நாடு பூராகவும் கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் தொகையே அவசியமாகும். ஆனால் திருகோணமலை, அம்பாறை ஆகிய பகுதிகளின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்ற வேண்டி அவ்விடங்களில் பொதுச் சின்னத்தில் போட்டியிட உடன்பட்டால், அங்கு விழும் வாக்குகள் கட்சியின் மொத்த வாக்குகளில் சேர மாட்டாது. அதனால் தேசியப் பட்டியலில் தான் தெரிவாவது உறுதியற்றதாகிவிடக் கூடும். எனவே தான் தெரிவாவதில் எந்தத் தடங்கலும் வந்துவிடக்கூடாது என்பதற்காக இவ்விரு பிரதேசங்களிலும் தமிழர் பிரதிநிதித்துவங்களுக்கு விளையக்கூடிய ஆபத்தையும் அவர் பொருட்படுத்தவில்லை.

எனினும் அவரது துரதிஷ்டமாக அம்பாறையில் கூட்டணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதனால் இப்போது அம்பாறைக்கான பிரதிநிதித்துவத்தை மட்டுமன்றி, தேசியப் பட்டியலுக்கு சம்பந்தர் மனக்கோட்டை கட்டியிருந்த அம்பாறையின் வாக்குகளும் கூட்டணியால் கோட்டை விடப்பட்டு விட்டது.

கூட்டணி தன்னைத் தக்கவைத்துக் கொண்டுள்ள ஒரேயிடம் மட்டக்களப்புதான். அதிலும் போன தடவை ஈட்டிய அளவு ஐந்து பிரதிநிதிகளை இம்முறை கூட்டணி ஈட்டிக் கொள்ளுமா? என்பது கேள்விக்கிடமாகியுள்ளது.

மட்டக்களப்பில் கூட்டணியின் அரசியல் புலிகள் சார்புத் தன்மையை முன்னிறுத்தியே அமைந்துள்ளது. ஆனால் தற்போது புலிகள் தாம் இத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்கப் போவதில்லையென வெளிப்படையாகத் தெரிவித்து விட்டார்கள். அதனால் புலிகளின் ஆசீர்வாதம் தமக்கே உள்ளதென்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி தேர்தலில் வெல்லும் உத்தி மட்டக்களப்புக் கூட்டணிக்கு அதிகம் பலிக்கப் போவதில்லை. மேலும், இப்போது அகில இலங்கை தமிழ்க்காங்கிரசும் தமக்கே புலிகளின் ஆதரவு உண்டு என்று உரிமைகோர முன்னிற்கிறார்கள். இதனால் இவ்விரு முகாம்களுக்கும் பங்குப் பிரச்சனை தோன்றியுள்ளபோதும் புலிகள் அந்தப் பங்கை எவருக்குமே கொடுக்க முன்வரப் போவதில்லை. தமது முதுகில் குதிரையோடி இவர்கள் சொந்தத் தேர்தல் லாபங்களை ஈட்டிக் கொள்ள முனைகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டதாலேயே புலிகள் தாம் யாரையும் ஆதரிக்கவில்லை என அறிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் மட்டக்களப்பில் தேர்தலில் வெல்வதானால் அது போட்டியிடும் வேட்பாளரைப் பொறுத்ததாகவே அமைகிறது. கூட்டணியில் யோசப் பரராசசிங்கத்துக்கு அந்தச் செல்வாக்கு உண்டு. ஆனால் ஏனைய வேட்பாளர்களுக்கு எந்தளவு தூரம் அந்தத் தன்மை உள்ளதென்பது நிச்சயமானதல்ல.

இத்தேர்தலில் கூட்டணி நம்பிக்கை வைத்திருப்பது பழைய வாக்கு வங்கியில் தான். இந்த வாக்கு வங்கியானது முன்னர் கூட்டணியினால் தான் விடிவுகாலம் கிடைக்கப் போகிறது என்று தமிழ்மக்கள் நம்பிக்கை வைத்திருந்த காலத்தில் சேகரித்துக் கொண்ட செல்வாக்காகும். அதன் எச்சசொச்சங்கள் தந்த பெறுபேறாகவே யாழ். மாநகரசபையைக் கூட்டணி வென்றது. ஆனால் அதிலும்கூட கூட்டணிக்கு விழுந்த வாக்குகளைவிட ஏனைய கட்சிகளுக்கு விழுந்த மொத்த வாக்குகளே அதிகமானதாகவும், கூட்டணி உறுப்பினர்களை விட ஏனைய கட்சியினரே மாநகர சபையில் பெரும்பான்மையினராகவும் இருக்கக் காணப்பட்டது. அந்த வாக்குகளாலும் எவ்விதப் பலனுமில்லையென்பதை கூட்டணி மாநகரசபையை நடத்த இயலாது நொடிந்து போனமை தமிழ் மக்களுக்கு உணர்த்திவிட்ட நிலையில் மீண்டும் அப் பழைய வாக்கு வங்கி இத் தேர்தலில் கூட்டணிக்குக் கைகொடுக்குமென எதிர்பார்க்க முடியாது.

எனவே இத் தேர்தலில் தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரை ஆளுமைமிக்க பாத்திரத்தை கூட்டணி வகிக்கப் போவதில்லை என்ற நிலையில் தமிழ்தரப்புக்கான வெற்றி வாய்ப்பு யாருக்கு என்ற கேள்வி எதிர்பார்ப்புடன் எழுந்துள்ளது.

தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளிடையே கூட்டணி தளர்ந்துபோகும் நிலையில் வெற்றிவாய்பபைத் தழுவக்கூடிய வல்லமை தற்போது ஈ.பி.டி.பி.யிடம்தான் காணப்படுகிறது. ஆனால் அது ஈ.பி.டி.பி.க்கும் அத்துனை சுலபமானதல்ல, யாழ்ப்பாணத்தில் 10 உள்ளூராட்சி சபைகளைத் தமது கையில் வைத்திருந்து, புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டபோதிலும் தாக்குப்பிடித்து நடத்தியதில் கூட்டணிக்கு ஒரு எடுத்துக்காட்டான செயல் முனைப்பை அது நிறுவியது உண்மையெனினும் பரந்துபட்ட வடக்கு-கிழக்கு பகுதிகள் யாவற்றிலும் அதனால் கூட்டணி முதல் ஏனைய கட்சிகளை முகம் கொடுத்து நிற்க முடியுமா என்பது பாரிய சவாலே. எவ்வாறாயினும் இறுதிநேரத் தேர்தல் அலையை அளவெடுப்பதற்கு இன்னும் சில நாட்கள் நாம் பொறுத்திருக்கத்தான் வேண்டும். □

நரன்

# செய்திச் சிதறல்

★ **அ**மைச்சர் அஷ்ரஃப் அவர்கள் ஹெலிகொப்டர் விபத்தில் பலியானதைத் தொடர்ந்து இன்று (26ம் திகதி செவ்வாய்க் கிழமை, வரை அவருடைய ஹெலி விபத்துக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஹெலிகொப்டர் குன்றுடன் மோதியதா அல்லது குண்டுகள் வெடித்து சிதறியதா என்பதனை நிர்ணயிக்க கூடிய சான்றுகளைப் பதிவு செய்துள்ள கறுப்பு பெட்டி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. விமானிக்கும் கட்டுப்பாட்டுக் கோபுரத்துக்குமிடையில் நடைபெற்ற உரையாடல்கள் இந்தக் கறுப்புப் பெட்டிக்குள் பதியப்பட்டிருக்கும். விபத்து நடந்தவுடன் அந்த மலைப் பிரதேசத்துக்கு ஏறத்தாழ 5000 பொதுமக்கள் படையெடுத்து சென்றதாகக் கூறப்படுகிறது. அவர்களில் எவரேனும் இந்தக் கறுப்புப் பெட்டியை எடுத்துச் சென்றுள்ளனரா? அல்லது வேண்டுமென்றே கறுப்புப் பெட்டி மறைக்கப்பட்டு விட்டதா என்பது பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது. வானூர்திகளில் இணைக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பெட்டிகள் எத்தகைய கடுமையான நெருப்பிலும் எரிந்து போவதில்லை. அது வெடித்துச் சிதறவும் முடியாத மிக வலுவான உலோகத்தினால் உருவாக்கப்பட்டது.

★ **அ**மைச்சர் அஷ்ரஃப் அவர்கள் வகுத்து வந்த துறைமுகங்கள் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பதவியினை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் பாராளுமன்ற பிரதிக் குழுக்களின் தலைவருமான ஜனாப் ரவூப் ஹக்கீமுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி சந்திரிக்கா சம்மதம் தெரிவித்தார். கடந்த 22ம் திகதி சனிக்கிழமை ஜனாப் ஹக்கீம் அவர்கள் பதவியேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் சில சட்டப் பிரச்சனைகளால் பதவியேற்பு ஒத்திவைக்கப்பட்டது. 25ம் திகதி திங்கட்கிழமை பதவியேற்பு பின்போடப்பட்டது. அன்றைய தினமும் ஜனாப் ஹக்கீம் அவர்கள் மக்கா சென்று திரும்பத் தாமதித்தமையினால் செவ்வாய்க்கிழமை வரை ஒத்தி வைக்கப் பட்டது.

★ **து**றைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சு கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கு வழங்கப்படுவது குறித்தும், முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பதவி மறைந்த அமைச்சர் அஷ்ரஃப் அவர்களின் மனைவி திருமதி.அஷ்ரஃப் அவர்களுக்கும் வழங்கப்படுவது குறித்தும் கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. இவ்விரு பதவிகளும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கே வழங்கப்பட வேண்டுமென்று வாதப்பிரதிவாதங்கள் தொடர்ந்த வண்ணமிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

★ **தே**ர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. கொலை, குண்டுவைப்பு அடிதடி, ஆட்கடத்தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் வேகத்தை நோக்கும்போது பொதுத் தேர்தலுக்கு முன்னர் மிக அதிகமான அளவு கொடுமைகள் நடைபெறுமோ என்ற அச்சமே தோன்றியுள்ளது.

★ **மு**ன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்கள் படுகொலை செய்யப்பட்டு 41வது சிறார்த்த தினம் செப்டம்பர் 26ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. அன்னாருடைய சமாதி ஹொரகொல்லையில் அமைந்துள்ளது. அவருடைய நினைவாக அன்று காலையில் சமாதியில் இடம்பெற்ற மத வைபவங்களில் அமரர் பண்டாரநாயக்காவின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

★ **ஹொ**ரகொல்லையிலுள்ள அமரர் பண்டாரநாயக்காவின் சமாதியில் நடைபெறும் மத வைபவங்களுக்காக அந்தப் பிரதேசம் பலத்த பாதுகாப்புகளுக்கு உட்படுத்தப்பட்டது. அந்தப் பிரதேசத்தில் பயணம் செய்யும் வாகனங்கள் அனைத்தும் நன்றாகப் பரிசோதனை செய்யப்பட்டன. இத்தகைய கடும் பாதுகாப்பு நிலவிய காலகட்டத்தில் ஹொரகொல்லையில் அமைக்கப்பட்டிருந்த அமரர் பண்டாரநாயக்காவின் புதல்வர் அநுரா பண்டாரநாயக்காவின் அலுவலகம் இனந்தெரியாதோரால் முற்று முழுதாகச் சேதமாக்கப்பட்டுள்ளது. தனது தந்தையின் நினைவாக இடம்பெறும் வைபவங்களுக்காக பரிபூரண பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தபோதும் தனது காரியாலயம் இவ்வாறு உடைத்து நாசப்படுத்தப்பட்டமைக்கு ஆளும் கட்சி மீதே தனக்கு சந்தேகமேட்பட்டு இருப்பதாக அநுரா பண்டாரநாயக்கா செய்தியாளர் மத்தியில் தெரிவித்துள்ளார். □

# அண்டை மண்டலத்தில்....

# மகனைப் புறந்தள்ளிய கருணாநிதி

இந்திய அரசியலில் வாரிசுகள் அரியணை ஏறுவது சகஜமே. இந்திரா காந்தி, சஞ்சய், ராஜீவ், சோனியா, பிரியங்கா, மேனகா காந்தி இவர்களோடு நிற்கவில்லை, இந்த வழக்கம். எல்லா பெரிய அரசியல்வாதிகளும் தங்களது குடும்பத்தினரை-வாரிசுகளை தங்களுக்குப் பின்னர் பதவியேற்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்கின்றனர்.

தமிழகம் மட்டும் விதி விலக்கா என்ன? காமராசரும், அண்ணாத்துரையும் அப்படிச் செய்யவில்லை. ஆனால் கருணாநிதி ஏமாளியா என்ன? தனது ஒட்டு மொத்த குடும்பத்தையும் அரசியலுக்குக் கொண்டு வந்து விட்டார்.

தனக்குப் பின் தன் மகன் ஸ்டாலின் தான் முடி சூட வேண்டும் என்று சூசகமாக சொல்லி விட்டார். ஏற்பாடுகள் எல்லாம் கனஜோராய் நடந்து வருகின்றன. இப்படியிருக் கையில் பாவம் ஸ்டாலினின் அண்ணன். மு.க.அழகிரி தான் தந்தையின் செல்வாக்கினில் குளிர்காய முடியாமல் தவிக்கிறார்.

இப்போது மோதல் தெருவுக்கு வந்து விட்டது. செப்டம்பர் 19ம் நாளன்று இரவு தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழகன் அழகிரியின் அரசியல் மோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து ஓர் அறிக்கை வெளியிட்டார்.



மு.க.அழகிரி

கழகக் கட்டுப்பாட்டை மீறி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாலும், கழகத் தோழர்களிடையே கட்டுப்பாடு குலைவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாலும் கழகத் தோழர்கள் யாரும் மு.க.அழகிரியுடன் கழக சம்பந்தமான எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பை மீறி யாரேனும் அவருடன் தொடர்பு வைத்துக் கொண்டால், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும், என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால் தந்தைமீது தனக்கிருக்கும் வருத்தத்தை எடுத்துக்காட்டும் வகையில் 15 நாட்களுக்கு முன்னர்தான் தான் அரசியலில் ஈடுபட விரும்பவில்லையென்றும், தி.மு.க.வினர் எவரும் தனது பெயரைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டாமென்றும், எவ்வித விழாக்களுக்கும் தன்னை அழைக்கவேண்டாமென்றும் அழகிரியே ஓர் அறிக்கை விடுத்திருந்தார்.

அதையும் மீறி கருணாநிதி ஏன் இப்படி ஓர் அதிரடி நடவடிக்கையில் இறங்க வேண்டும்? அழகிரி ஒதுங்கிக் கொள்வதாக அறிக்கை விட்டவுடன் அவரது மதுரைப் பகுதி ஆதரவாளர்கள் குமுறினார்கள். சில இடங்களில் கடைகளை மூடச் சொன்னார்கள். பஸ்களை மறித்தார்கள். உணர்ச்சி மேலிட்டு ஒருவர் தீக்குளிக்கவே தயாராகிவிட்டார். காவல்துறையினர் முன்பாகத்தான்!

அதோடு விஷயம் நிற்கவில்லை. கடந்த வாரம் சென்னையில் நடந்து முடிந்த தி.மு.க.வின் முப்பெரும் விழாவினையே மதுரைப்பகுதியைச்சார்ந்த மூன்று மாவட்டச் செயலாளர்கள் புறக்கணித்து விட்டார்கள். அவர்கள் மூவரும் தீவிர அழகிரி ஆதரவாளர்களாகக் கருதப்படுகிறார்கள்.

அழகிரி கடந்த 20 ஆண்டுகளாக மதுரையில்தான் வசித்து வருகிறார். தந்தையை, தம்பியை எதிர்த்து தனிக்கோஷ்டி ஒன்றினை உருவாக்கத் துணிந்துவிட்டார் அவர், என்று கருதியே கருணாநிதி அடுத்த அஸ்திரத்தை வீசியிருக்கிறார்.

நிலைமை இன்னும் மோசமானது தென் மாவட்டங்களில் பத்து பஸ்களுக்கு தீ வைக்கப்பட்டது. கல்வீச்சில் பல பஸ்களின் கண்ணாடிகள் சேதமடைந்தன. பல்வேறு பகுதிகளில் சாலைப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அரசு பஸ்கள் ஓடவில்லை.


நூற்றுக்கணக்கில் அழகிரி ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர். அதிர்ச்சி அடையாதீர்கள், வன்முறையில் இறங்காதீர்கள், என்று சடங்கிற்கு ஓர் அறிக்கைவிட்ட அழகிரி, அதேநேரம் தன் மீது அன்பு கொண்டவர்களைக் கைது செய்வது வருந்தத்தக்கது என்றும் கூறினார். மறுநாள் அவரே ஒரு போலிஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்து, கைது செய்யப்பட்ட ஆதரவாளர்கள் சிலரை விடுவிக்கச் சொல்லி தகராறு செய்து, அவர்களைத் தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டார் என்றெல்லாம் செய்திகள்.

தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று தலைமை வலியுறுத்தியும், தென்பகுதி மாவட்டச் செயலாளர்கள் பகிரங்கமாக அழகிரியுடன் அலைந்து கொண்டிருந்தார்கள். அழகிரி மீதான நடவடிக்கையை திரும்பப்பெறவேண்டுமென்று அவர்கள் கருணாநிதிக்கு கடிதமெழுதிவிட்டதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே ராஜ்குமார் கடத்தல் விவகாரம், பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் ராமதாசின் மீதான தாக்குதலுக்குப் பின் வடமாவட்டங்களில் தொடரும் வன்முறை, இவற்றால் சற்று நொந்து போயிருந்த கருணாநிதி அரசிற்கு அழகிரி விவகாரம் புதியதொரு தலைவலியாகியிருக்கிறது.

கருணாநிதியின் குடும்ப அரசியல் சற்று சுவாரசியமானதுதான். மருமகன் முரசொலி மாறன்தான் என்னுடைய மனச்சாட்சி என்பார் கலைஞர். அடிக்கடி, திரையுலகிலும் சரி, அரசியலிலும் சரி, இருவருக்கும் பல ஆண்டுகளாக நெருக்கமான தொடர்பு. மாறனைத் தவிர வேறு எவரையும் கருணாநிதி நம்புவதில்லை.

1989ல் முதன் முதலாக தி.மு.க.விற்கு மத்திய அமைச்சரவையில் வாய்ப்புக் கிடைத்த போது மாறன்தான் அமைச்சரானார், தொண்டர்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு பெற்றிருந்த, சிறந்த பேச்சாளருமான வை.கோ. ஒதுக்கப்பட்டார். பின்னாளில் கட்சியைவிட்டு அவர் விலகுவதற்குக்கூட அந்த நிகழ்ச்சி ஒரு காரணமாயிருந்தது.



கலைஞர் மு.கருணாநிதி

மாறன் கட்சியின் தொண்டர்களென்ன, மற்ற தலைவர்களுடன் கூட நெருங்கிப் பழகமாட்டார்; எல்லோரையும் கடிந்துகொள்வார்; ஏசுவார், தானே கட்சியில் எல்லாவற்றையும் நிர்ணயிப்பது போல நடந்து கொள்வார். பலருக்கும் அவரைப் பிடிக்காது. ஆனாலும் தலைவர் அவரை நம்புகிறார், மதிக்கிறார், நமக்கும் வேறு வழியில்லை என்றே மற்றவர்கள் அவரிடம் அனுசரித்துப் போவார்கள்.

பாரதீய ஜனதாவுடன் தி.மு.க. கூட்டு வைத்ததற்கே மாறன்தான் காரணம் என்று நம்பப்படுகிறது. அவரைப் பொறுத்தவரை அரசியல் ஒரு பிசினஸ்; லாபம் தரும் வழிவகைகள் தான் முக்கியம், கொள்கையல்ல.

அவரது மகன் கலாநிதி மாறன் நடத்தும் சன்.டி.வி.யில் கடுகளவேனும் திராவிட இயக்கச்சாயல் இருக்கிறதா என்றால்-இல்லை. கொள்கை வேறு, தொழில் வேறு என்று கலாநிதி நம்மிடம் ஒரு முறை கூறினார்.

கருணாநிதியின் இரண்டாவது மனைவி தயாளு அம்மாளின் இரண்டாவது மகன் ஸ்டாலின் தான் சென்னை மேயர். அவரது அரசியல் வாரிசு அவர்தான். அடுத்த தி.மு.க. தலைவர் அவர் தான் என்பது ஏறத்தாழ உறுதியாகிவிட்டது. 48 வயதான ஸ்டாலின் நல்ல பேச்சாளர் தான். பல ஆண்டுகளாக கட்சிவேலைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார். எமர்ஜென்சியின் போது சிறைப்படுத்தப்பட்டார், எல்லாம் சரி. ஆனால் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக, தலைமைக்குத் தேவையான குணாதிசயம் ஏதும் அவரிடம் இல்லை. தொண்டர்களிடம் நெருங்கிய பிணைப்பும் கிடையாது. தந்தை அளவுக்கு திறமைசாலியும் இல்லை. மக்களிடம் செல்வாக்கும் இல்லை. ஆனாலும் அவர்தான் அடுத்த தலைவர் என்பது முடிவாகி விட்டது. மற்ற தலைவர்களும் தொண்டர்களும் அதை ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்?

கருணாநிதிக்குப் பிறகு வை.கோ. மீண்டும் தி.மு.க.விற்குள் நுழையக் கூடும், தலைமையைக் கைப்பற்றக்கூடும் என்று தான் பலர் நம்புகிறார்கள்.

எது எப்படியானாலும் கருணாநிதி, மாறனுக்குப் பிறகு ஸ்டாலினுக்குத்தான் கட்சி வட்டாரங்களில் அதிக முக்கியத்துவம். இது அவரது அண்ணன் அழகிரியை மிகவும் பாதித்திருக்க வேண்டும்.

அழகிரிக்கு பெரிய அளவில் அரசியலில் எப்போதும் ஆர்வமிருந்ததில்லை. 15 வருடங்களுக்கு முன்பு தி.மு.க.வின் அதிகாரபூர்வ ஏடான முரசொலியை நிர்வகிக்க அவர் மதுரைக்கு அனுப்பப்பட்டார். பிறகு நிரந்தரமாக அவர் அங்கேயே தங்கிவிட்டார். கட்சியில் அவருக்கென்று பொறுப்புக்கள் கொடுக்கப்படவில்லை. அவரும் கட்சியில் அக்கறை காட்டிக்கொள்ளவில்லை. சுயமாக ஏதோ சில தொழில்கள் செய்துவருகிறார். அவரது கூஜாக்கள் சிலருக்கு கட்சிப் பொறுப்புக்கள் கொடுக்கப்படும். அவர் சிபார்சில் சிலருக்கு தேர்தல் டிக்கெட் கொடுக்கப்படும்.

மெதுவாக அவருடைய கரங்களில் அதிகாரங்கள் குவியத்துவங்கியது. அவருடைய யதேச்சாதிகாரப் போக்கிற்கு எதிர்ப்பு தெரிவித்துத்தான் பலர் ம.தி.மு.க.விற்குச் சென்றனர். பிறகு அடக்கி வைக்கப்பட்டார். ஆனால் கடந்த சட்டமன்றத் தேர்தல்களில் தி.மு.க.பெரும் வெற்றி பெற்ற பின், அழகிரி ஒரு தனி அதிகார மையமாகவே செயல்படத் துவங்கினார். அதிகாரிகள் பந்தாடப்பட்டார்கள். பெரிய அதிகாரிகள் எல்லாம் அவருக்கு வெண்சாமரம் வீசத்துவங்கினர். முக்கிய நிர்வாகிகளாக அவரது ஆதரவாளர்களே நியமிக்கப்பட்டனர். தென்மாவட்டங்களைப் பொறுத்தவரை தேர்தல் டிக்கெட்களும் அவர் சிபார்சு செய்பவர்களுக்கே வழங்கப்பட்டன.

அவரை விமர்சித்து எழுதும் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர். சென்னையிலிருந்து ஒழுங்காக நடந்து கொள் என்று அறிவுரை வரும். அவரும் சற்று அடங்கியிருப்பார். மீண்டும் தனது சுயரூபத்தைக் காட்டுவார்.

காவேரி மணியம் என்பவரை மாநிலங்களவை உறுப்பினராக்கவேண்டும் என்று வாதாடினார். நடக்கவில்லை. ஒட்டுமொத்தமாக சில நிர்வாகிகள் ராஜினாமா செய்தார்கள். அப்படியும் கருணாநிதி தன் முடிவினை மாற்றிக்கொள்ளத் தயாராகவில்லை. அழகிரி கீழிறங்க வேண்டியதாயிற்று.

இப்படிக் கதை போய்க் கொண்டிருக்கும் போதுதான் ஸ்டாலின் அடுத்த வாரிசு என்பது உறுதியானது. அதேநேரம் அழகிரியின் ஆதரவாளர் சிலருக்கு இந்த வருடம் கட்சிப் பொறுப்புக்கள் மறுக்கப்பட்டன.

நொந்துபோன அழகிரி தன் பெயரை எந்தத் தொண்டரும் பயன்படுத்த வேண்டாமெனவும் எந்த விழாக்களுக்கும் தன்னை அழைக்கவேண்டாமென்று கோரியும் ஓர் அறிக்கைவிட்டார். தொடர்ந்து நடைபெற்ற தி.மு.க.வின் முப்பெரும் விழாவினை மதுரைப்பகுதி செயலாளர்கள் மூவர் புறக்கணித்தனர்.

வருடந்தோறும் செப்டம்பர் மாதம் நடக்கும் முப்பெரும் விழா, பெரியார், அண்ணா பிறந்த நாட்கள், தி.மு.க. நிறுவன நாள்-இவற்றைக் குறிக்கும் வகையில் நடத்தப்படும் விழா; தி.மு.க.வின் முக்கியமாதொரு நிகழ்ச்சியாகும். அதனையே மதுரைச் செயலாளர்கள் அழகிரியின் ஆலோசனையின் பேரில் புறக்கணித்துவிட்டார்கள் என்று வெகுண்டே கருணாநிதி, அழகிரியின் தொடர்பு வைத்துக் கொள்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்திருக்கிறார்.

இது எங்கு போய் முடியும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும், ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் கருணாநிதியின் முதல் மனைவி, மறைந்த பத்மாவதியின் மகன் மு.க.முத்து ஜெயலலிதாவிடம் ஐந்து லட்ச ரூபாய் வாங்கிக் கொண்டு தனது தந்தையை வசைபாடத் துவங்கினார்.

**கானகன்**

இந்த முத்துதான் சில காலம் சினிமாவில் நடித்தார். அவரை எம்.ஜி.ஆருக்கு மாற்றாக உருவாக்க முனைந்து, படுதோல்வியடைந்தார் கருணாநிதி. கட்சியும் பிளவுபட்டது. மது, மாதுவென்று தன் வாழ்வை சீரழித்துக் கொண்டிருக்கிறார் அவர். நாட்டை வழிநடத்தும் தமிழினத் தலைவரின் குடும்பம் எப்படியெல்லாம் அல்லாடுகிறது பாருங்கள்.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும், பஸ்ஸைக் கொளுத்துகிறார்கள், சாலை மறியலில் ஈடுபடுகிறார்கள், போலீஸ் ஸ்டேஷனுக்கே சென்று குற்றவாளிகளை விடுதலை செய்து கொண்டு போகிறார்கள், அரசு இயந்திரம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. சட்டமன்றத் தேர்தல்களுக்கு இன்னும் ஏழெட்டு மாதங்களே இருக்கையில் அழகிரி மீது நடவடிக்கை எடுத்து நற்பெயர் வாங்க கருணாநிதி முடிவுசெய்திருக்கலாம். ஆனால் தொடரும் நிகழ்ச்சிகள் அவருக்கு அவப்பெயரையே ஏற்படுத்தும்.

## காட்டிக் கொடுக்கும் கூட்டணியின் தகடுதத்தம்!

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரிச் செல்லும் ஈழத்தமிழர்கள், அவர்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்படுவதனால் அந்நாடுகளிலிருந்து மீண்டும் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவது தொடர்பாக 6ம் பக்கத்தில் கடந்த 14 வாரங்களாக கட்டுரைத் தொடரொன்று பிரசுரிக்கப்பட்டு வந்தது. தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு நாட்டுக்குத் திருப்பியனுப்பப் படுவோர் இங்குபடும் துன்பங்களை, இந்நாட்டு அரசாங்கம் அவர்கள் மீது எடுக்கும் நடவடிக்கைகளை அறிக்கையாக எழுதி, மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயும் அவர்கள் வெளியிட்டுவந்தார்.

செப்டம்பர் மாதம் 17ம் திகதி வெளியாகிய 374வது முரசின் மூன்றாம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த ஒரு செய்தி, எம்மையெல்லாம் துணுக்குற வைத்தது. 'ஐரோப்பிய நாடுகளிலிருந்து தமிழர்கள் திருப்பியனுப்பப் படுவதேன்? கூட்டணி பிரமுகர் காரணமா?' என்ற தலைப்பில் அந்தத் தகவல் பிரசுரமாகி இருந்தது.

சிலமாதங்களுக்கு முன்னர் ஜெர்மன் நாட்டிலிருந்து 20 ஈழத்தமிழர்கள் திருப்பியனுப்பப்பட்டனர். இப்பொழுது பலநூற்றுக்கணக்கான ஈழத்தமிழர்களை அந்த நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிகிறோம். அவர்களை இலங்கைக்கு திருப்பியனுப்ப வேண்டாம் என்று உண்ணாவிரதப் போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. சில வாரங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் குழுவொன்று ஜெர்மன் நாட்டுக்குச் சென்றதாகவும் அந்நாட்டு அதிகாரிகளைக் கண்டு "தஞ்சம் நிராகரிக்கப்பட்ட ஈழத்தமிழர்களை திருப்பியனுப்ப வேண்டாம்; நாட்டிலுள்ள நிலமை சீரடையும்வரையிலாவது அவர்களைத் திருப்பியனுப்புவதை தற்காலிகமாவது தாமதியுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்துவிட்டு திரும்பியதாகவும் ஊடகங்களில் செய்திகள் பிரசுரக்கப்பட்டிருந்தன.

இதில் வேடிக்கை என்னவென்றால், இங்குள்ள ஜெர்மன் நாட்டின் தூதரகத்தில் சட்ட ஆலோசகராக விளங்குபவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மிக முக்கியமான உறுப்பினர் என்றும், அவருடைய ஆலோசனையின் பேரில் தான் ஈழத்தமிழர்கள் நாடு கடத்தப்படுகின்றனர் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டி விடுவதுபோல்' தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் இருப்பதைக் கண்டு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் வெட்கித் தலை குனிய வேண்டிய நிலையிலுள்ளனர். உண்மையில் 'ஊருக்குபதேசம், உனக்கல்லடி' என்ற மொழிக்கு இக் கட்சியினர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றனர்.

இத்தகைய போலித்தனமான-ஏமாற்று வித்தைகளை கூட்டணியினர் கடந்த காலங்களில் செய்து வந்தமையே எம் மக்களின் இன்றைய பரிதாபநிலைக்கு காரணமென்பதை இன்றாவது நாம் உணர்ந்து கொள்ள வேண்டாமா?

கே.எஸ்.சிகாமணி,
திருமலை.

## அலசுவது - இராஜதந்திரி

# யுத்தவலயமாகியிருக்கும் தென்மராட்சி

யாழ்ப்பாணக் குடாநாடு முழு அளவில் யுத்தக் கெடுபிடிகளினால் சின்னாபின்னமாகும் அறிகுறிகளே பலமாக இருக்கின்றன.

கடந்தவாரம் உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்துக்குப் பயணஞ்செய்திருந்தனர். இப் பத்திரிகையாளர்கள் வடக்கே அண்மையில் யுத்தம் மூண்டிருந்த தென்மராட்சிப் பகுதிக்கும் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

தென்மராட்சியில் பத்திரிகையாளர்கள் அவதானித்தவை, யாழ்ப்பாணக்குடாநாடுமுழுவதுமே ஒரு மோசமான போர்ச்சூழலை எதிர்நோக்கிச் சென்று கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டுபவையாகவே இருந்தன.

ஒருபுறம் ஜனநாயகத்தை மீளவும் உயிர்ப்பிக்கும் நடவடிக்கைகள் என்ற ரீதியில் தேர்தல் பிரசாரங்களும், மறுபுறத்தே தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவது என்ற ரீதியில் மூர்க்கத்தனமான யுத்தமும் வடக்கே இடம்பெற்று வருவதையே அவதானிக்க முடிகின்றது.

வடக்கே யுத்த நடவடிக்கைகளுக்கு மிகவும் பரிச்சயமான மேஜர் ஜெனரல் அன்டன் விஜேந்திரா வடபகுதிக்கான இராணுவத் தளபதியாக அண்மையில் நியமனமாகியிருந்தார்.

இலங்கை இராணுவத்தின் பிரதமதளபதிகளாகக் கடந்த பத்து வருடகாலத்தில் பதவியேற்றவர்கள் அனைவருமே வடபகுதி இராணுவத்தளபதிகளாகவும் பதவி வகித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை இராணுவத்தின் பிரதமதளபதியாகப் பதவியேற்பதற்கு வடபகுதி இராணுவ நிலபரங்களைக் கையாளவேண்டியதும் ஒரு முக்கிய தகைமையாக இருக்கின்றது.

இருந்தபோதிலும் வடக்கே இராணுவம் ஒரு முற்று முழுதான வெற்றியை நிலைநாட்டுவதென்பது தொடர்ந்தும் கடினமானதொன்றாகவே இருந்துவருகின்றது.

1996ம் ஆண்டில் வடக்கே 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இலங்கை இராணுவத்தினரால் வடக்கே நடத்தப்பட்ட மிகப் பெரும் இராணுவ நடவடிக்கையாகவே 'சூரியக் கதிர்' ஒப்பரேஷன் விளங்கியிருந்தது.

பலாலித்தளத்திலிருந்தும் வெளியேறிய இராணுவத்தினர் சூரியக் கதிர் நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலம் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில் தம்மைப் பெரிதும் விஸ்தரித்திருந்தனர். ஆயினும் குடாநாட்டில் இராணுவத்தினரால் பலமாகக் காலூன்றுவதென்பது தொடர்ந்து ஒரு பெருஞ்சவாலாகவே இருந்துவருகின்றது.

சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவத்தினர் வடபகுதியிலிருந்து வன்னிப் பகுதிக்கு வாபஸ்பெற வைத்திருக்கலாம். ஆனால் வன்னியிலிருந்து புலிகள் தொடுத்த 'ஓயாத அலைகள்' தாக்குதல்கள் படைத்தரப்புக்கு மிகுந்த நெருக்கடியைக் கொடுப்பதாகவே இருக்கின்றன.

இறுதியாக கடந்த சித்திரை மாதத்தில் வடக்கே யாழ்குடாநாட்டின் நுழைவாயில் என்றிருக்கும் ஆனையிறவுத் தளம் மீது எல்.ரி.ரி.ஈ.யினர் பலமான தாக்குதலைத் தொடுத்து அங்கிருந்தும் படையினரை அகற்றியிருந்தனர்.

இதன்பின்னர் புலிகளது முன்னேற்றம் தென்மராட்சிப்பகுதிவரை இடம்பெற்றிருந்தது. எனவே தென்மராட்சியிலிருந்து புலிகளால் மேலும் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களைத் தடுக்கும் விதத்திலேயே கடந்தவாரங்களில் இராணுவத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்திருந்தனர்.

ஆரம்பத்தில் இத்தாக்குதல் பாரிய உயிரிழப்புகளை இருதரப்பிலும் ஏற்படுத்தியிருந்தது. இராணுவத்தைப் பொறுத்தவரை ஆட்பற்றாக்குறை ஒரு பெரும் பிரச்சனையாக இருக்கும் போது நூற்றுக்கணக்கில் உயிரிழப்புக்களுடன், மேலும் நூற்றுக்கணக்கில் படுகாயங்களுக்கு படைத்தரப்பினர் உள்ளாவது தர்மசங்கடமானதாகவே இருக்கின்றது.

ஆயினும் தென்மராட்சிப்பகுதி புலிகள் வசமிருக்கும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தின் பெருநிலப்பரப்பையும் பறிகொடுத்துவிட நேரிடும் என்ற அச்சத்தின் காரணமாகவே இராணுவம் கடந்த வாரங்களில் தென்மராட்சியில் 'கினிஹிர' எனப்பெயரிடப்பட்ட இராணுவநடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

இந்த இராணுவநடவடிக்கையின் போது ஆட்பலத்தைவிட ஆயுதபலமே அதிகமாகப் பிரயோகிக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

நான்குமாதங்களுக்கு முன்னர் ஆனையிறவுத்தளத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இராணுவம் பெருமளவில் ஆளணிகளைப்பறிகொடுத்திருந்தது.

இதன்காரணமாக ஆட்பற்றாக்குறையும், ஆயுதப்பற்றாக்குறையும் கணிசமானளவில் காணப்பட்டது. இதனையடுத்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் விசேட உத்தரவின் பேரில் பெருந்தொகையான நவீன ஆயுதங்கள் வாங்கப்பட்டிருந்தன.

இவ்வாறு வாங்கிக்குவிக்கப்பட்ட ஆயுதங்களில் முதன்மையானதே பல குழல் பீரங்கி என்பது குறிப்பிடத்தக்கது. பல நூற்றுக்கணக்கான படையினர் கொண்டுள்ள பலத்தை இப்பலகுழல் பீரங்கி தனித்துக் கொண்டுள்ளதென்றே இராணுவ வட்டாரங்களில் பேசப்படுவதுண்டு. டிரக் வண்டியொன்றில் பொருத்தப்பட்டு வேண்டிய இடங்களுக்கு கொண்டு செல்லக்கூடிய இப்பீரங்கி, ஒருசில செக்கன்களில் தொடர்ச்சியாகப் பல வேட்டுக்களைத் தீர்க்கக் கூடிய வல்லமை கொண்டதாகும்.

இத்தகைய அசுரத்தனமான பலகுழல் பீரங்கி இயக்கவிடப்படும்போது ஆட்களுக்குமட்டுமல்ல. கட்டிடங்கள், மற்றும் சுற்றாடல்களுக்கும் பாரிய சேதங்களை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது.

இப் பீரங்கிமுழங்கும் போது ஏற்படும் அதிர்வலைகளை யுத்தம் இடம்பெறாத பகுதிகளில் தொலைதூரங்களில் இருப்போரால் கூட உணர முடிகின்றது.

இத்தடவை தென்மராட்சிப்பகுதியில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கையின் போது கூட இப் பல குழல் பீரங்கியே பிரதான பங்கை வகித்துள்ளது.

இதுபற்றி வடபகுதி இராணுவத்தளபதி அன்டன் விஜேந்திராவும், தென்மராட்சிக்கு அழைத்துச் செல்லப்பட்ட பத்திரிகையாளர்களிடம் கூறியிருந்தார்.

இராணுவத்தைப் பொறுத்தவரை தென்மராட்சிப் பகுதியிலிருந்து புலிகள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரை அங்கே மற்றுமொரு பிரதேசமும் போர் அனர்த்தத்துக்குள்ளாகியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாடு மூன்று வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி ஆகியவையே இம் மூன்று வலயங்களுமாகும்.

இதுவரைகாலமும் பெருமளவில் போர் அனர்த்தத்துக்குள்ளாகாத ஒரு பிரதேசமாகவே தென்மராட்சி இருந்துவந்தது. சாவகச்சேரிப் பட்டணமே தென்மராட்சியின் பிரதான பகுதியாக இருந்துவந்தது.

நான்குவருடங்களுக்கு முன்னர் வடபகுதியில் சூரியக்கதிர் இராணுவநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது, லட்சக்கணக்கான அப்பாவி யாழ்ப்பாணவாசிகளின் உயிர்களைக் காப்பாற்றிய ஒரு பிரதேசமாகவே தென்மராட்சி விளங்கியிருந்தது.

பலாலியிலிருந்து 'சூரியக்கதிர்' இராணுவநடவடிக்கையை ஆரம்பித்த படையினருக்கும் எல்.ரி.ரி.ஈ.யினருக்குமிடையே மோதல்கள் வெடித்ததையடுத்து வலிகாமம் பகுதியைச் சேர்ந்த மக்கள் தென்மராட்சிக்கே இடம் பெயரானார்கள்.



வடக்கே என்றுமில்லாதவாறு இலட்சக்கணக்கில் அப்பாவிமக்கள் தமது வீடு, வாசல்களை விட்டு 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையின்போதே வெளியேறியிருந்தனர்.

வலிகாமத்திலிருந்து கால் நடையாகவும், தம்மிடமிருந்த மாட்டுவண்டிகள் மற்றும் வாகனங்களில் சுமார் மூன்று இலட்சம்வரையிலான மக்கள் தென்மராட்சிப்பகுதிக்குச் சென்றிருந்தனர்.

'சூரியக்கதிர்' இராணுவநடவடிக்கை பூர்த்தியாகும்வரை வலிகாமம் பிரதேசவாசிகள் தென்மராட்சியிலேயே தங்கியிருந்தனர். அப்போது இலட்சக்கணக்கான மக்களைக் கொண்டிருக்கக்கூடியதாக தென்மராட்சிப் பிரதேசம் போரபாயமற்ற சூழ்நிலையைக் கொண்டிருந்தது.

ஆனால் யாழ்குடாநாட்டின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடும் போது பெருமளவிலான யுத்தக் கெடுபிடிகளைக் கொண்டிராதிருந்த தென்மராட்சிப்பிரதேசம் தற்போது சோபையிழந்து 'சுடுகாடு' போன்று காணப்படுவதாகவே அங்கு சென்றுதிரும்பிய செய்தியாளர்கள் மூலமாக அறிய முடிகின்றது.

வடபகுதியின் இராணுவநடவடிக்கைகளை எடுத்துநோக்கும்போது, வடமராட்சியிலேயே 1987ம் ஆண்டு இலங்கை இராணுவம் பாரியளவில் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற முதலாவது இராணுவநடவடிக்கையை ஆரம்பித்தது.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற பிரதான பிரதேசங்கள் வடமராட்சிப் பகுதியில் இருக்கின்றன. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட அவ்வியக்கத்தின் முக்கியஸ்தர்களும், ஏனைய உறுப்பினர்கள் பலரும் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

எனவே வடமராட்சியைக் கைப்பற்றி அங்கிருந்தும் ஏனைய பகுதிக்குள் ஊடுருவுவதே இராணுவத்தின் அன்றைய திட்டமாக இருந்தது. ஆயினும் வடமராட்சிப் பிரதேசத்தில் இராணுவம் தனது கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்த தருணத்திலேயே இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி இந்தியப் படை வடக்கு-கிழக்குப் பிரதேசத்துக்கு வந்திருந்தது.

வடமராட்சிப்பகுதியில் ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது ஏற்பட்ட மோதல்களில் வடமராட்சிப்பிரதேசம் பாரியசேதங்களுக்கு முகங் கொடுத்திருந்தது. கட்டிடங்கள், விவசாய நிலங்கள் என்பவை பெருமளவில் பாதிப்புக்களை எதிர்நோக்கின. ஏராளமான வீடுகள் தரைமட்டமாகியிருந்தன.

யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரை இராணுவ நடவடிக்கைகளின் தாக்கத்தை முதலில் எதிர்கொண்ட ஒரு பிரதேசமாகவே வடமராட்சி விளங்கியிருந்தது.

கடந்த பதினேழு வருடகாலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் விமானக்குண்டு வீச்சுக்களோ, அல்லது ஷெல் தாக்குதல்களோ இடம்பெறாத பகுதிகளே இல்லையெனலாம்.

ஆனால் வடமராட்சிப் பகுதியே முதற்தடவையாகப் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கிய ஒரு பிரதேசமாக விளங்கியிருந்தது.

இதனையடுத்து வலிகாமம் பகுதி கூட குறிப்பிடத்தக்க பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்தது.

எனவே இலங்கை இராணுவ நடவடிக்கையின் போது வடமராட்சியும், பின்னர் இந்திய இராணுவ நடவடிக்கையின் போது வலிகாமம் பகுதியும் பெருமளவிலான பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்தன.

ஆனால் தென்மராட்சிப் பிரதேசம் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் போன்று பாரியளவிலா சேதங்களை எதிர்கொண்டிருக்கவில்லை.

இவ்வருடம் சித்திரை மாதம் ஆனையிறவுத் தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலையடுத்தே தென்மராட்சியும் தற்போது ஒரு யுத்தவலயமாக மாறியுள்ளது.

ஆனையிறவிலிருந்தும் பின்வாங்கிய படையினர் தென்மராட்சியையே தமது பிரதான கேந்திர மையமாக மாற்றுவதில் தற்போது முனைப்பாக இருக்கின்றனர்.

கடந்த சித்திரை மாதம் வரை இராணுவத்தினருக்கு ஆனையிறவுத் தளம் கேந்திரமுக்கியத்துவம் மிக்கதாக விளங்கியிருந்தது. ஆனால் ஆயுதப் படையினர் முற்றிலும் எதிர்பாராத வகையிலேயே ஆனையிறவு வீழ்ச்சி கண்டிருந்தது.

இதனையடுத்து இராணுவம் பின்வாங்கியதும் தமிழீழ விடுதலைப் புலிகள் தென்மராட்சிப்பகுதி வரை முன்னேறியிருந்தனர்.

அத்துடன் தென்மராட்சியிலிருந்து யாழ் குடாநாட்டினுள் நுழையக் கூடிய அறிகுறிகளும் புலிகள் தரப்பிலிருந்து வந்தவண்ணமிருந்தது.

எனவே இராணுவம் கடந்த வாரம் மேற் கொண்ட தென்மராட்சி மீதான தாக்குதல் புலிகளை அப்பகுதியிலிருந்து அகற்றும் அதேசமயம், அங்கே இராணுவத்தினரையும் கேந்திர முக்கியத்துவத்தோடு நிலைகொள்ள வைப்பதாகவும் இருக்கின்றது.

ஆனையிறவு வரை முன்னேறியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்காலத்தில் மேலும் யாழ்ப்பாணக்குடாநாட்டினுள் முன்னேறுவதாயின் தென்மராட்சியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டியதாகவே இருக்கும்.

ஏனெனில் தென்மராட்சிப் பிரதேசமே தற்போது யாழ்ப்பாணத்தின் ஏனைய வலயங்களான வடமராட்சி, வலிகாமம் ஆகியவற்றின் நுழைவாயிலாகவும் இருக்கின்றது.

இந்நிலையில் தென்மராட்சிப் பகுதிக்குள் இராணுவநடவடிக்கைகளை மேற்கொண்டு அங்கே தற்போது நிலை கொண்டுள்ளமை, படைத்தரப்புக்கு ஒரு குறிப்பிடத்தக்க நகர்வாகவே இருக்கிறது.


அத்துடன் தென்மராட்சியிலிருந்து மீளவும் ஆனையிறவு வரை முன்னேறப் போவதாகவும் இராணுவத்தரப்புக் கூறியுள்ளது.

தென்மராட்சியில் மேற் கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையென்பது எதிர்காலத்தில் அங்கிருந்து மேலும் இராணுவ நகர்வுகள் மேற்கொள்ளப் படலாம் என்ற சாத்தியக்கூறுகளையே கொண்டிருப்பதாகவும் இருக்கின்றது.

இராணுவ ரீதியான நடவடிக்கைகளை பொறுத்தவரை திடீர், திடீரெனத் திருப்பங்களும், மாற்றங்களும் இடம்பெற்று வந்ததையே கடந்த காலங்களில் அவதானிக்க முடிந்தது.

எது எவ்வாறாயினும் இதுவரை காலமும் யுத்தக் கெடுபிடிகளுக்குப் பெருமளவில் உட்படாதிருந்த தென்மராட்சிப் பிரதேசமும், வடமராட்சிக்கு அடுத்தபடியாக கெடுபிடிமிக்க ஒரு யுத்த வலயமாக மாறியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**ஐரோப்பிய யூனியனைச்** சேர்ந்த தேர்தல் அவதானிகள் குழு இலங்கை வந்துள்ளது. ஹில்டன் ஹோட்டலில் பத்திரிகையாளர் மகாநாடொன்றையும் அவர்கள் நடத்தினர். தாம் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகளை அவர்கள் விளக்கிக் கூறினர். நீதியான, சுதந்திரமான தேர்தல்கள் நடைபெறும் நாடுகளைச்சேர்ந்தவர்களே அவர்கள். தமது அறிவுக்கெட்டியபடி கருத்துக்களை கூறிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நம்ம நாட்டு பத்திரிகையாளர்கள் உஷாரடைந்துவிட்டனர். கடந்தகால தேர்தல் நடவடிக்கைகள், முறைகேடுகளைப் பற்றி நாசுக்காக தமது கேள்விகள் மூலமாகவே அந்த அவதானிகளின் காதில் போட்டுவைத்தனர். இவ்வளவுதூரம் வந்தவர்கள் ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டுமென்று நம்ம செய்தியாளர்களும் தூபம் போட்டுள்ளார்கள்.

**யாழ்ப்பாணத்துக்கு** செய்தியாளர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர். அன்டநோவ் விமானத்தில் பயணம். உயிரைக் கையில் பிடித்துச் சென்றுள்ளனர். பலாலிக்குப் போனதும் அங்கிருந்து சாவகச்சேரிக்குப்பயணம். வீதிக்கரைப்பகுதியால் நடக்கவேண்டாம். கண்ணி வெடிகள் பொறிவெடிகள் என்று எச்சரிக்கை. சடலங்களையும் காயப்பட்டோரையும் ஏற்றி இறக்கும் விமானத்தில் ஏதோ உருப்படியாக கொழும்பு திரும்பினோம் என்று செய்தியாளர்களுக்குத் திருப்தி.

**இலங்கையின்** நம்பிக்கை நட்சத்திரங்கள் ஒலிம்பிக்கில் பிரகாசிக்கவில்லை. பல்வேறு காரணங்கள். சுசந்திகா ஜயசிங்க ஏதாவது ஒரு பதக்கத்தைப் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவரும் தோற்றுவிட்டார். சுசந்திகாவுக்கு மன அழுத்தங்கள் நிறையவே கொடுக்கப்பட்டதாம். அவரால் சுயமாக நடக்க முடியாதவாறு இப்படி, அப்படியென்றெல்லாம் உத்தரவுகள் போட்டனராம் இலங்கை அணிப்பொறுப்பாளர்கள். ஓர் உலகளாவிய போட்டியில் சிறுமைத்தனத்தோடு நடந்து கொண்டால் பெரிய வெற்றிகளை நினைத்துக் கூடப்பார்க்க முடியாது.

**அலரிமாளிகை வளவு** தேர்தல் பிரசார மைதானமாகவும் மாறிவிட்டது. எல்லாம் வல்ல அம்மையார் வெளியே போவதைத் தவிர்த்தே வருகிறார். இத்தடவை தேர்தலிலும் வீண்வம்பில் மாட்டிக் கொள்ள அவர் விரும்பவில்லை. சந்திக்க வேண்டியவர்கள்; நடத்தவேண்டிய கூட்டங்களையெல்லாம் மாளிகை வளவுக்குள்ளேயே பந்தலிட்டு, மேடைபோட்டு நடத்தி வருகிறார் அம்மையார்.

**தமிழகத்துக்கும்,** இலங்கை அணிக்குமிடையே நெடுங்காலத்துக்குப் பின்னர் கோபாலன் கிரிக்கெட் வெற்றிக்கிண்ண போட்டிகு ஏற்பாடாகியிருந்தது. தமிழக அணியும் இதற்கென கொழும்புவந்தது. ஆனால் போட்டிதான் நடக்கவில்லை. வருண பகவானின் விளையாட்டினால், கோபாலன் கிண்ண கிரிக்கெட் விளையாட்டு தண்ணீரோடு வழிந்தோடி விட்டது.

# யக்ஷிணிகளின் பசி

**மலையாள மாந்த்ரீகம் உலகப் புகழ் பெற்றது. அங்கு பேய், பிசாசு, பில்லி, சூனியம் போன்ற சங்கதிகளும் ஏராளம். ஏவி விடப்படும் பெண் பிசாசுகளுக்கு மலையாளத்தில் யக்ஷிணி என்று கூறுவார்கள். ஆண்களை வலியவந்து வசீகரம் பண்ணி அப்படியே பலி எடுத்து விடுவார்களாம் இந்த யக்ஷிணிகள். மந்திர தந்திரக்கதைகளை எழுதுவதில் மன்னரான இரு கூரான் எழுதிய இக்கதை இருவாரங்களுக்கு உங்களுக்கு விருந்து!**

"உங்க சிநேகிதர்தான்!"

"எனக்கு இங்கே யாரும் சிநேகிதர்களே இல்லே! நீ யார்னும் எனக்குப் புரியலே!"

"கூச்சப்படாதீங்க. அப்படித் திரும்பி நின்னு கட்டிகிட்டு ஈரத்தைக் குடுங்க. அதான் உள்ளே கோமணம் கட்டியிருக்கீங்க இல்லே?"

சிவம்பிள்ளைக்கு உதறல் எடுக்க ஆரம்பித்தது. பட்டாம்பிப் பரம்பில் பட்டதிரியும் பாலேக்கல் இல்லத்து நம்பூதிரியும் முன்னொரு காலத்தில் திருசூருக்குப் பூரம் திருவிழாப் பார்க்கப் போனதாகக் கூறப்படும் கதை ஞாபகம் வந்தது. உடனே உஷாரானார்.

"நீ யார்னு இனியும் எனக்குப் பிடிபடவே இல்லே நாராயணி. தயவு செஞ்சு அந்த வேட்டியை திண்ணையிலே வச்சுட்டுப் போ....!" என்றார்.

களுக்கென்று சிரித்தாள் அந்தப் பெண்.

"தயவா கேட்டப்புறம் தடை சொல்லிக் கூடாது. இதோ வச்சுட்டேன்!" வைத்தாள் அவள். அப்போதும் அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை. வைத்து விட்டுத் திரும்பிப் போகும் போது தான் அவளுடைய முதுகும் தொங்கும் முடிச்சுருளையும் தெரிந்தன!



"யக்ஷிணிகளுக்கு முதுகும் முதுகுத் தண்டும் கெடையாதுடா மூதேவி. அவுங்களுக்கு இருக்கறது அவ்வளவும் முன் அழகுதான்...!" என்று திருமேனி எப்போதோ சிருங்காரமாகச் சொன்னது நினைவுக்கு வந்தது!

ஆனால் இவளுக்கு?

பின்னால் அழகு.... அழகு.... அவ்வளவும் அழகு!

இதே வசீகரம் வசமானதால் ஏற்பட்ட குழறுபடி தான் பட்டத்திரிக்கும் நம்பூதிரிக்கும் ஒரு வேளை அன்று பாதித்திருக்குமோ?

'பூரம்' பார்க்கப் போனவர்கள் சாலகுடியைக் கடக்கிறபோதே பொழுது இருட்டுவதை உணர்ந்தார்கள். "இருட்டினப்புறம் நடக்கறது உசிதமில்லே திருமேனி...!" என்றாராம் பட்டத்திரி.

"அதுக்காக இங்கேயே நிற்கறதும் நல்லதில்லியே!" என்றாராம் நம்பூதிரி. "சரி அப்படியே நடப்போம்!"

தீர்மானமாயிற்று. வெகுதூரம் நடந்தும் துளி வெளிச்சத்தைப் பார்க்க அவர்களால் முடியவில்லை. சலித்துப் போன பட்டத்திரி வழி நடைக்கு லகுவாக பேச்சின் ரசத்தை மாற்றினார். கொஞ்சம் விரசமாகவே வெளிப்பட்டது பேச்சு.

இருவரும் கலகலப்பானார்கள். வழிப் பயணத்தின் சிரமம் மறந்தார்கள். அப்போது தான் திரும்பிப் பார்த்த பட்டத்திரி நின்றார்.

"ஏன் நின்கிறீரு?"

"நாம பேசற அவ்வளவையும் கேட்டுண்டு ரெண்டு குட்டிகள் பின்னாலேயே வாரதுகள்! பாரும்யா!" என்றார் நம்பூதிரி.

"அட, ஆமாய்யா, ஆமா!"

சொல்லிவிட்டு அவரும் நின்றார். அதற்குள் அந்தப் பெண்கள் வேகமாக வந்து இருவரின் பக்கத்திலும் நின்றார்கள்.

"நல்ல வேளை- இந்த இருட்டிலே எப்படிப் போகப் போறோம்னு பயந்து பயந்து வந்துட்டிருந்தோம்!" என்றாள் ஒருத்தி.

"அது சரி. நீங்களும் இந்த இருட்டிலே திருவிழா பார்க்கவா புறப்பட்டு வந்தீங்க?" என்றார் பட்டதிரி.

"இல்ல இல்ல... ஒரு சிநேகிதிக்கு இன்னிக்கு முதல் ராத்திரி. எப்படி எப்படி இங்கிதமா இருக்கணும்னு சொல்லிக் கொடுக்கப் போயிருந்தோம்!"

"சொல்லிக் குடுத்தாயா இல்லியா?"

"எனக்கு ஏது முன் பழக்கம்? எல்லாத்தையும் இவதான் விளக்கி விளக்கிச் சொன்னா!" என்று ஒருத்தி இன்னொருத்தியைக் கை நீட்டியதுமே-நம்பூதிரி அவள் பக்கம் திரும்பி "பரவாயில்லியே அனுபவஸ்திக்கு எங்கே வீடு?" என்றார்.

"அதோ தெரியுதே-அந்த மாடி தான்!"

நம்பூரிதியும், பட்டத்திரியும் திரும்பிப் பார்த்தார்கள். ஆச்சரியமாகயிருந்தது. அதுவரை அவர்கள் கவனிக்காத திசையில் அகல் விளக்குகள் எரிந்தன. உடனே பட்டத்திரி நம்பூதிரியின் கையைப் பற்றினார்:

கிசுகிசுத்தார் நம்பூதிரி.

"திருமேனிகள் ரெண்டுபேரும் என்ன இரகசியம் பேசறீங்க?" மிகவும் ஆர்வத்தோடு கேட்டாள் அனுபவஸ்தி. விவரத்தைச் சொன்னார் பட்டத்திரி. உடனே அந்தப் பெண்களிடம் ஒரு பரபரப்புத் தெரிந்தது: "திருமேனிகள் எங்க வீட்லே வந்து தங்கறது நாங்க ஜென்மமெடுத்த புண்ணியமில்லியோ? வாங்க.... வாங்க...." என்றார்கள் இருவரும். அவர்களைத் தொடர்ந்து போகும் போது நம்பூதிரி சொன்னார்:

"அடேயப்பா முதுகே தெரியாத அளவுக்கு எவ்வளவு முடி இவளுக்கு?"

"அப்படின்னா அவதான் உமக்கு!" என்றார் பட்டத்திரி. இருவரும் இரண்டு பெண்களையும் தொடர்ந்து போனார்கள். மாடி ஏறினார்கள்.

மறுநாள் காலையில் அவர்கள் ஏறியது ஆளுக்கு ஒரு மொட்டைப் பனை மரத்தின் மீது என்றும்; அழைத்துப் போன யக்ஷிணிகளுக்கு இருவரும் பலியானார்கள் என்றும் தெரிய வந்தபோது - ஊரே நாறியது! அதுவே தடயமற்ற மரணத்தின் சரித்திரமுமாகி தலைமுறை தலைமுறையாகப் பிரபலமும் ஆகியது!

சிவம்பிள்ளை தனக்குள் சிரித்துக் கொண்டே திண்ணையைப் பார்த்தார்.

"என்னய்யா தானாச் சிரிச்சுட்டிருக்கீரு?" என்று கேட்டது ஹரிதாசனின் குரல்!

"என்ன சிவம்பிள்ளே! இனியும் ஈரத்தோட நின்னா எப்படி? உடம்பை நோயண்ட விடணும்னு ஏதாவது நேர்த்திக் கடனா?" என்று கேட்டபடி நின்றிருந்தார் வைத்தியன் திருமேனி. ஹரிதாசன் விளக்கினார்: "தீயில கருகின எனக்கு உங்க வைத்தியத்தாலே குணமானதோ, அதுக்கப்புறம் பரமேஸ்வரன் இல்லத்திலேருந்து நான் இங்கே ஊழியம் பார்க்க வந்ததோ எதுவுமே தெரியாது இந்தச் சிவம் பிள்ளைக்கு"

"ஒருத்தர் எரிக்கப்பட்டப்புறமும் அந்த ஆத்மாவுக்கு ஏது திருமேனி கூடு?" என்றார் சிவம்பிள்ளை.

"இது காலங்காலமா இருந்துட்டு வர்ர ஒரு தர்க்கம். ஆனா எப்படி எரிஞ்சு போனாலும் ஒரு துளி இயக்கம் இருந்துட்டாக் கூட, அதை வலுவடைய வைத்து பழையபடி மனுஷாளா இயங்க வச்சுடலாங்கறது தான் வைத்தியம்!" என்று அடக்கத்தோடு சொன்னார் வைத்தியன் திருமேனி.

**இருகூரான்**

முற்றும்

# கன்னிராசி கிளின்ரன்



அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் கன்னிராசிக்காரர் போலும். மனிதருக்கு அப்படியொரு ராசி. அமெரிக்க அதிபர் பதவிக்கு முன் பல பெண்களுடன் 'நட்பாக' இருந்ததாகப் பல செய்திகள்.

'அவையெல்லாம் நம்பும்படியாக இல்லையே' என்று கூறியவர்களுக்கு மோனிக்கா லெவின்ஸ்கி மூலம் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. மோனிக்காவால் கிளின்ரனின் செல்வாக்கில் சிறிய சரிவு ஏற்பட்டது உண்மைதான்.

ஆனாலும் பெண்களிடத்தில் கிளின்ரன் மீதுள்ள கவர்ச்சி குறையவில்லைப் போல் இருக்கிறது.

அண்மையில் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் கிளின்ரனின் பிறந்தநாள் விழாவின் போது, இளம் பெண்ணொருவர் வந்து தனது ரீ-சேட்டில் கையொப்பமிடுமாறு கிளின்ரனிடம் கேட்டார்.



கிளின்ரனும் மகிழ்ச்சியுடன் கையெழுத்திட்டார். அடுத்து நடந்த சம்பவம் தான் அனைவரையும் திகைக்க வைத்தது. கையெழுத்துப் பெற்றுக் கொண்ட அப்பெண் சட்டென்று தனது ரீ-சேட்டைக் கழற்றித் தனது தொப்புளில் கையொப்பமிடுமாறு கேட்டாள்.

இதைப் பார்த்து அனைவரும் விக்கித்துப் போய் நிற்க, பக்கத்தில் நின்ற கிளின்ரனின் பாதுகாப்பு அதிகாரிகள் அப்பெண்ணை அப்புறப்படுத்தி விட்டனர்.

# உயிர் காத்த டொல்ஃபின்

இத்தாலி நாட்டின் மேன்ஃபரோட்டானியா என்ற இடத்தில் இருக்கும் அடியாட்ரிக் கடல் பகுதியில் விடுமுறை நாளைக் கழிக்க எண்ணிய 14 வயது சிறுவன் ஒருவன் தனது தந்தையுடன் உல்லாசமாகப் படகுச் சவாரி செய்தான்.

படகில் அப்பாவின் அருகாமை சந்தோஷம் கொடுக்க ஆடிப்பாடினான் அவன். அந்தோ பாவம், அவனது சந்தோஷம் அதிக நேரம் நீடிக்கவில்லை. கடலின் நீரோட்டம் வந்து படகை ஆட்டம் காண வைக்க, பிடிமானம் இல்லாத அந்தச் சிறுவன் கடலில் விழுந்து விட்டான்.

படகில் இருந்த தந்தைக்கோ நீச்சல் தெரியவில்லை. வேறு வழி தெரியாமல் அவர் அழுது கொண்டிருந்தார்.

மூழ்கிப் போனான் மகன். அழுது கொண்டிருந்த தந்தைக்கு, கடலில் இருந்து ஓர் உருவம் மகனைத் தூக்கி வருவது தெரிந்தது. அப்படியே மகனைத் தூக்கி வந்து படகில் போட்டு விட்டுச் சென்ற போது தான் அந்த உருவத்தைக் கவனித்தார் தந்தை.

அது டொல்ஃபின் மனிதனுக்கு அடுத்தபடியாக அதிக அறிவுள்ள டொல்ஃபின், இயற்கை படைத்துள்ள அற்புதமான உயிரினம் என்றால் அது மிகையில்லை.

# கடத்தல் லிஸ்ட்டில் ரஜினி?



கன்னட நடிகர் ராஜ்குமார், சந்தனக் கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்டதை அடுத்து, தமிழக அரசிடம் உளவுத்துறை ஓர் இரகசிய அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அதில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை கடத்தும் திட்டம் இருப்பதாக இந்தியாவில் இருந்து வெளியாகும் 'நக்கீரன்' இதழ் தெரிவித்துள்ளது.

நடிகர் ராஜ்குமாரைக் கடத்திய வீரப்பன், சிறையில் இருக்கும் தனது கூட்டத்தில் உள்ளவர்களை விடுவிக்க நிபந்தனை போட்டிருப்பதைப் போன்று, 'அல்-உம்மா' என்ற இயக்கம் ரஜினியைக் கடத்தி சிறையில் இருக்கும் தனது அமைப்பினரை விடுவிக்க திட்டமிட்டிருப்பதாக அந்த அறிக்கை சொல்கிறது.

இந்தக் கடத்தல் லிஸ்டில் ரஜினியுடன், சென்னை நகர முதல்வரும் கலைஞர் மு.கருணாநிதியின் மகனுமான மு.க.ஸ்டாலினுடைய பெயரும் அந்த அறிக்கையில் உள்ளது.

இந்தத் தகவல்களையும் 'நக்கீரன்' இதழ் வெளியிட்டிருக்கிறது.

# கம்பியூட்டர் நடிக நடிகையர்

அறிவியல் போகும் போக்கைப் பார்த்தால் நடிக, நடிகையர் மூட்டை கட்டிக் கொண்டு போக வேண்டும் போல்தான் இருக்கிறது.


டைனோசர், கொட்சில்லா போன்ற இல்லாத உயிரினங்களை கம்பியூட்டர்மூலம் உருவாக்கி நடிக்க வைக்கும் போது ஏன் கதாநாயகன், கதாநாயகிகளை உருவாக்க முடியாது என்று யோசித்து, அதில் வெற்றியும் பெற்றுவிட்டார்கள் ஹொலிவூட்காரர்கள்.

சுமார் 500 கோடி ரூபாய் (மயங்கி விழுந்து விடாதீர்கள்) செலவில் 'ஃபைனல் ஃபேண்டஸி' என்ற படத்தை இயக்கியுள்ளார் ஹொலிவூட் இயக்குநர் ஹிரனோப் சக்குச்சி என்பவர். படத்தில் வரும் நாயகன், நாயகி இருவரும் உண்மையான மனிதர்கள் கிடையாது.

கம்பியூட்டர் மூலம் வடிவமைக்கப் பட்ட சித் என்ற நாயகனும் அசி என்ற நாயகியும் அப்படத்தில் நடிக்கிறார்கள். இதனால் நடிக நடிகையர் சம்பளம், வேறு தொல்லைகள் இல்லை.

இந்த நாயகன் மற்றும் நாயகியை மக்களுக்குப் பிடித்து விட்டால், இவர்களை வைத்தே மேலும் பல படங்கள் தயாராகும். பிரபல நடிக நடிகைகளை யாரும் சீண்டமாட்டார்கள்.

# நடிகருக்கு விருந்துவைத்த பிரதமர்



ஒரே ஒரு படம் (இந்தி) தான் நடித்தார். அதற்குள் அவரது பெயரைத் தாரக மந்திரமாக உச்சரிக்கின்றனர். இந்தியப் பிரதமர் வாஜ்பாயே இவரை விருந்துக்கு அழைத்துள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்குத் திருமணம் ஆகவில்லை என்பதைப் பலரும் அறிவீர்கள். இவர் பெண் குழந்தையைத் தத்து எடுத்து வளர்த்து வருகிறார். 'தாத்தா, தாத்தா' என்று அழைக்கும் அந்தப் பேத்தி மீது பிரதமருக்குக் கொள்ளைப்பாசம்.

பிரதமரின் பேத்திக்கு அந்த நடிகர் மீது அலாதி பிரியம், தாத்தாவிடம் இந்த நடிகரைப் பற்றி அடிக்கடி சொல்வார். அதுமட்டுமன்றி நடிகரை தங்கள் இல்லத்திற்கு விருந்துண்ண வரவழைக்க வேண்டும் என்று தாத்தாவிடம் பிடிவாதம் பிடித்தார் பேத்தி.

பிரதமரும் பேத்தியின் விருப்பத்திற்கு இணங்கி, இந்த நடிகரை விருந்துண்ண வரவழைத்தார். பிரதமர் வீட்டில் நம்ப முடியாத வியப்புடன் விருந்து உண்டுவிட்டுச் சொன்றார் நடிகர்.


சரி இந்த நடிகர் யார் தெரியுமா? 'கஹோ நா பியார்' படத்தில் அறிமுகமாகியிருக்கும் ஹ்ரித்திக் ரோஷன் தான் இவர். முதல் படத்தின் மூலம் எட்டாத உயரத்திற்குப் போயிருக்கும் இவரது தந்தை ராகேஷ் ரோஷன் நடிகர்-இயக்குநர்.



## அஞ்சலி... அஞ்சலி... தீபாஞ்சலி

கடந்த ஜூலை மாதம் 26ம் திகதி இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையின் முன்னால் மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு ஜொலித்த காட்சி இது.

கடந்த வருடம் இந்தியா-பாகிஸ்தான் எல்லையான கார்கில் யுத்தத்தில் இந்தியப் படையின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் நடத்தப்பட்ட 'தீபாஞ்சலி' தான் இது.



தகவல் பெட்டி

## செல்லப் பிராணியின் உல்லாச விளையாட்டு

பிளாஸ்டிக்கினாலான ஒற்றைக் கட்டுமரம் போன்றதொரு நீரில் மிதக்கக் கூடிய பலகையில் நாயுடன் வழுக்கிச் செல்கிறார் அமெரிக்காவின் கலிஃபோர்னியாவைச் சேர்ந்த ஒருவர். இப்படி நீரைக் கிழித்தபடி வேகமாகச் செல்லும் இந்த விளையாட்டுக்கு சேப்பிங் என்று பெயர்.

எல்.பிரோவ்ஸ் என்ற இந்த கலிஃபோர்னிய வாசி உல்லாசமாக நீரில் வழுக்கிச் செல்லும் போது, தனது செல்லப்பிராணியான போடி என்ற நாயையும் அழைத்துச் செல்வார். அடிக்கடி நாயாரும் இந்த விளையாட்டுக்குச் செல்வதால் அவரும் நன்றாக அந்த விளையாட்டில் ஈடுபடப் பழகி விட்டார். இவ்வளவு இலாவகமாக உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தாலே தெரிகிறதல்லவா?

## யானை வரையும் ஓவியம்

காட்டில் இருந்து யானைகளைப் பிடித்து வந்து, அவற்றைப் பழக்கி எடுத்து பாரமான வேலைகளைச் செய்தும் சேர்க்கஸ்களில் அவற்றைக் கொண்டு வித்தை காட்டியும் வந்தார்கள்.

இப்போது யானைகளைக் கொண்டு புதிய வேலை ஒன்றையும் செய்து வருகின்றார்கள். அதாகப்பட்டது யானைகளைக் கொண்டு ஓவியம் வரைவது.

யானைகள் வரையும் கிறுக்கல் ஓவியங்களை ஆயிரக் கணக்கில்-ஏன் இலட்சக் கணக்கில் கூட வாங்குவதற்கு ஆட்கள் இருக்கிறார்கள்.

யானையின் துதிக்கையால் தூரிகையைப் பிடிக்க வைத்து ஓவியம் வரைய வைக்கிறார் பாகன் ஒருவர்.





## இயற்கை அலங்கரிப்பு

மருதோன்றி பூசிக்கொள்ளும் பழக்கம் இப்பொழுது உலகெங்கும் உள்ள பெண்களிடையே மிகப் பிரபலமாகி விட்டது. இலங்கை, இந்திய நாடுகளில் புகழ்பெற்றிருந்த இந்த இயற்கை அழகுச் சாதனம் இப்போது சீனாவிலும் தொற்றிக் கொண்டுள்ளது. தமக்குப் பிடித்த உருவங்களைத் தமது உடல்களில் வரைவது சீனாவில் தற்போதைய ஃபாஷன்.

இங்கே நங்கையொருத்தி தனது இடுப்பில் மருதோன்றியால் அலங்கரித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறீர்கள்.




## தண்ணீருக்காகப் போராட்டம்

உலகிலேயே அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட நாடுகள் ஆசியக் கண்டத்திலுள்ள சீனா மற்றும் இந்தியா. இந்த இரு நாடுகளிலும் தண்ணீர்ப் பிரச்சனை. சீனாவில் தண்ணீர் விநியோகத்தை அரசு கட்டுப்படுத்தியதால் வீதிகளில் இறங்கி மக்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் குதித்தார்கள். நடுவீதியில் அமர்ந்து சிலர் அமைதியான போராட்டத்தில் ஈடும்படும் காட்சியே இது.

## மினி சினி

★ 'புதியமுகம்' படத்தை இயக்கி நடித்த ரேவதியின் கணவர் சுரேஷ்மேனன் நீண்ட இடைவெளிக்குப் பின் இயக்கி நடிக்கும் படம் 'புதிய பார்வை'. இதுவும் 'புதிய முகம்' படம் போன்று மாறுபட்ட கதையைக் கொண்டது என்கிறார் சுரேஷ்மேனன்.

★ புதிய இயக்குநர்களுக்கு வாய்ப்பளித்து வந்த சிவசக்தி பாண்டியன் தற்போது பாரதிராஜா இயக்கும் 'கடல் பூக்கள்' படத்தைத் தயாரித்துவருகிறார். இதையடுத்து இவர் பிவாச இயக்கும் படமொன்றையும் தயாரிக்கவுள்ளார்.

★ பிரபு-ரோஜா நடித்த 'திருநெல்வேலி' படத்தில் நடித்த உதயா-விந்தியா ஜோடி மறுபடி இணைந்து நடிக்கும் படம் 'பூங்குயிலே'. இதில் இன்னொரு நாயகியும் நடிக்கிறார்.

★ பவித்ரன் இயக்கத்தில் சரத்குமார் இரட்டை வேடத்தில் நடிக்கும் 'புகழ்' படத்தில் பொன்னம்பலத்துடன், இந்தி நடிகர் ஆஷிஷ் வித்யார்த்தியும் வில்லனாக நடிக்கிறார்.

• சுரேஷ்கோபி-மீனா நடித்த 'டிரீம்ஸ்' என்ற மலையாளப்படம் 'தூறவானி' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இப்படத்தில் அப்பாஸ், ரகுமான் ஆகிய இருவரும் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

• 'சாசனம்', 'என்ஜினியர்' ஆகிய படங்கள் வெளிவராததால் தமிழில் நடிப்பதை நிறுத்தி விட்டுத் தனது கம்ப்யூட்டர் நிறுவனத்தில் பிஸியாகி விட்ட அரவிந்தசாமி ஒரு இந்திப் படத்தில் நடிக்கவுள்ளார்.

• 'சேது' பாலா இயக்கும் 'நந்தா' படத்தில் வித்தியாசமான தோற்றத்தில், வித்தியாசமான வேடத்தில் நாயகனாக நடிக்கிறார் சூர்யா. இதில் நாயகியாக மும்பாய் நடிகை ஒருவர் நடிக்கவுள்ளார்.

• முரளிக்கு ஜோடியாக 'கந்தவேல்' படத்தில் நடிக்க ஒப்புக்கொண்ட ஜோதிகா, இப்போது இதில் நடிக்க மறுத்து விட்டார். அத்துடன் இப்படத்திற்காக முற்பணமாக வாங்கிய பெரும் தொகையையும் திருப்பிக் கொடுத்து விட்டார்.

## சுகன்யாவின் சவால்

ஒரு காலத்தில் தமிழில் நம்பர் ஒன்னாக இருந்து தற்போது காணாமல் போயிருக்கும் சுகன்யா நடித்த மொழிமாற்றுப் படம் ஒன்று 'நாகலட்சுமி' என்ற பெயரில் வெளியாகவுள்ளது.

ஒரு சில மலையாளப் படங்களில் நடித்து வரும் சுகன்யா இப்போது 'டில்லி' என்ற மலையாளப்படத்தில் நடித்து வருகிறார். 'டில்லி' படத்தின் தமிழ் உரிமையை வாங்கி அதைத் தமிழில் மொழிமாற்றி வெளியிட இருக்கிறார்.

'இந்தப்படத்திற்கு பின் மீண்டும் தமிழில் ஒரு ரவுண்ட் வராவிட்டால் என் பெயரை மாற்றிக் கொள்கிறேன்' என்று சவால் விட்டுள்ளார் சுகன்யா.

## பிரசாந்த் கண்டிப்பு

சில பிரச்சனைகளால் தடைப்பட்டு, மறுபடி தொடங்கப்பட்டிருக்கும் 'ஸ்டார்' படத்தில் இயக்குநர் பிரவீன் காந்த் நடிப்பதாக இருந்தது.

பிரவீன் காந்தை அப் படத்தில் நடிக்கக்கூடாது என்று கண்டிப்புடன் கூறி விட்டார் பிரசாந்த்.

## அடியாள் அஜித்

'அமர்க்களம்' படத்தில் அடியாள் வேடத்தில் அசத்திய அஜித், தற்போது நடித்து வரும் 'தீனா' படத்திலும் அடியாளாக நடிக்கிறார். முருகதாஸ் என்ற புதிய இயக்குநர் இயக்கும் இப்படத்தில் மலையாள நடிகர் சுரேஷ் கோபியும் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காதோடு சொல்லுகிறோம்

ஊர்வன, பறப்பன போன்றவற்றை வைத்துப் படமெடுத்து இயக்குவதில் சாதனை படைத்த 'நாராயண்' இயக்குநர் தனது சமீபத்திய பட வெற்றிகளுக்கு இரண்டு எழுத்துப் பூ நடிகையின் ராசிதான் காரணம் என்கிறாராம். இதனால் தான் தனது படங்களில் நடிகையை நிரந்தர நாயகியாக்கி வருகிறாராம்.

முன்னாள் தமிழக அமைச்சர் ஒருவருடன் நெருக்கமாக இருந்த மூக்கழகி நடிகை படவாய்ப்புகளின்றி வீட்டில் இருந்தாலும், இவர் கையில் பணத்திற்குப் பஞ்சமில்லையாம். எப்படி? அடிக்கடி தொழிலதிபர்கள் சகிதம் வெளிநாடு சென்று வருகிறாராம். அதனால் தான் அவ்வளவு பணம் கொட்டுகிறதாம்.

நீலாம்பரி நடிகை சூப்பர் நட்சத்திரத்துடன் இணைந்து நடித்த படத்திற்குப் பின் வாய்ப்புகள் வந்து குவியும் என்று எதிர்பார்த்து ஏமாந்து போய், ஒரு பாடல்காட்சியில் கவர்ச்சி நடனமாட ஒப்புக் கொண்டிருக்கிறாராம். இரண்டு படங்களில் ஒரு பாடலுக்கு நடனமாடிய நடிகை இன்னொரு படமொன்றிலும் கவர்ச்சி நடனமாட ஒப்புக்கொண்டுள்ளாராம்.

## பாரதிராஜா உற்சாகம்

பாரதிராஜா தான் இயக்கி வரும் 'கடல் பூக்கள்' படத்தின், இது... எடுக்கப்பட்ட காட்சிகளைப் போட்டுப்பார்த்து பெரும் உற்சாகத்தில்... கிறார். காரணம் படம் நன்றாக வந்திருப்பதுடன், முரளி ந... நடித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

## கமல் வேடத்தில் அருண்குமா...

வி.சி.வடிவுடையான் என்ற புதிய இயக்குநர், அருண்குமார் கதா... கனாக நடிக்கும் 'புத்தன்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இந்தப்பட... முதலில் கமல் நடிக்க இருந்தார் என்றால் நம்புவீர்களா? நம்பித்... ஆக வேண்டும். மேலே படியுங்கள்.

இப்படத்தின் கதையை தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரியிடம் செ... வடிவுடையான் வாய்ப்புக் கேட்டார். கதை பிடித்துப் போன செ... கதை நன்றாக இருக்கிறது. இதில் கமல் நடித்தால் நன்றாக இரு... எனவே அவரிடம் போய் கதையைச் சொல்லிச் சம்மதம் வாங்குங்கள் என...

பெரிய நடிகரிடம் எப்படிப் போவது என்று தயங்கிய வடிவுடை... கமலிடம் கதையைச் சொல்லாமல் அருண்குமாரிடம் கதையைச் செ... சம்மதம் வாங்கிவிட்டார்.


ஆனந்தராஜ்-சங்கீதா
படம்: நிலம் பார்க்கும் நில...


...ராஜ-ரவளி
படம்: உன்னைக் கண் தேடுதே

## கமலுடன் ஜோடி சேரும் சிம்ரான்

'தெனாலி' படத்தில் கமலுக்கு ஜோடியாக முதலில் நடிக்க இருந்தவர் சிம்ரான். ஏனோ அதில் சிம்ரானால் நடிக்க முடியாமல் போய் விட்டது. இப்போது கமலுக்கு ஜோடியாக நடிக்க இருக்கிறார் சிம்ரான்.

நடிகரும் இயக்குநருமான மௌலி இயக்கும் இப்படத்தை பி.எல்.தேனப்பன் தயாரிக்கவுள்ளார். இதற்கு முன் தேனப்பன் 'அவ்வைசண்முகி' படத்தைத் தயாரித்துள்ளார்.

'தெனாலி' படத்தில் கமலுடன் நடிக்க முடியாமல் போன மலையாள நடிகர் மோகன்லாலும் இப்படத்தில் நடிப்பார் எனத் தெரிகிறது.

## சுந்தர்.சியின் சென்டிமெண்ட்

'முறைமாமன்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானாலும் சுந்தர்.சிக்கு பெயர் பெற்றுக் கொடுத்தது 'உள்ளத்தை அள்ளித்தா'. இதன் பின் இவர் எடுத்த மேட்டுக்குடியைத் தவிர சில படங்கள் பெரிதாக ஓடவில்லை.

'உன்னைத்தேடி', 'உனக்காக எல்லாம் உனக்காக' ஆகியவை வெற்றி பெற்றன. இதன் பின் வெளியான படங்களும் சரியாகப் போகவில்லை.

இப்போது வெளிவந்திருக்கும் 'உன்னைக் கண் தேடுதே' சுமாராகப் போய்க் கொண்டிருக்கிறது. 'உ' சென்டிமெண்ட் தனக்கு சரியாக வருவதால், கார்த்திக்-பிரபுதேவா நடிக்க அடுத்து இயக்கும் படத்திற்கு 'உள்ளம் கொள்ளை போகுதே' என்று பெயரிட்டுள்ளார் சுந்தர்.சி.

## ரௌடி பாதிரியார்?

'கந்தவேல்' படத்தில் முரளி கதாநாயகனாக நடிக்கிறார். முதலில் இந்த வாய்ப்பு பார்த்திபனுக்குத்தான் போனது. சட்டத்தைக் கையில் எடுத்து கொள்ளும் வில்லனின் கொடுமை தாங்காமல் ரௌடியாக மாறும் பாதிரியார் என்ற சர்ச்சைக்குரிய வேடம் என்றபடியால் மறுத்து விட்டார் பார்த்திபன்.

இந்தச் சர்ச்சைக்குரிய வேடத்தில் இப்போது முரளி நடித்து வருகிறார். என்னாகுமோ?


புதுமுகம் மான்யா
படம்: சிங்கத்தமிழன்

## 'ஆளவந்தானி'ல் படைவீரன்

கலைப்புலி தாணு தயாரிக்க சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் கமல் நடிக்கும் படம் 'ஆளவந்தான்'. இப்படத்தில் கமல் கமாண்டோ எனப்படும் அதிரடிப்படை வீரர் வேடத்தில் நடிக்கிறாராம்.

படவிளம்பரத்திற்காக கமாண்டோ கெட்-அப்பில் கமலை பல கோணங்களில் புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். ஆரம்ப விளம்பரங்களுக்காக கலைப்புலி தாணு சுமார் பத்து இலட்சம் இந்திய ரூபாய்களைச் செலவிட்டிருக்கிறார்.

கலைப்புலி தாணுவை விளம்பரப்புலி என்று கூறுவது நூற்றுக்கு நூறு சரிதான்.

## மறுபடியும் நக்மா

தங்கை ஜோதிகாவுக்கு மெய்ப்பாதுகாவலராக படப்பிடிப்புத் தளங்களுக்குச் சென்று கொண்டிருக்கும் நக்மாவுக்கும் மீண்டும் தமிழ் திரையுலகில் கால் பதிக்க ஆசை.

இதற்காகப் பலவிதத்திலும் முயற்சித்த நக்மாவுக்குப் பலன் கிடைத்து விட்டது. ஒரு முன்னணி நடிகருக்கு இரண்டாவது ஜோடியாக நடிக்கிறார்.


என்ன படம்? யார் கதாநாயகன் என்பது தெரியவில்லை.

## மந்த்ராவுக்கு உதவி

மந்த்ரா தனது நண்பரும் பட... தயாரிப்பாளருமான அசோக் சாம்ரா... மூலம் தயாரித்து வந்த 'கல் வெட்டு' பட... பணப்பிரச்சனையால் பாதியிலே நிறு... த்தப்பட்டு விட்டது.

முரளி-திவ்யா உன்னி ஜோடியா... நடிக்கும் இந்தப்படத்தைப் பற்றி பட... தயாரிப்புக்குக் கடனாகப் பணம் கொடு... க்கும் ஜெமினி என்ற பைனான்ஸியரிட... கூறியிருக்கிறார் மந்த்ரா.

ஜெமினியும் மறுபேச்சின்றி மந்த்ரா... கேட்ட பணத்தைக் கொடுக்க, பட... பிடிப்பு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது...




# அம்மா–மகள் நடிகைகளுக்குள் லடாய்!

திரையுலக மறுபக்கம் (168)

ஒரு காலத்தில் அந்த நான்கெழுத்துப் பெயரையுடைய நடிகை மிகப் பிரபலமாக இருந்தார். சூப்பர் நட்சத்திரம் மற்றும் சூப்பர் நடிகர் உட்பட பலருடன் ஜோடிகளாக நடித்தவர். தசரத மன்னனின் மூன்றாவது மனைவியின் பெயரையுடையவர்.

கடந்த பல வருடங்களாக அம்மா, அக்கா, அண்ணி வேடங்களில் நடித்து வருகிறார். இவரது இரண்டாவது கணவர் கன்னடத்தில் ஒரு பிரபலமான இயக்குநர். இதனால் பல கன்னடப்படங்களில் நடித்துவருகிறார்.

வாரிசு நடிகர், நடிகையர் திரையுலகில் கோலோச்சி வருவதைக் கண்ட இந்த நடிகைக்கு இரண்டெழுத்துப் பெயரையுடைய தன் மகளை நடிகையாக்க ஆசைப்பட்டார்.

இவருடன் பல படங்களில் ஜோடி சேர்ந்து நடித்த மார்க்கண்டேய நடிகரின் மகனுடன் 'ராசா' என்று முடிவடையும் பெயருடைய படத்தில் மகளை நடிக்க ஏற்பாடு செய்தார். படத்தின் படப்பூஜை ஆரவாரமாக நடந்தேறியது. யார் கண்பட்டதோ தெரியவில்லை. அப்படம் பூஜையுடன் நின்றுவிட்டது. எனினும் மகளை 'வீரமாக நடக்கும்' பெயருடைய படத்தில் அறிமுகமாக்கினார். படத்தின் ஹீரோ பிரபல நடிகராக இருந்தும் படம் பப் படமாகி விட்டது.

முதல் படமே படுதோல்வி அடைந்ததால் எதிர்பார்த்த படவாய்ப்புகள் வரவில்லை. மகளுக்குச் சினிமா சரிவராது என்று நினைத்த நடிகை உடனே திருமணம் செய்து வைக்கத்திட்டமிட்டார்.

ஆனால் மகளுக்கோ சினிமாவில் எப்படியாவது முன்னுக்கு வர ஆசை. தன்னை அறிமுகப் படுத்திய 'செல்வச் செழிப்பான' பெயருடைய மூன்றெழுத்து இயக்குநரது அன்புக்குரியவரானார் மகள் நடிகை.

நடிகையின் அனுசரிப்புக்களால் அசந்து போன மூன்றெழுத்து இயக்குநர் தனது குருவான 'இமய' இயக்குநர் இயக்கும் 'கடல்' சம்பந்தப்பட்ட படத்திலும், 'இமய' இயக்குநரின் மைத்துனர் இயக்கும் 'ஏழுநிறங்களைக்' கொண்ட படத்திலும் நடிக்க நடிகைக்குச் சிபாரிசு செய்தார்.

இப்படி மகள், 'சினிமாவில் வாய்ப்புத் தேட எதையும் இழக்கத் தயார்' எனப் பிடிவாதம் பிடிக்க, இவ்வளவு காலமும் சினிமாவில் குப்பை கொட்டிய தாய்க்கு இங்கு நடக்கும் சங்கதிகள் தெரிந்து மறுத்திருக்கிறார்.

ஆனால் இளங்கன்றுக்குப் பயமும் தெரியவில்லை. நடக்கப் போகும் விபரீதமும் புரியவில்லை. இதனால் அம்மாவுக்கும் மகளுக்கும் லடாய். விளைவு அம்மா கர்நாடகத்தில், மகள் தமிழ்நாட்டில்.

மகள் நடிகை சினிமாவில் நடிப்பதற்கு அம்மா நடிகையின் தம்பிதான் உறுதுணையாக இருந்து வருகிறார்.

## சின்னத்திரை சில்மிஷங்கள்

இப்போது பெரிய திரையை விட சின்னதிரை தொடர்பான கிசுகிசுக்கள் தான் அதிகமாகப் பேசப்படுகின்றன. இந்தக் கிசுகிசுக்களில் அதிகமாகப் பேசப்படுகின்றவர் நிலவிழி அழகி நடிகை.

இந்தப் 'பூவ' நடிகை இயக்குநர்களின் கட்டளைக்கு மறுத்தால், மறுநாள் படப்பிடிப்பில் நடிகைக்குப் பதிலாக வேறொரு நடிகை நடித்துக் கொண்டிருப்பார்.

இதைப்போல், சின்னத்திரையில் சில்மிஷங்கள் அதிகமாகி விட்டன. இதே நிலை தொடருமானால் பெரிய திரையை சின்னத் திரை சாப்பிட்டு விடும்.



## 'கமாண்டர் ஜெயந்தி'யாக விஜயசாந்தி

விஜயசாந்தி தெலுங்கில் நடித்த 'வைஜெயந்தி' என்ற படம் அங்கு பிய்த்துக் கொண்டு ஓடுகிறது. மிகுந்த பொருட் செலவில் தயாராகியிருக்கும் இப்படத்தைத் தமிழில் 'கமாண்டர் ஜெயந்தி' என்ற பெயரில் மொழி மாற்றம் செய்கின்றனர்.

வெளிநாட்டின் ஆதரவுடன் தீவிரவாதிகள் நடத்தும் அராஜகங்களை எதிர்த்துப் போராடும் வீராங்கனையாக நடிக்கிறார் விஜயசாந்தி.

இப்படத்தின் கதை, திரைக்கதை எழுதி இயக்கியுள்ளார் கே.எஸ். நாகேஸ்வரராவ். சுஜாதா, பிருதிவி ராஜ், ராமிரெட்டி, ராக்கி ஆகியோருடன வித்தியாச வில்லியாக நடித்துள்ளார் வடிவுக்கரசி.

## தமிழுக்கு வரும் 'சித்திரம்'

ஆந்திர மாநிலத்தின் மிகப்பெரிய தொழிலதிபரும் பிரபல தெலுங்குப் பத்திரிகையான 'ஈநாடு' உரிமையாளரும், ராமோஜிராவ் ஃபிலிம் சிட்டி உரிமையாளருமான ராமோஜிராவ் 50க்கும் மேற்பட்ட தெலுங்குப் படங்களைத் தயாரித்துள்ளார்.

சமீபத்தில் இவர் தயாரித்த 'சித்ரம்' என்ற தெலுங்குப் படம் தமிழில் 'சித்திரம்' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வருகிறது.

உதய்கிரண் கதாநாயகனாகவும் கதாநாயகியாக 'மின்னலே' பட நாயகி ரீமா சென்னும் நடித்துள்ளனர். தமிழுக்காக மனோரமா, மணிவண்ணன், செந்தில், சார்லி ஆகியோர் நடிக்கும் காட்சிகளைச் சேர்த்துப் படமாக்கவுள்ளனர்.

'உதயம்' பட இயக்குநர் ராம் கோபால் வர்மாவிடம் உதவியாளராகப் பணியாற்றிய தேஜா என்பவர் கதை, திரைக்கதை அமைத்து இப்படத்தை இயக்கியுள்ளார்.

முகப்பில் / அர்ஜுன் பாவனா



பிரேம்-ராதிகா சௌத்ரி படம்: குரோதம் 2

## சத்யராஜ் ந(அ)டிக்கும் 'லூட்டி'

சத்யராஜ் நடித்து வெற்றிபெற்ற 'என்னம்மாக் கண்ணு' படத்தைத் தயாரித்தவர் பிசுதுரை. இவர் தயாரிக்கும் இரண்டாவது படம் தான் 'லூட்டி'. இதிலும் சத்யராஜ் தான் கதாநாயகன்.

உத்தமனாகவும் உலகமகா ஜொள்ளனாகவும் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் சத்யராஜ். இவருக்கு ஜோடிகளாக ரோஜாவும், மும்தாஜும் நடிக்கிறார்கள். இவர்களுடன் வடிவேல், செந்தில், ஜனகராஜ், விவேக், சின்னி ஜெயந்த், தாமு, ஐஸ்வர்யா, பொன்னம்பலம் உட்பட பலர் நடிக்கின்றனர்.

தேவாவின் இசையில், வாலி பாடல்கள் எழுத பி.கண்ணன் ஒளிப்பதிவு செய்கிறார். கதை, திரைக்கதை அமைத்து இயக்குபவர் பரமேஷ்வர் என்ற புதிய இயக்குநர்.

## ராஹாவான சுவாதி

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என எந்த மொழியிலும் சுவாதிக்குப் படவாய்ப்புகள் இல்லை. இதனால் இவர் தெலுங்குப் படவுலகிற்கு வாய்ப்புத் தேடிச் சென்றுள்ளார். அதற்காகத் தன் பெயரையும் ராஹா என்று மாற்றிக் கொண்டுள்ளார். இப்படித் தான் முன்னர் பூனைக் கண் நடிகை சிவரஞ்சனியும் தனது பெயரை ஊஹா என்று மாற்றிக் கொண்டு தெலுங்கில் நடிக்கிறார்.

## சத்தான கதையில் சரத்

'பெரியண்ணா' படத்திற்குப் பின் எஸ்.ஏ. சந்திரசேகரன் (விஜயின் அப்பாவேதான்) படம் ஒன்றை இயக்கப்போகிறார். லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் பிரமாண்டமாகத் தயாரிக்கும் இப்படத்தில் சரத்குமார் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

சரத்குமாருக்குப் பெரும் வெற்றியைத் தேடித் தரும் வகையில் கதை அமைத்திருக்கிறாராம் சந்திரசேகரன்.



## எம்முயிர் உறவுகளுக்கு...

சுதந்திரம் சுடுகாட்டிற்கு
விருந்தாக்கப்பட்டதனால்
நாம் இன்றும்
இங்கேயே வாழ்கின்றோம்!
***
அவர்கள் கைகளை உயர்த்தியது
அவசரகாலத்திற்கு ஆதரவாய்...!
எங்களது
கால்கள் நகர்த்தப்பட்டது
கம்பி கூடுகளுக்குள்!
***
அவர்களுக்காய் வழங்கப்பட்டது
ஆசனமும் அதிகாரமும்;
எமக்காய் மறுக்கப்பட்டது
மனிதாபிமானமும்
மனச்சாட்சிகளும்!
***
உறவுகளே
இளைஞர்களின் இதயச்சவால்
எப்போதுமே எழுந்து நிற்க
ஏன் இன்னமும்
வார்த்தை ஜாலங்களை நம்பி
வாக்குகளை வழங்கி
வாழ்க்கை உணவை
நாசம் செய்கிறீர்கள்...?
***
குட்டிமணி, தங்கத்துரை
வெலிக்கடையில் வீழ்த்தப்பட்ட
கறைபடிந்த கதையதுவே
களுத்துறை சிறையினிலும்
அரங்கேற்றப்பட்டபோதும்
***
நம்மினத்தின் நங்கையர்கள்,
நடுத்தெருவில்
துரியோதனர்களால்
துயிலுரியப்பட்ட போதும்
துயில் கொண்ட இவர்களுக்கா
வாக்குகளை வழங்கப் போகிறீர்கள்....?
***
பாலவந்தத்தின் பாஷையிலே
பயங்கர வாதியாக்கப்பட்ட
எம்மைப் பார்த்து
விதியின் பெயர்சொல்லி
விழிநீரை இறைக்காது
விழிப்பாக வாழுங்கள்!
***
ஏகாதிபத்தியத்தின்
ஏவலாளிகளாகிய
இவர்களால்
உங்கள் உணர்வுகள்
ஏலத்திற்கு செல்லாதிருக்கவாவது.....!

சி. துஷ்யந்தன்–'டி'பிரிவு,
அரசியல் கைதி–களுத்துறை
(சிறைச்சாலை).

## அஸ்தமனங்களை மட்டும்....!

நாங்கள் அகதிகள்!
எங்களைப் பற்றியும்
கொஞ்சம் சிந்தியுங்கள்!
***
எத்தனை காலமாய்
நாம் நாடோடிகளாய் நாதியற்று
அலைகிறோம்...!
***
எமது மனச் சுமைகள்
வளர்ந்து நிற்கின்றன...
இந்தியாவின் சனத்தொகைபோல!
***
உள்ளமோ தணலாய்
கொதிக்கிறது–சஹாராவின்
மணற்றரை போல!
***
இதயம் வெடித்துச்
சிதறி விட்டது–ஃபிரான்ஸின்
கொன்கோட் விமானம் போல...!
***
எதிர்காலக் கனவுகள்
எங்கோ அடி ஆழத்திற்குள்...
ரஷ்யாவின் நீர்மூழ்கி போல!
***
வாழ்வின் இலக்குகள்
சரிகின்றன–இலங்கையின்
பொருளாதாரம் போல...!
***
எமது வயதுகளை விட
நாம் சந்தித்த
சிதைவுகளே அதிகம்!
***
சொந்த வீடுகளை விட
எமக்கு அகதி முகாம்களின்
பரிச்சயமே அதிகம்!
***
நாம் இருந்த காலங்களைவிட
இடம் பெயர்ந்த
காலங்களே அதிகம்!
***
நாம் விடியல்களைக்
கண்டதில்லை;
தினந்தோறும் அஸ்தமனங்களையே
தரிசித்துக் கொண்டிருக்கிறோம்!

'இலக்கியா'–யாழ்ப்பாணம்.

## தேன்கிண்ணம்

## குப்புற விழும் ஞாபகங்கள்

அடியேய்
நான்
அந்தகார
இருட்டுக்குள்
இப்போது!
***
தினம்
எனக்குள்
குந்திக்கொண்டிருப்பது
உன்
குப்புறவிழும்
ஞாபகங்களும்
உன்
பழைய புராணங்களும்!
***
என்
கனவுகள்
கரியாகிப்போனது!
அதற்கான
விறகுகள்
உன்
கண்களுக்குள்ளே
அடுக்கப்பட்டிருந்தன:
***
அடியே
என்
இயலாமையை
பயன்படுத்தி
நீ
ஓடிவிட்டாய்.....!
***
நேற்றைய
நம்
ஆங்கில முத்தங்களை
நேசித்தவாறு
எனது
இன்றைய ஜீவிதம்...!
***
என்
ரத்தக்கட்டியோடு
இறுகிப் போனது
உன்
டயானா புன்னகை
மட்டுமல்ல,
உன்
பொய்துவமும் தான்!

கிண்ணியா–ஏ. நஸ்புள்ளா

## தா(ய்ப்) பாசம்

குழந்தையின் நித்திரைக்காக
தாலாட்டு மறைந்து
இசைத்தட்டு
சுழன்றது.
அவனின் பயணம்
தாயின் தோளில் அல்ல;
தள்ளுவண்டியில்
நகர்ந்தது.
அவனின் பொழுது
போக்குக்கென
தொலைக் காட்சியில்
'சினிமா'
அவனது பசிக்காய்
தாய்ப்பால் அல்ல;
புட்டிப்பால் ஊட்டினாள்
வேலைக்காரி!
நவீன யுகத்தில்
வளரும் இக்குழந்தை
நாளை யாரிடம்
பாசம் காட்டப்போகிறது?

நகீதன்–நயினை.

## தேர்தல் களம்

வேட்பாளர்களின் தேர்தல்
கூப்பாடு
'கட் அவுட்' 'போஸ்ரர்கள்'
அவர்களின் கோட்பாடு
பெருந்தொகைப் பணம்
அதற்கு ஏற்பாடு,
எமக்கில்லை ஒரு நேரச் சாப்பாடு,
தேர்தல் வரையே அவர்கள் நம்பாடு,
எமைச் சுற்றி வருவர் அன்போடு,
கதிரை ஏறியதும் அவர்கள் தம்பாடு,
அலைய வேண்டும்
அவர்கள் பின் நாய்ப்பாடு,
நாம் இங்கு தவிப்போடு,
நீங்கள் அங்கு தண்ணியோடு
இருக்க வேண்டும்; இனியும்
வேட்பாளர் விழிப்போடு–இல்லையேல்
நாம் வருவோம் உமைத்தேடி
கம்போடு....!

த. இரவிவர்மன்–வவுனியா.

## பொய்யர்களின் பெரு விழா

இதோ,
வந்துவிட்டது
பொய்யர்களின்
பொதுத் தேர்தல்...!
***
இனி
இங்கே
வாக்குறுதிகள்
வாரி வழங்கப்படும்
வகை தொகையின்றி...!
***
சிறியவர்
பெரியவர் பேதமின்றி,
சிரித்துப் பேசி
சினேகம் கொண்டு–தம்
சீட்டைக் காத்துக் கொள்ள
சில்லறைகளையும்
வீசியெறிவார்கள்–நம்
அரசியல் தலைவர்கள்....!
சிறுபான்மை
பெரும்பான்மை என்ற பேதம் மறந்து
அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆண்டி வேஷமும்
போடுவார்கள்–நம்
வேட்பாளர் பெருமக்கள்
***
காடையர்களை
கைக்குள் போட்டுக் கொண்டு
கள்ளவோட்டில்
கரைசேரவும்
காத்திருப்பார்கள்–நம்
கண்ணியமான வேட்பாளர்கள்...!
***
தேர்தல் வந்துவிட்டால்
சமாதானம் என்பது
இவர்களின் வாயில்
உச்சரிக்கப்படும்
தாரக மந்திரம்...
ஆட்சிக்கு வந்தாலும்
அடியோடு மறந்து போவதும்
இந்த சமாதானமே...!
***
தேர்தல்கள்
வருகிறது
வருடாவருடம்
வரும் திருவிழா போல...
வாக்குறுதிகள் மட்டும்
நிறைவேற்றாமல் கிடக்கிறது
வருடக் கணக்கில்.....,
காத்துக் கிடக்கும்
நம் அகதி மக்களைப் போல்....
***
தேர்தல்கள்
வந்து போனாலும்
ஆட்சி கை மாறிப் போனாலும்
அதிகார துஷ்பிரயோகமும்
அடாவடித்தனமும்.
***
ஆட்கொள்ளும்
மிருகத்தனமும்
அடங்கும் வரை–எங்கள்
வயிற்றுப் பசியும்
வாழ்க்கைச் சுதந்திரமும்
உங்களால்
நிறைவேற்ற முடியாது
நிராசையாகவே இருக்கும்...!

ஆர். யுவராஜ்–கண்டி.

## யார் இவர்?



கடந்த 43 வருடங்களுக்கும் மேலாகத் திரையுலகில் பாடி வரும் பின்னணிப் பாடகி இவர். இன்றும் கூட தனது குரல் வளம் மாறாது பாடிவரும் இவர் யார் என்று தெரிகிறதா?

தெரியாதவர்கள் யாரென்று தெரிந்து கொள்ளவும், தெரிந்தவர்கள் தங்கள் பதிலைச் சரிபார்க்கவும் புரட்டுங்கள் பக்கம் 18ஐ.

## பேனா நண்பர்கள்



பெயர்: ஐ. முஹமட்,
வயது: 20
முகவரி: செல்வநகர்-09
தோப்பூர்.
பொழுது போக்கு:
வானொலி. பத்திரிகை.



பெயர்: ஏன். நுபைலா,
வயது: 25
முகவரி: 49, ஸ்ரீராகுல மாவத்தை, களுபோவில,
தெஹிவளை
பொழுது போக்கு:
வானொலி.

## இந்தவாரம் உங்கள் பலன்

01.10.2000 முதல் 07.10.2000வரை

ஜோதிடர் 'கானா'

**மேடம் :**
சிற்சில பிரச்சனைகள் குறைவு பெறும். எடுத்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். பெண்களுக்கு சுபவிடயங்கள் கைகூடும். சகோதர வழி, உதவிகள் கிடைக்கும். ஆபரண, சொகுசு பொருட்கள் விற்பனை செய்வோருக்கும், உயர்கல்வி மாணவருக்கும் உயர்வான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 03, 05.

**இடபம் :**
எடுத்த முயற்சிகள் தோல்வியடையும். குடும்பத்தில் பன்மடங்கு பிரச்சனைகள் பெருகிக் கொள்வதுடன் மரியாதைகெடும். தொழில் பண விடயம் சிக்கலாகும். கல்வி பயில்வோர், சிறுகுழந்தைகளுக்கு ஓரளவுக்கு முன்னேற்றம் வரும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 02, 07.

**மிதுனம் :**
தொழில் மாறுபாடு ஏற்படும். வெளியோரால் உதவிகள் அமையும். பணவசதிகள் ஏற்படும். தொழில் நுட்பத் துறை சார்ந்தோருக்கு. ஏற்றமுடன் பயண வசதிகள் நல்ல சுபகரும விடயம் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 04, 07.

**கடகம் :**
நண்பர்களால் உதவிகள் அமையும். தூரதேச உறவினர்கள் பணவசதிகள் பெருக்கூடிய பலன் அமையும். பரீட்சைகள் கல்வி முன்னேற்றம். பிரிந்த காதலர்கள் ஒன்று சேர்வதுடன் உடல் நோய் துன்ப மாற்றம் ஏற்படும். பூச நட்சத்திரருக்கு பயண வெற்றிகள் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : இளம்மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 03, 06.

**சிம்மம் :**
தொழில் பலசித்தியும் தூர இடத்துச் செய்திகளால் நன்மைகளும் ஏற்படும். பணவரவுண்டு. கடன் பிரச் சனைகள் பைசலாகும். பெண்களுக்கு காதல், திருமணவிடயங்கள் கூடிவரும். மகநட்சத்திரர். நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 01, 05.

**கன்னி :**
மனதில் கவலை வரும். செய்தொழில் கேடும் கணவரால் குடும்பப்பிரச்சனைகளும் ஏற்படும். மாமன் வழித்தொடர்புகளால் உதவிகள் ஏதேனும் கிடைக்கும். கல்வி, பரீட்சைகள் வெற்றியைக் கொடுக்கும். அத்த நட்சத்திர பெண்கள் அவதானமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 04, 06.

**துலாம் :**
மனதில் உள்ள குழப்பங்கள் நீங்கும். பணவரவும் தொழிலில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். காதலர் முடிவுகள் நன்றாக அமையும். சகோதர வழி உதவியும், வணிகத்துறையில் உள்ளோருக்கு சிறப்புகளும் கிடைக்கும். சித்திரை சுவாதிப்பெண்களுக்கு சிறப்பான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 01, 05.

**விருட்சிகம் :**
எதிலும் நம்பிக்கை வளமும் நிம்மதியும் கிடைக்கும். பிள்ளைகளால் நற்செய்தியும் பணவசதியும் தூர இடத்து பயண நிலையும் பெண்களுக்கு சுபகரும விடயமும் கைகூடும். அனுஷ நட்சத்திரருக்கு இடமாற்றமும், பணவசதியும் நற்செய்தியும் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 03, 06.

**தனுசு :**
கல்வித்துறை முன்னேற்றமும் தடைப்பட்ட விவாகப் பிரச்சனைகள் சுமுகமாக முடிவுறும். தோல், உடல் நோய்கள் வந்துபோகும். அலைச்சலும் செலவும் ஏற்படும். மூல நட்சத்திர பெண்களுக்கு வார இறுதியில் அதிஷ்டம் தரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 01, 03.

**மகரம் :**
சனி, வியாழன் நன்றாக இல்லாத பார்வையால் குடும்பத்தில் பிரச்சனைகள் வலுவடையும். வெளி எதிர்ப்புக்கள் கூடும். உடல் நிலை நோய் துன்ப அமைப்பு வரப்பெறும். எதிலும் மந்தகதிதான் காணப்படும். திருவோணக்காரர் அவதானமாக இருக்கவேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, வியாழன்.
அதிஷ்ட நிறம் : பழுப்பு; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 02, 07.

**கும்பம் :**
எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பண விரயப் பயமுறுத்தல், கெட்டவர்களின் சேர்க்கை. மருத்துவச் செலவுடன் தாய்வழி அலைச்சல். பிள்ளைகளால் செலவுகள். கல்வி, தொழில் நன்றாக இருக்காது. எதிலும் முன்னெச்சரிக்கையாக செயற்படுவது நன்று.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளம்கறுப்பு; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 04, 05.

**மீனம் :**
பயண ஆரம்ப நிலையுடன் பொருள் பணவரவுகள் ஏற்படும். எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். தூர இடத்து உறவினர் சகோதரர் வழி உதவிகள் கிடைக்கும். உத்திரட்டாதி, ரேவதிக்காரருக்கு இடமாற்றம் காட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 05, 06.

## நில்–கவனி–முன்னேறு

நம்மில் எத்தனை பேருக்கு வாழ்க்கை இனிக்கிறது? தொண்ணூற்றெட்டு சதவீதம் பேர் கசந்த வாழ்க்கைதான் வாழ்கின்றனர். இது ஏன்? காரணம் என்ன?

அவர்களுக்கு வாழத் தெரியவில்லை. தாங்கள் மனக்கண்ணில் காணும் ஒரு மாயவாத உலகை நினைத்துக் கொண்டே வெளி வாழ்க்கையைப் பாழ்படுத்துகிறார்கள்.



இவர்களுக்கு எங்கிருந்து இந்த ஒப்பாரி வாதங்கள் கிடைக்கின்றன?- சொந்த அனுபவத்திலிருந்து கொஞ்சம், 'சோகமே வாழ்க்கை'என்னும் தத்துவ முத்துக்களை உதிர்க்கும் திரைப்படங்கள், திரைப்படப் பாடல்கள் முதலியவற்றிலிருந்துதான்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போதும், நமது வாழ்க்கையின் பிரச்சனைகளால் நாம் அழுத்தப்படும்போதும் 'வாழ்க்கை மாயம்' என்ற தத்துவத்தை ஏற்றுக் கொள்கிறோம். இதன் விளைவுகள் என்னென்ன?

நமது வாழ்க்கையில் முன்னேற நாமே தடைகளை விதித்துக் கொள்கிறோம். 'விதிதான் எல்லாம் என்று நினைத்துக் கொண்டு முன்னேறுவதற்கு எந்த முயற்சியும் செய்யாமல் மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்தால் உலகம், சோம்பேறிகளின் கூடாரமாகிவிடும். எந்தத் துறையும் வளராது.

எதிலும் தீவிரமாக முனைப்புடன் ஈடுபடும் போது வெற்றியோ தோல்வியோ கிடைக்கிறது. வெற்றி பெற்றால் மகிழ்ச்சி. தோல்வியடைந்தால் அனுபவம். இதில் கவலைப்பட என்ன இருக்கிறது?

உதாரணமாக, பழுதடைந்த நமது குடையொன்று நம் கண்ணில் படுகிறது. "இதைச் சரிசெய்ய வேண்டும் என்று யாருக்கும் தோன்றவே இல்லையா?" என்று அதைப் பார்க்கும் போதெல்லாம் கறுவிக் கொண்டிருந்தால் மன இறுக்கம் (Tension) தான் மிஞ்சும்.

ஒரு ஞாயிற்றுக்கிழமையில் நீங்களே உட்கார்ந்து அந்தக் குடையை சரி செய்யுங்களேன்! ஒரு பிரச்சனை ஒழிந்தது! வீண்மன இறுக்கம் மிச்சம்!

வாழ்க்கையும் அதுபோலதான்! எந்தப் பிரச்சனையையும் நேரடியாக எதிர்கொள்ளும் போது ஒரு பக்குவம் கிடைக்கிறது. பிரச்சனையும் முடிகிறது.

தன்னலம் கருதாத சமூக சேவகர்களைப் பாருங்கள்! சிரித்த முகத்துடனேயே இருப்பார்கள். ஏனெனில் அவர்கள் தமது சொந்தப் பிரச்சனைகளை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. சமுதாயத்தின் பிரச்சனைகளை மட்டுமே அவர்கள் காண்கிறார்கள். எனவே அவர்கள் பிஸியாக இருந்தாலும் நிறைவாக வாழ்கிறார்கள்.

எனவே எதைப் பற்றியும் அலட்டிக் கொள்ளாமல் துணிந்து இறங்குங்கள். வாழ்வது ஒருமுறை! ஆனது ஆகட்டும்! வாழ்க்கை வாழ்வதற்கே!

# எலுமிச்சம் பழங்களும் அவற்றின் அழகுப் பயன்களும்



முகத்தை அழகுபடுத்த கிறீம், பவுடர் என்று அழகுசாதனப் பொருட்களைத் தேடிக் கொண்டிருக்கிறீர்களா?

அவற்றையெல்லாம் விட தலைசிறந்த அழகுசாதனப் பொருளாகத் திகழ்கிறது எலுமிச்சம்பழம்.

நீங்கள் எப்படிப்பட்ட தோல் உடையவராக இருந்தாலும் அது உங்களை மின்னலாகப் பளிச்சிட வைக்கும்.

அழகுசாதனப் பொருளாகத் திகழும் இந்த எலுமிச்சையில் ஏராளமான மருத்துவக் குணங்களும் உள்ளன.

உங்கள் அழகை மெருகூட்ட இதோ எலுமிச்சைம்பழ அழகுக் குறிப்புகள்:

## முகத்தில் பரு இருக்கிறதா?

இரவு படுக்கைக்குச் செல்வதற்கு முன்பு எலுமிச்சம்பழச்சாற்றில் சிறிது பால் கலந்து முகத்தில் நன்றாகத் தேய்த்துத் தடவுங்கள். காலையில் எழுந்தவுடன் குளிர்ந்த நீரில் முகம் கழுவி விட்டு, அப்படியே கண்ணாடியில் பாருங்கள். 'அட, இது நான் தானா?' என அசந்து போவீர்கள்.

## எண்ணெய் வழியும் முகமா?

கவலையை விடுங்கள். வெறும் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து எண்ணெய்ப்பசையுள்ள தோல் பகுதிகளில் தடவ, முகம் மின்னுவதை உணர்வீர்கள்.



## மிருதுவான தோல் உடையவரா?

இந்தக் கலவையை முகத்தில் தடவினால் மேலும் 'பளிச்' ஆகி விடுவீர்கள். ஒரு மேசைக் கரண்டி தேன் எடுத்துக் கொள்ளுங்கள். அதில் 1/2 மேசைக்கரண்டி எலுமிச்சம்பழச்சாறை விட்டுக் கலவையாக்கி முகத்தில் தடவுங்கள். கண்களின் அருகே இந்தக் கலவையைப்படாதவாறு தடவுவது நல்லது.

இக்கலவையைத் தடவிய பிறகு 20 நிமிடங்கள் அப்படியே வைத்திருங்கள். அதன் பிறகு குளிர்ந்த நீரில் கழுவ, 'ஆஹா என்ன அழகு?' என்பீர்கள்.

## முகச்சுருக்கம் மறைய...

எலுமிச்சம்பழத்தைப் பாதியாக வெட்டி அதனை முகத்தில் தடவி, தண்ணீரில் கழுவி வர, முகச்சுருக்கம் மறைந்து விடும்.

முகச் சுருக்கத்திற்கு இன்னொரு வழியும் இருக்கிறது. குளிப்பதற்கு முன்பு, அரிசிமாவுடன் எலுமிச்சம்பழச்சாற்றினைக் கலந்து முகத்தில் கிறீம் போல தடவிக் கொள்ளுங்கள் இக்கலவை காய்ந்து சிறிது நேரமான பிறகு குளியுங்கள்.



## தலைமுடி உதிர்கிறதா?

எலுமிச்சம்பழச்சாற்றுடன் ஒலிவ் எண்ணெய் கலந்து எடுத்துக் கொள்ளுங்கள் இந்தக் கலவையை தலை முடியின் அடிப்பாகம் வரை நன்றாகத் தேய்த்து விடுங்கள்.

இதனைத் தேய்த்த பிறகு ஒரு மணிநேரம் அப்படியே வைத்திருந்து, பின்னர் குளியுங்கள். இந்த எலுமிச்சம் கலவை தலையில் உள்ள ஈர், பேன் போன்றவைகளை அடியோடு ஒழித்துவிடும். அத்துடன் தலை முடி வளர்ச்சிக்கும் வழி வகுக்கும்.

தலை முடி உதிர்வையும், முடியில் உள்ள பிசுபிசுப்பையும் நீக்கி, பஞ்சு போல் மிருதுவாகவும் மாற்றி விடுகிறது.

## வாய் துர்நாற்றம் அடிக்கிறதா?

ஒரு டம்ளர் தண்ணீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து கொள்ளுங்கள். அதனைத் தினமும் காலை, இரவு வேளைகளில் வாயில் ஊற்றிக் கொஞ்ச நேரம் வைத்திருங்கள். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றிக் கொப்பளித்தால் வாய்நாற்றம் போயே போச்சு.

## உடம்பைக் குறைக்க வேண்டுமா?

காலையில் எழுந்தவுடன் தேனீரில் எலும்மிச்சம் சாற்றைக் கலந்து தினமும் குடித்து வாருங்கள். உடல் இளைத்து அழகுச் சிலையாகி விடுவீர்கள்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

* ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.
* கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
* ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை IH

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

தொழில்:.......................

கையொப்பம்:.......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 07-10-2000

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது

56 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

பெட்டி கியூரி கூறியபடி, அப்பெண்மணியின் காரில் ஏறி அமர்வதற்காக கதவுகளை திறந்து பார்த்தாள், அவையெல்லாமே மூடப்பட்டிருந்தன. கடுமழை பெய்து கொண்டிருந்தமையால், தெப்பமாக நனைந்து வண்டியின் அருகிலே நின்று கொண்டாள்.

கிளின்ரனின் அந்தரங்கச் செயலாளரான பெட்டி கியூரி ஒரு மறதிக்காரப் பெண்மணி; அவருக்கு வேலைப்பளு சற்று அதிகம் தான். மோனிக்காவை வரச் சொன்னதை பற்றி திடீரென நினைத்துக் கொண்டு வண்டி நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு மழையில் நனைந்த வண்ணமே வந்தார். தன்னுடைய குடையையோ, மழைக்கோட்டையோ எடுத்துக் கொண்டு வரவும் கூட மறந்திருந்தார்.

மோனிக்காவிடம் கியூரி மன்னிப்புக் கேட்டுவிட்டு, அவளையும் அழைத்துக் கொண்டு மழைக்குள் நனைந்த வண்ணமே ஓவல் அலுவலகத்தைச் சென்றடைந்தார். எவரும் தங்களை அவதானிக்கிறார்களா? என்பதை நோட்டமிட்டவண்ணமே சென்ற இருவரும் அலுவலகத்தின் பின் புறம் போய்ச் சேர்ந்தனர். பின்புறக் கதவு பூட்டப்பட்டிருந்தமையினால் தன்னுடைய அலுவலகத்துக்குச் சென்று, மோனிக்கா வந்திருப்பதை கிளின்ரனுக்குத் தெரிவிப்பதாகக் கூறிக் கொண்டு கியூரி போய் விட்டாள். இருள் சூழ்ந்த இந்தப் பகுதியில் மோனிக்கா தனிமையில் நின்று கொண்டிருந்தாள். வெகுநேரமாகியும் கதவு திறபடவுமில்லை; கிளின்ரன் வரவுமில்லை. செய்வதறியாது மோனிக்கா மனம் பேதலித்து நின்று கொண்டிருந்தாள்.

ஏறத்தாழ முக்கால் மணிநேரம் சென்ற பின்னர்தான் கதவு திறந்தது. கிளின்ரன் வந்து அவளை அணைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

இந்தச் சந்தர்ப்பத்திலும் பெட்டி கியூரியின் மறதிதான் மோனிக்காவை அவ்வளவு நேரம் காக்கவைத்திருக்கிறது. அடுத்தநாள் மோனிக்காவுடன் தொடர்பு கொண்ட கியூரி, முதல் நாளன்று அவள் வந்திருப்பதை உடனடியாகத் தனக்கு அறிவிக்காமல் விட்டமையினால் கிளின்ரன் தன்னைக் கடித்து கொண்டார் என்றும் வருத்தத்துடன் கூறினார்.

கிளின்ரன் அடிக்கடி பயன்படுத்தும் மூலிகை மருந்து சிலவற்றை அவருக்காக வாங்கிவருவதற்கு வாக்களித்திருந்த பெட்டி கியூரி, அவற்றையும் மறதியின் காரணமாக மறந்துவிட்டமையினால், அதே மருந்துக்களைத் தனக்காக வாங்கிக் கொண்டு வரும்படி மோனிக்காவிடம் கூறியிருந்தார் கிளின்ரன். மோனிக்கா அம்மருந்துகளை மறக்காமல் வாங்கிக் கொண்டு சென்று கிளின்ரனிடம் கொடுத்தாள். அத்துடன் மற்றுமொரு மாத்திரைச் சரயையும் அவரிடம் மோனிக்கா கொடுத்தாள். அந்த மாத்திரை எதற்காகப் பயன்படுத்துவது என்று புரியாமல் மோனிக்காவின் முகத்தை கிளின்ரன் பார்த்தார். அம் மாத்திரைகளைச் சுற்றியிருந்த சரையின் குறிப்பிட்ட ஒரு பகுதியை அவரிடம் காட்டினாள் மோனிக்கா. அதனைப் படித்துப் பார்த்த கிளின்ரன் அர்த்த புஷ்டியுடன் அவளைப் பார்த்தார். இருவரும் வெகுநேரம் வரை சிரித்து மகிழ்ந்தனர்.

அன்று கிளின்ரன் மோனிக்காவுடன் அதிக நேரம் செலவிட முடியாத நிலையிலிருந்தார். மெக்ஸிக்கோ நாட்டின் ஜனாதிபதி ஏர்னெஸ்டோ ஷெடில்லோ என்பவருக்கு கிளின்ரன் அன்றிரவு அரசமுறைவிருந்து கொடுப்பதற்கான ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமையினால் அதற்குச் செல்வதற்காக அவர் அவசரப்பட்டார். இதனால் இருவருக்குமே சற்று ஏமாற்றம் ஏற்பட்டது. அவசரமாக சில கருத்துக்களை மோனிக்கா கிளின்ரனிடம் கூறினாள்.

மோனிக்கா அவளுக்கான ஒரு வேலையைத் தேடித் தரும் பொறுப்பினை கிளின்ரனிடமிருந்து நீக்கிவிட்டதாகவும் இதனால் எந்தவிதமான சாக்கு போக்கும் சொல்லாமல் தன்னை அடிக்கடி சந்தித்து உறவாட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அவ்வாறான ஏற்பாடு செய்யாவிட்டால் தான் மிகவும் மனம் வருந்தி பயித்தியம் பிடிக்க வேண்டிய நிலையேற்பட்டு விடக் கூட என்று கூறினாள்.

"உங்களை ஒன்றேயொன்று மட்டும் கேட்கிறேன்; என்னை அடிக்கடி அழைத்து அரவணைத்து அமைதிப் படுத்துங்கள். இதற்குமேல் அதிகமாக எதனையும் நான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை!" என்று நாத்தழுதழுக்கக் கூறினாள்.

அன்றையச் சந்திப்பு இருவருக்கும் சற்று ஏமாற்றத்தையே அளித்தது. கண்கலங்கிய நிலையில் மோனிக்கா விடை பெற்றாள்.

காகிதத்தில் குறிப்புகளை எழுதி கிளின்ரனுக்கு அனுப்பி வைப்பதைவிட நாடாக்களில் தனது உள்ளக்கிடக்கையைப் அவ்வப்போது பதிவு செய்து கிளின்ரனுக்கு அனுப்பி வைப்பதே நல்லது என்று மோனிக்கா தீர்மானித்தாள். அன்றைய சந்திப்பின் பின்னர் அவளுக்கு இந்த எண்ணம் தோன்றியது. அன்றிரவே வீடு சென்றதும் கிளுகிளுப்பூட்டும் வார்த்தைகளைத் தொகுத்து ஒரு நாடாவில் ஒலிப்பதிவு செய்தாள்.

தன்னுடைய உள்ளக்கிடக்கையை உணர்ச்சி ததும்ப கிளின்ரனுக்கு தன் குரலால் கூறியிருந்த வார்த்தைகளைக் கேட்டதும் கிளின்ரன் உடனடியாகத் தன்னை அவரிடம் வருமாறு அழைப்பார் என்று தான் மோனிக்கா கருதியிருந்தாள். அன்று முழுவதும் அவள் காத்திருந்தும் அவள் நம்பிக்கை வீணாகிப் போனமையினால் அவளால் தாங்கிக் கொள்ள முடியாத ஏமாற்றம்தான் எஞ்சியது. மோனிக்காவின் ஒலிப்பதிவு நாடாக்கள் கிடைத்ததும் அவற்றை கிளின்ரன் மேலோட்டமாகப் பார்த்தாரே தவிர, அவற்றில் என்ன அடங்கியிருக்கிறது என்பதைக் கேட்டுப்பார்க்க

## ஏமாற்றத்தால் ஏற்பட்ட தடுமாற்றம்



முடியவில்லை. கியூரியுடன் தொடர்பு கொண்டு தான் மிகவும் கடுமையான வேலையில் இருப்பதனால் ஒலிப்பதிவு நாடாக்களை கேட்டுப்பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று மோனிக்காவிடம் கூறுமாறு சொன்னார்.

அடுத்தநாள் காலையில் ஒவல் அலுவலகத்தில் கிளின்ரனின் எடுபிடி வேலைகளைக் கவனிக்கும் பயானி நில்விஸ் என்பவரைத் தொடர்பு கொண்டு முதல் நாள் கிளின்ரன் எத்தகைய அவசரப்பணிகளில் ஈடுபட்டிருந்தார் என்று விசாரித்தாள் மோனிக்கா. பயானி கூறிய பதில் மோனிக்காவை வாய் விட்டு அலறவைத்து விட்டது. கிளின்ரன் ஏர்ஸ்பைன் பவல்ஸ் என்பவருடன் வெள்ளை மாளிகையிலுள்ள ஜனாதிபதிக்கான பிரத்தியேக திரையரங்கில் படம் பார்த்துக் கொண்டிருந்தார் என்று தகவல் கூறப்பட்டது. இதனை அறிந்த மோனிக்கா பயித்தியம் பிடித்தவள் போலானாள். உடனடியாக பெட்டி கியூரியை தொலைபேசியில் தொடர்புகொண்டு, "இத்தகைய கொடுமையை ஏன் எனக்கு செய்கிறீர்கள்?" என்று கேட்டுவிட்டு தொலைபேசியை ஓங்கி அறைந்தாள். கியூரிக்கு மோனிக்காவின் பரிதாப நிலை புரிந்து விட்டது. சற்று பொறுமையாக இருந்துவிட்டு மோனிக்காவை சமாதானப் படுத்துவதற்காக, தொலைபேசியில் அழைப்பு எடுத்தாள்.

கியூரிதான் தனக்கு அழைப்பெடுத்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டதும் அவரைப் பேசவிடாமல் மோனிக்கா பலத்த சத்தத்தில், "உடனடியாகவே என்னுடைய பெற்றோருக்கு எல்லா விவரங்களையும் கூறப்போகிறேன். உங்களைப் போன்றவர்களுடன் இனிமேல் எனக்கு எதுவித தொடர்புமில்லை! இவ்வாறு ஏமாற்றப்படுவதை என்னால் சகிக்க முடியாது. நீங்கள் இது வரை எனக்குச் செய்த நன்மைகளுக்காகவும் தீமைகளுக்காகவும் நன்றி;" என்று கூறி தொலை பேசியை வைத்துவிட்டாள்.

(வருவாள்)

அடுத்தநாட் காலையிலும் அதே போன்று மற்றுமொரு நாடாவில் ஒலிப்பதிவு செய்தாள். அவற்றை 'கூரியர்' சேவை மூலம் கிளின்ரனுக்கு அனுப்புவதற்கு முன்னர் லிண்டா ட்ரிப்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஒலிப்பதிவு நாடாக்கள் இரண்டையும் லிண்டாவுக்குப் போட்டுக் காட்டினாள். வழமைபோல் லிண்டா அவற்றைத் தனது ஒலிப்பதிவுக் கருவியில் அப்படியே பதிவு செய்து கொண்டாள்.

அடுத்தநாள் நவம்பர் 21ம் திகதி வெள்ளிக்கிழமை காலை இரு நாடாக்களையும் 'கூரியர்' சேவை மூலம் பெட்டி கியூரிக்கு அனுப்பி வைத்தாள். தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மறந்து போகாமல் உடனடியாகவே நாடாக்களை கிளின்ரனிடம் கொடுத்து விடுமாறு கேட்டுக் கொண்டாள். அன்று முழுவதும் மோனிக்கா தன்னறையை விட்டு எங்குமே நகரவில்லை. ஒலிப்பதிவு நாடாக்களைக் கேட்டு விட்டு தனக்கு எப்படியாவது தொலைபேசி அழைப்பு எடுப்பார் என்று காத்திருந்தாள். அடிக்கடி கியூரிக்கு தொலைபேசி மூலம் நினைவு படுத்தினாள். கியூரி, கிளின்ரன் மிகவும் அவசரமான பணிகளில் கவனம் செலுத்திக் கொண்டிப்பதனால் தன்னால் ஒலிப்பதிவு நாடாக்களை கொடுக்க முடியவில்லை என்று' கூறினார்.

மோனிக்கா இந்தத் தாமதித்தலினால் மிகவும் ஏமாற்றமடைந்தாள். விம்மி விம்மியழுதாள். இறுதியில் இரவு ஏழு மணியளவில் தான் ஒலிப்பதிவு நாடாக்கள் கிளின்ரனின் கையில் போய்ச் சேர்ந்தன.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### கிரான் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | செல்வத்தம்பி பூரணம், வைரவர் கோயில் வீதி, கிரான் |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





# தேவை ஒரு குழந்தை

சூங்-யாங் என்ற ஊரில் மாஸா என்றொரு பெண் இருந்தாள்.

அவள் ஒரு பேராசைக்காரி. அதேசமயம் கருமியும் கூட.

ஒரு சிறு துரும்பைக் கூட யாருக்கும் கொடுத்து உதவமாட்டாள்.

அவளுக்கு திருமணமாகி வெகு காலமாகியும். குழந்தையே இல்லை.

ஒரு குழந்தைக்காக ஏங்கித் தவித்தாள்.

நாட்கள் இப்படியே செல்லத் துவங்கின.

ஒரு நாள்–

சூங்-யாங் ஊருக்கு, அயல் நாட்டிலிருந்து 'மீட்சூ' என்ற யோகி ஒருவர் வந்தார்.

மக்களுக்கு நல் உபதேசங்களை வழங்கினார். தன்னால் இயன்ற உதவிகளை மக்களுக்குச் செய்தார்.

அவர் ஒரு தெய்வீகத் தன்மை பொருந்தியவர், அவரது ஆசீர்வாதம் கிடைத்தால் நினைத்தது நடக்கும், துன்பங்கள் விலகும். இன்பங்கள் வந்து சேரும் என்று மக்கள் அனைவரும் நம்பினார்கள்.

நல்ல நம்பிக்கைதான் வாழ்க்கை.

இதனால் மீட்சூ யோகியின் வருகைக்கு பின்னால் சூங்-யாங் ஊர் மக்கள் ஒரு குறையுமின்றி வாழ்ந்தார்கள்.

இந்த செய்தியை மாஸாவும் அறிந்தாள். அவரிடம் சென்று குறைகளை எடுத்துக் கூறினால், அதை அவர் விலக்கி, சுபீட்சத்தை கொடுப்பார் என்று பக்கத்து வீட்டுப் பெண் வேறு அவளிடம் கூற,

மாஸா முடிவு செய்து கொண்டாள்.

'ஒரு நாள் யோகி மீட்சூவை சந்தித்து தனக்கு குழந்தை இல்லாத குறையைச் சொல்லி, அது நீங்கள் நிச்சயம் வழி கேட்டு வரவேண்டும்,' என்ற முடிவுதான் அது.

நினைத்திருந்தது போலவே ஒருநாள் மாஸா யோகி 'மீட்சூ'வின் குடிலுக்கு சென்றாள்.

அப்போது அவர் கடவுளை நினைத்து தியானம் செய்து கொண்டிருந்தார்.

தனது கால்களில் விழும் மாஸாவை பார்த்ததும் தியானத்தை நிறுத்திய யோகி மீட்சூ, "பெண்ணே! எழுந்திரு. உனக்கு என்ன வேண்டும்?" என்று அன்பொழுக கேட்டார்.

"ஐயா! மகா யோகியே! எனக்கு திருமணமாகி பல ஆண்டுகள் ஆகின்றன. எனக்கு இதுவரை குழந்தையே இல்லை. இது பெரிய மனக்குறையாக எனக்கு இருக்கிறது. தாங்கள் தான் எனது இக் குறை நீங்க வழி கூற வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டாள்.

அவளைக் கூர்ந்து பார்த்த யோகி மீட்சூ யோசித்தபடி எழுந்தார். குடிலுக்குள் சென்று ஒரு பிடி கடலையை எடுத்துக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தார்.

"பெண்ணே! இந்தக் கடலையைச் சாப் பிட்டுக் கொண்டே இங்கே உட்கார்ந்திரு. இதோ நான் வந்து விடுகிறேன்," என்று கூறிவிட்டு மறுபடி தனது குடிலுக்குள் போய்விட்டார் யோகி மீட்சூ.

கடலையைப் பெற்றுக் கொண்ட மாஸா அந்த இடத்திலேயே அமர்ந்து கடலைத் தோலை உரித்து உரித்து பருப்புகளைச் சாப்பிடத் தொடங்கினாள்.

அப்போது

நான்கைந்து குழந்தைகள் விளையாடிக் கொண்டே அவள் இருந்த பக்கம் ஓடிவந்தன. அவற்றில் ஒரு குழந்தை அவள் கடலைகளை சாப்பிட்டு கொண்டிருப்பதைப் பார்த்து விட்டது.

உடனே அது மாஸாவிடம் ஓடி வந்து ஒரு கையை நீட்டியது.

அந்தக் குழந்தையை வெறித்துப் பார்த் மாஸா,

"சாமியார் கொடுத்ததோ ஒரு பிடிக் கடலை எனக்கே பத்தாது.

போ, போ, கடலையெல்லாம் இல்லை!" என்று கோபத்துடன் கத்தினாள்.

அவள் கோபத்தைக் கண்டு பயந்த அந்தக் குழந்தை, பயந்து போய் அங்கிருந்து நகர்ந்து சென்று விட்டது.


இந்தக் காட்சியை மறைவிலிருந்து பார்த்தபடி இருந்த யோகி மீட்சூ, ஒரு தீர்க்கமான மனதுடன் அவளிடம் வந்தார்.


"பெண்ணே! பாவம் சிறு குழந்தை. கடலை கேட்டு கையை நீட்டியது. ஆனால், கடுஞ்சொற்களால் அதை விரட்டி அடித்து விட்டாயே. குழந்தைகள் மீது இயற்கையிலேயே அன்பில்லாத உனக்கு கடவுள் எப்படி குழந்தையைக் கொடுப்பார்?

உனக்கு குழநதை பாசம் இருக்கிறதா என்பதை சோதிக்கவே, உன்னிடம் கடலைகளைக் கொடுத்து, குழந்தையையும் அனுப்பி வைத்தேன். நீ ஒரு குழந்தையற்ற, பேராசை பிடித்த, கஞ்சத்தனமான அருவருக்கத்தக்க பெண் என்பதை, நீ அந்தக் குழந்தையிடம் நடந்து கொண்டதை வைத்து தெரிந்து கொண்டேன்.

இப்படிப்பட்ட அரக்கக் குணம் கொண்ட உனக்கு குழந்தையே பிறக்காது. போய் வா!" என்று யோகி மீட்சூ தீர்க்கமாகக் கூற,


'எனது நம்பிக்கைக்கு நானே எமனாக ஆகிவிட்டேன்,' என்று நினைத்து அழுதபடி தனது வீட்டை நோக்கி நடந்தாள் மாஸா.





பந்தும் பேட்டும் டெய்ஸியின் கையில் கிடைக்காதவாறு ஒளித்து வைத்துவிட்டான் டென்னி. அதை எடுப்பதற்கு டெய்ஸிக்கு வழிகாட்டுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **07.10.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **362**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 360

**பரிசுக்குரியவர்:**
ப.விஜயவதனன்,
விபுலானந்த மத்திய கல்லூரி, காரைதீவு-08.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ச.ரேவதி,<br>தமிழ்மகா வித்தியாலயம்,தேசிய பாடசாலை பசறை. | பாத்திமா றுஸ்கா நளீர்,<br>மத்திய கல்லூரி,(தேசிய பாடசாலை) மூதூர். |
| பாத்திமா நஸ்ஹா ரிஸ்வி,<br>முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | எஸ்.கவிஷாலினி,<br>இந்து தேசிய கல்லூரி,புஸ்ஸல்லாவ. |
| டிலான் சிவா,<br>சென் தோமஸ் கல்லூரி, கல்கிசை. | ஏ.எல்.ஜவ்சா,<br>அல்அக்சா, தேசிய பாடசாலை, கல்பிட்டி. |
| ச.விதூஷன்,<br>புனிதமிக்கல் கல்லூரி, மட்டக்களப்பு. | மொஹமட் தானிஷ்,<br>மடவளை வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| ஜெ.துவாரகன்,<br>பாலர் பாடசாலை, அவிசாவலை. | செ.எ.யூட்பெஸ்போக்,<br>கற்குளி, வவுனியா. |

## குயிட்சல் பறவை



படத்தில் இருக்கும் பறவையின் பெயர் குயிட்சல். மத்திய மற்றும் தென்அமெரிக்காவில் இவை வசிக்கின்றன. 'அவகேடோஸ்' என்ற பழங்கள் தான் இவற்றின் பிரதான உணவு.

மாம்பழங்களைப் போன்று காணப்படும் 'அவகேடோஸ்' பழங்கள் முட்டைகளை உற்பத்தி செய்ய உதவுகின்றன. பச்சை நிறமாகவும், பெரிய அளவிலும் காணப்படும் 'அவகேடோஸ்' பழங்கள் காகம் அளவில் இருக்கும். குயிட்சல் பறவை அப்படியே விழுங்கி விடும் இதற்கு அவ்வளவு பெரிய வாய்.

இதன் காரணமாக குயிட்சல் பறவைகள் 'அவகேடோஸ்' மரங்கள் உள்ள இடங்களில் கூடுகளைக் கட்டிக் கொண்டு இம்மரங்களைச் சுற்றியே காணப்படும்.

## நாடுகளும் அவற்றின் பிரதான உற்பத்திகளும்

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | - அமெரிக்கா/ஜப்பான். | தங்கம் | - தென் ஆபிரிக்கா. |
| கம்பளி | - அவுஸ்திரேலியா. | கோப்பி | - பிரேசில். |
| தேயிலை | - இலங்கை | ரப்பர் | - மலேசியா. |
| செம்பு | - சிலி. | வெள்ளி | - மெக்சிகோ. |
| கொக்கோ | - கானா. | சீனி/ சுருட்டு | - கியூபா. |
| சணல் | - இந்தியா/ பங்களாதேஷ். | போதைவஸ்துக்கள் | - கொலம்பியா. |
| நெல் | - சீனா. | தகரம் | - மலேசியா. |
| பிளாஸ்ரிக் | - ஐ.அமெரிக்கா. | தொகுப்பு | |
| பட்டு | - சீனா. | | |

மு.சக்திலேந்திரன்-கொழும்பு.

## செய்து பாருங்கள்

உங்களுக்குப் பிடித்த ட்ரம் செய்து பார்ப்போம்.

**தேவையான பொருட்கள்:**

வெற்று டின், பலூன் ஒன்று, கொஞ்சம் பெயின்ட், மெல்லிய குச்சிகள் இரண்டு.

**செய்முறை:**

* டின்னுக்கு பளிச்சென்று இருக்கும்படி பெயிண்ட் அடியுங்கள்.
* பலூனை ஊதி உடைத்துத் தட்டையான துண்டை எடுத்துக் கொள்ளுங்கள். டின்னின் திறந்த பகுதியின் மீது சற்று இறுக்கமாக இழுத்துப் போட்டுக் கட்டுங்கள்.
* இப்போது ட்ரம் தயார். குச்சிகளைக் கொண்டு அடிக்க வேண்டியதுதான். (கவனம் கொஞ்சம் வேகமாக அடித்தால் விளையாட்டு ட்ரம் உடைந்து விடும்.)





"யாருமேவா இல்லை?"

"மூணு இருக்கு. நீங்க பாருங்க!"

"சரி!"

கேட் திறக்கப்பட்டு அவன் உள்ளே வந்ததும் உடனடியாக பூட்டப்பட்டது. தாத்தா அவனை ஹாலுக்கு அழைத்து வந்தார். ஏதோ ஓர் அறையில் பெண்களின் சிரிப்பு சத்தமும், கேரம் போர்டின் காய்கள் அடிக்கப்படும் சத்தமும் சன்னமாகக் கேட்டது.

"உடனே போய்டுவீங்களா இல்லை....?"

"நைட்டு பூரா வேணும்!"

"அதிகமாகுமே!"

"எவ்வளவு?"

"ரெண்டாயிரம் ஆகும்!"

"ஆள்பார்த்துட்டுச் சொல்றனே!"

"கண்டிப்பா!" என்றவர், "ஏய்! துரை!" என்று குரல் கொடுக்க, கேரம் ஆட்டம் நின்றது. சிரிப்புகள் நின்றன. கொலுசுச் சத்தம் துவங்கி பெரிதாகி.....

மூன்று பேரும் வந்து நின்றார்கள். மூவருமே பாவடை, ஜாக்கெட் மட்டும் அணிந்திருந்தார்கள். இவனைப் பார்த்து விட்டு தங்களுக்குள் பேசிக்கொள்ள.....

ரஞ்சித் மூவரில் ஒருத்தியை தேர்ந்தெடுத்தான்.

"முழுப் பணமும் இப்பவே தரணும்!" என்றார் தாத்தா. தந்தான்.

"போலீஸ் தொந்தரவு எதுவும்...?"

"சேச்சே! இருபது வருஷமா தொழில்ல இருக்கோம். தைரியமா போங்க. எங்களுக்குத் தெரியாத போலீஸா..... நிம்மதியா இருங்க. சுரேகா, கூட்டிட்டுப் போ!"

சுரேகா ஹோட்டல் ரூம்பாய் போல அவன் சூட்கேஸை வாங்கிக் கொண்டாள். முன் நடக்க.... தொடர்ந்தான்.

அந்தத் தனியறைக்குள் வந்ததும், "மல்லிகைப் பூ பிடிக்குமா? வெச்சிக்கிட்டு

## 15

வரட்டுமா?" என்றாள்.

"பரவாயில்லை!" என்றதும் கதவை மூடினாள்.

"சுரேகா, உனக்கு இதுதான் வீடா?" என்றான் பெட்டியை கட்டில் மேல் வைத்துத் திறந்த படி.

"இல்லை. வளசரவாக்கம். இங்க வந்துட்டுப் போவேன்!"

அவன் உடை மாற்ற கைலி எடுத்த போது, அவன் சூட்கேசுக்குள் இருந்த கைத்துப்பாக்கியைப் பார்த்த அவள் விழிகள் அகன்றன.

லுங்கி கட்டிக்கொண்டு பேண்ட்டைக் கழற்றிய படி, "நீ எத்தனையாவது வரைக்கும் படிச்சிருக்கே சுரேகா? அஞ்சாவதா?" என்றான் ரஞ்சித்.

சுரேகாவிடமிருந்து பதில் இல்லாமல் போகவே திரும்பிப் பார்த்தான்.

அவள் பார்வை கட்டில் மேல் திறந்தநிலையில் இருந்த சூட்கேசுக்குள் கைத்துப்பாக்கியின் மேல் உறைந்திருந்ததை கவனித்தான்.

அவள் அருகில் வந்தான். தோளில் கை வைத்தான்.

"பயந்துட்டியா? நான் கொலைகாரன் இல்லை!"

"பின்னே எதுக்கு?"

"ஒரு பாதுகாப்புக்காக!"

மீண்டும் அவள் விழிகள் அதைப் பார்த்தன.

ரஞ்சித் சூட்கேசை மூடினான். அவள் கையைப் பற்றி தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டான்.

"டென்ஷன் ஆகாதே! சுரேகா நிஜப் பேரா?"

"இல்லை!" என்றாள்.

"நிஜப் பேரு என்ன?"

"அது ஏதோ சாமி பேரு. அதைப் போய் எதுக்கு இப்போ சொல்லிக்கிட்டு... சுரேகான்னு கூப்புடுங்க... எனக்கும் இதுவே பழகிடுச்சி."

"என்ன படிச்சிருக்கேன்னு கேட்டேனே...!"

அவளின் ஒவ்வொரு விரலாக சொடக்கெடுத்தான்.

"பிளஸ்ட்டு!"

"பரவால்லையே. சிகரெட் பிடிப்பியா?"

"ம்!" என்றாள்.

இரண்டு சிகரெட்டுகளை ஒரே சமயத்தில் பற்றவைத்து ஒன்றை அவளிடம் கெடுத்தான். வாங்கி புகை இழுத்து மரியாதைக்காக சைடில் முகம் திருப்பி புகையை வெளியேற்றினாள்.

"உங்க பேரு!"

"ர..." என்று துவங்கியவன் எச்சரிக்கையாக, "ரங்கசாமி!" என்றான்.

"பெங்களூர்ல என்ன பண்றீங்க? வியாபாரமா?"

அவன் சட்டையின் பட்டனைக்

**விறு விறு தொடர்**

கழற்றியபடி கேட்டாள்.

"ம்" என்றான், "எத்தனைவருஷமா? நீ..."

"நாலு வருஷமா!"

"என்னாச்சு? லவ் ஃபெய்லியரா?"

"அதுவும் தான்."

"அதுவும்தான்னா?"

"அக்கா புருஷன் சரியில்லை. அவங்க வீட்லதான் இருந்தேன். 'அக்காகிட்டே சொன்னா தொலைச்சிடுவேன்'னு மிரட்டி மிரட்டியே என்னை சீரழிச்சான். அப்புறம்



அக்கா செத்துப் போனா. இவன் தன் ஃபிரண்ட்ஸ் எல்லாம் கூட்டிட்டு வந்தான். சாராயம் ஊத்திக் கொடுத்து... அது ஏன் இப்போ? விடுங்க!"

"உன்னைக் காதலிச்சவன்?"

"அவன் ஒழுங்கா என்னைக் கல்யாணம் பண்ணியிருந்தா இப்படி ஆயிருக்க மாட்டேன். டெல்லில வேலை வாங்கித் தந்ததுக்கு நன்றியா மாமாவோட பெண்ணைக் கட்டிகிட்டு சந்தோஷமா இருக்கான்."

"உனக்கு ஆத்திரம் வரலையா?"

"வந்துச்சு. என்ன பண்றது?"

"அவனைக் குத்திக் கிழிக்கணும்னு தோணலையா?"

"இதென்ன சினிமாவா?"

"சினிமால மட்டும் தான் கொலை நடக்குதா? நாட்ல நடக்கிற ஆயிரம் கொலைல ஒண்ணு ரெண்டுதானே சினிமால காட்டறாங்க!"

"அதுக்கெல்லாம் தைரியம் வேணும்."

"நீ இப்படி ஆயிட்டது அந்தக் கம்மனாட்டிக்குத் தெரியுமா?"

"தெரியாது, உங்களுக்கு ஏன் எவ்வளவு கோபம் வருது?"

"காதலுக்கு யார் துரோகம் செஞ்சாலும் எனக்குக் கோபம் வரும்!"

"தண்ணியடிக்கிறீங்களா?"

"இருக்கா?"

"விஸ்கி, பிராந்தி, பீர்-எது வேணாலும் இருக்கு. பீர் ஜில்லுன்னு இருக்காது. ஃபிரிஜ்ஜு ரிப்பேரு!"

"விஸ்கி வேணும்!"

"தனியாகாசு கொடுத்துடணும். இருங்க, எடுத்துட்டு வர்றேன்."

கொலுசு சப்திக்க சுரேகா சென்றாள்.

முதுகுக்கு ஒரு தலையணை கொடுத்து சாய்ந்து அமர்ந்தான்.

விஸ்கி, சோடா, சிப்ஸ், கிளாஸ் எல்லாம் ஒரு தட்டில் வைத்து எடுத்து வந்தாள்.

திறந்து ஊற்றி, உடைத்து கலந்து நீட்டினாள்.

"நீ சாப்பிடுவியா?"

"எல்லா கெட்டப் பழக்கமும் அத்துபடி. கஞ்சாகூட அடிப்பேன்."

மடக் மடக்கென்று பருகி மறுபடி நிரப்பச் சொன்னான். மறுபடி அதே வேகத்தில் பருகினான்.

"நீயும் குடி!" என்றான்

அவளும் பருகினாள்

"இவ்வளவு பண்றே! கொலை செய்யறதுக்கு மட்டும் உனக்கு தைரியம் இல்லையா?" என்றான். இப்போது பேச்சு லேசாக குழறியது.

"என்னது வந்ததிலேர்ந்து கொலை கொலைன்னு பேசிக்கிட்டு..."

"நான் செய்யப் போறேன்!"

"என்னது?" நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள்.

"உன்னை இல்லை!"

"யாரை?" பதட்டமாகக் கேட்டாள்.

**மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்**

"என் காதலியை என்கிட்டேர்ந்து பிரிக்கப் போற ஒரு படுபாவி!"

"போச்சு! உங்களுக்கும் காதல் தோல்வியா?"

"ஆமாம்"

"பெத்தவங்க ஒத்துக்கலையா?"

"இல்லை"

"பின்னே?"

"என் காதலியே ஒத்துக்கலை."

"இதென்ன அதிசயமா இருக்கு?"

"ஆமாம். நான் செய்ற தொழில் பிடிக்கலை அவளுக்கு."

"அப்படி என்ன தொழில்?"

"இப்போ நாட்ல நேர்மையான தொழில் செஞ்சா முன்னேற முடியுமா? நீயே சொல்லு!"

"முடியாதுதான்!"

"அதனால கொஞ்சம் அப்படி இப்படி போதை மருந்து கடத்தி வித்து பணம் பார்த்துட்டிருந்தது! அவளுக்குத் தெரிஞ்சி போச்சு. உடனே நான் அயோக்கியன், கேடு கெட்டவன்னு நூறு பட்டம் கொடுத்துட்டு காதலை உதறிட்டுப் போய்ட்டா!"

"அப்புறம்?"

"அவளைத்தான் நான் தேடிட்டிருந்தேன். நடுவுல நான் ஆக்ஸிடெண்ட்ல மாட்டிக்கிட்டேன். அதிலேர்ந்து உடம்பு தேறி வந்து விசாரிச்சி அவளைக் கண்டுபிடிச்சேன்."

"என்ன சொன்னா?"

"அவகிட்டயே போகலை, அவ ஒரு கோடீஸ்வர பார்ட்டிக்கு பிராக்கெட் போட்டுட்டா! இரண்டாம் காதல்! அது மட்டும் சரியோ?"

"கல்யாணம் நடந்துடிச்சா?"

"இன்னும் இல்லை."

"எப்போ கல்யாணம்?"

"நாளைக்குக் காலையிலே!"

"நாளைக்கா?" என்றாள் திகைப்புடன்.

"ஆமாம். நேத்து ராத்திரி கால்யாண ரிசப்ஷன் நடந்துச்சி. நான் போயிருந்தேன். இப்படி இல்லை. மாறுவேஷத்திலே!"

"அய்யோ! என்ன செஞ்சிங்க?"

(தொடர்ந்து வரும்)

# அறிமுகங்கள் 02 அனுபவங்கள்

## விஜயா நடிகையானது எப்படி?

வருடம் நினைவில் இல்லை!

என்பழைய ஆல்பத்தை புரட்டிப் பார்க்கிறபோதெல்லாம் அந்த நினைவுகள் மனதின் அடித்தளத்தில், ஒரு மின்னல் வெட்டு போல் பசுமையாக 'பளிச்'சிடுகின்றன!

அப்போது நான், ஏவி. மெய்யப்பச் செட்டியாரின் குமாரர்களான முருகன், குமரன், சரவணன் ஆகிய மூன்று பேருக்கும் நல்ல நண்பன். குன்றத்தூரிலிருந்து ஆற்காடு சாலையிலுள்ள, நான் பணியாற்றிய, 'பேசும் படம்!' சினிமா பத்திரிகை அலுவலகத்திற்குக் காரில் வரும் போதெல்லாம், அப்படியே ஏ.வி.எம்., ஸ்டூடியோவிற்குள் சென்று, சகோதரர்கள் மூவரையும் சந்தித்துக் கலந்துரையாடிவிட்டு வருவேன். அவர்கள் மூவருக்கும் 'மசால் வடை' என்றால் பிரியம். அதனால், பத்து நாட்களுக்கு ஒருமுறை, வீட்டிலிருந்து 200 வடைகள் சுட்டுக்கொண்டு வந்து அவர்கள் மேஜை மீது வைத்துவிடுவேன். போகிறவர், வருகிறவர்களெல்லாம் ஆளுக்கு ஒரு வடை எடுத்துச் சாப்பிட்டுவிட்டுச் செல்வார்கள். அதேபோல் மாலை நேரங்களில் 'டிரைவ்-இன்' ஒட்டலிலிருந்து 'மில்க் அல்வா' வாங்கிவந்து தருவேன்.

> **திரையுலகிலும், பத்திரிகையுலகிலும் கடந்த 50க்கும் அதிகமான ஆண்டுகளாகப் பணியாற்றிவர் காதம்பரி பாசு. பேசும்படம் சினிமா சஞ்சிகையின் புகைப்படக்காரராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியவர். இவரது அறிமுகத்தால் சினிமாவில் நடிக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் பலர் அந்த அறிமுகங்கள் சிலருடன் ஏற்பட்ட சில அனுபவங்கள் தான் இவை:**



'பேசும் படம்' இதழுக்காக காதம்பரி பாசு எடுத்தபடம்.

ஒருநாள்–

முருகன் மேஜையின் மீது காலண்டர் ஒன்று இருந்தது. அந்தக் காலண்டரை பிரித்துப் பார்த்தேன். அதில் ஒரு பெண் குத்துக்காலிட்டு அழகாக உட்கார்ந்திருந்தாள். நான் முருகனிடம் "இந்த காலண்டரில் இருக்கும் பெண் யார்?" என்று கேட்டேன். அவர், "எனக்குத் தெரியாது. நம் பிரஸ்சில் பிரின்ட் செய்த காலண்டர். சரவணனைக் கேளுங்கள் விபரம் கிடைக்கும்!" என்று கூறினார்.

பிரஸ்சுக்குச் சென்று சரவணனிடம்விசாரித்தேன். அவர், "எனக்கும் தெரியாது..... ஹிண்டு பத்திரிகை ஆபீசிற்குப் பக்கத்திலிருக்கும் 'மெட்ராஸ் அட்வர்டைசிங்கிலிருந்து அச்சிடச் சொல்லி ஆர்டர் கொடுத்தார்கள். நீங்கள் அவர்களிடம் போய் விசாரியுங்கள்!" என்று சொல்லிவிட்டார்.

நேரே 'மெட்ராஸ் அட்வர்டைசிங்' அலுவலகத்திற்குச் சென்று விசாரித்தேன். அவர்கள், "எங்களுக்குத் தெரியாது ஒரு போட்டோகிராபர் கொண்டு வந்து கொடுத்தார். பெண் அழகாக இருக்கவே காலண்டரில் உபயோகிக்க விலைக்கு அதை வாங்கினோம். அவர் வீடு மைலாப்பூர் சாய்பாபா கோயில் அருகில் இருக்கிறது!" என்று கூறினார்.

ஒரு வாரம், அதே வேலையாக அலைந்து ஒரு வழியாக அந்த போட்டோ கிராபரைக் கண்டு பிடித்தேன். அவர் மைலாப்பூர் அப்பர் சாமி கோயில் தெருவில் இருந்தார். கதவைத் தட்டினேன். காலண்டரில் இருந்த அந்த அழகிய பெண் கதவைத் திறந்து, "நீங்கள் யார்... எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று துடுக்காகக் கேட்டார்.

"பேசும்படம் பத்திரிகையிலிருந்து வருகிறேன். உங்களுக்கு சினிமாவில் நடிக்க ஆசை இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"ஏற்கனவே, 'விளக்கேற்றியவள்' என்ற படத்திற்காக நடிப்பது குறித்து சம்மதம் வாங்கிச் சென்றனர். இதுவரையில் யாரையும் காணோம்!" என்றாள் அந்தப் பெண்.

"உன்னை படம் பிடித்து 'பேசும் படம்' பத்திரிகையில் வெளியிடுகிறேன். ஆனால், நீ படத்தில் நடித்து படம் வெளி வந்திருந்தால் தான் பேசும் படத்தில் வெளியிடுவார்கள். புதுமுகங்கள் என்றால், 'சிகை அலங்காரம்', 'சோளி வகைகள்' போன்ற படக் கட்டுரையில் வெளியிடுவார்கள். உன்னிடம் நிறைய சோளிகள் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

தெய்வநாயகி என்று பெயர் சொன்ன அந்தப் பெண், நான்கு அடி உயரமான கட்டிலுக்கடியில் வைத்திருந்த ஒரு பச்சை நிற தகரப்பெட்டியை இழுத்து, அதிலிருந்து ஏழு, எட்டு சோளிகளை எடுத்துக் காட்டினார்.

என் முகம் சுருங்கி விட்டது. எல்லாம் ஒரே மாதிரியான வெள்ளை நிறத்தில் முழங்கை வரை வரும் ஜாக்கெட்டுக்கள்.

**காதம்பரி பாசு**

"வேறு தைக்க முடியுமா?" என்று கேட்டேன்.

"வசதியில்லை!" என்று ஒரே வார்த்தையில் பதிலளித்துவிட்டாள்.

எங்கள் பத்திரிகையின் செலவில் ஜாக்கெட்டுக்கள் தைத்துக் கொடுத்தேன். புகைப்படம் எடுக்க பேசும் பட அலுவலகத்திற்கு அழைத்துச் செல்ல காரில் சென்றேன். என் காரில் ஏற வந்தவரை, ஒரு டாக்சியில் அமர்த்தி என் காரைத் தொடர்ந்து வரச் சொன்னேன்.

பேசும்பட அலுவலகத்திலேயே மேக்-அப்மேன் திருச்சி முத்துவை அழைத்து மேக்-அப் போடச் செய்து, படங்கள் எடுத்தேன்.

(வருவார்கள்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 22

தங்களை வருத்தி பிறருக்கு மகிழ்வூட்டும் சிலர் இருக்கிறார்கள். மற்றவர்களைச் மகிழ்விப்பதற்காக தாங்களே தங்களுக்குச் சில தீமைகளை வரவழைத்துக் கொள்கிறார்கள்.

இந்தத் தன்மையை தனதுடமையாக்கி வாழ்ந்தவர்தான் ஆராச்சியாளர் துரைராஜா அவர்கள். 1956ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றியீட்டிய திரு.இராஜதுரை அவர்களுக்கு எந்தவகையில் வரவேற்பளித்தார் என்ற விபரத்தை இத்தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். துரைராஜா அண்ணருடைய மேலும் இரு துணிகரமான நகைச்சுவையூட்டும் சம்பவங்கள் சிலவற்றை குறிப்பிடலாம் என நினைக்கிறேன். அச்சம்பவங்களையிட்டு எனது உறவினர் ஒருவர் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு, எனக்கு நினைவூட்டினார். இச்சம்பவங்களை ஏன் குறிப்பிடாமல் விட்டீர்கள் என்று அவர் என்னைக் கடிந்து கொண்டார்.

காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு கச்சேரிக்கு புறப்பட்டுச் செல்வார் துரைராஜா அண்ணர். அவருடைய வலது கையில் ஏதோ ஒரு மரவேர் ஒருகாப்புப் போல அணிசெய்து கொண்டிருக்கும். எதற்காக அதனை அணிந்திருந்தார் என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை.

மாலையில் கச்சேரி கலைந்ததும் சகல அலுவலகங்களுக்குமான கதவுகளைப் பூட்டி சாவிகளை பத்திரமாக தனது அலுவலக அறையில் வைத்து அதனையும் பூட்டிவிட்டு தனது அலுவலகக் காவலுக்கு இருக்கும் பொலிசாரிடம் சாவியை ஒப்படைத்து விட்டே புறப்படுவார்.


அவர் நேராக வண்டிங் ஒழுங்கையிலுள்ள தனது வீட்டுக்குச்செல்லமாட்டார். நேராக கால் நடையாகவே அமிர்தகழி சீலாமுனைக்குச் செல்வார். ஏறத்தாழ மூன்று மைல் தூரம் கால் நடையாகவே நடந்து அங்கு செல்வார்.


துரைராஜா அண்ணரின் வருகைக்காகவே ஒருவர் அங்கு காத்திருப்பார். புதிதாக இறக்கிய கள் ஒரு முட்டியில் வைக்கப்பட்டிருக்கும். அதனை முழுமையாகப் பருகிய பின்னர் வீடு நோக்கி நடந்து வருவார். அவர் மத்திய தெருவினூடாக வந்து மாதா கோயிலின் முன் நின்று பிரார்த்தித்து விட்டு நியூபேக்கரிச் சந்தியால் திரும்பி நடப்பார். மாதா கோவிலடியின் முன் நின்று பிரார்த்திப்பதனால் அவர் ஒரு கிறிஸ்தவர் என்று கூறி விட முடியாது. அடிக்கடி அவர் வாயில் "அந்தோனியாரே இயேசுவே, செபமாலை மாதாவே" என்றெல்லாம் கத்தோலிக்க தெய்வங்களின் பெயர்களும் "என்ர முருகனே" என்ற வார்த்தையும் உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். அவர் ஓர் இந்துவாக இருந்த போதிலும் ஒரு சமரசவாதியாக இருந்தார்.

இப்பொழுது இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் இடையில் உள்ள தெரு வழியாகவே அவர் பயணம் தொடரும். இவ்விருகட்டடங்களும் அமைவதற்கு முன்னர் அந்த இரு பக்கங்களிலும் குள்ளமான பற்றைக் காடுகள்தான் அமைந்திருந்தன. அந்தப் பாதையால் துரைராஜா அண்ணர் கால்நடையாக வந்து கொண்டிருக்கும் போது, மாலை வேளையில் இரு தடவைகள் அவரை நாகபாம்பு தீண்டியிருக்கிறது. பாம்புக்கடியையும் வாங்கிக் கொண்டு, எதுவுமே நடைபெறாதது போல், வண்டிங் ஒழுங்கையின் ஆரம்பத்திலே இருக்கும் பரியாரியார் தங்கராசா அவர்களின் வீட்டை வந்தடைவார். அங்கு வந்ததும், "பரியாரியார், அந்தச் சனி என்னைக் கடித்துவிட்டது" என்று கூறிவிட்டு வராந்தாவில் படுத்துக் கொள்வார்.

இதற்கிடையில் துரைராஜா அண்ணர் வீட்டுக்கு தகவல் போய்விடும். அவருடைய மனைவியும் ஒரேமகன் மாணிக்கராஜாவும் அழுதுபுலம்பியவண்ணம் பரியாரியாரின் வீட்டுக்கு வந்து சேர்வார்கள். உறவினர்களும் வந்து கூடி விடுவார்கள்.

## சர்க்கஸ் காட்டிய ஆராச்சியார்





நாகபாம்பு தீண்டி எவரும் பிழைக்க முடியாதல்லவா? ஆனால் துரைராஜா அண்ணர் சிறிது நேரம் மயக்கமாகப் படுத்துக் கிடப்பார். பரியாரியார் ஏதோ மருந்துகளைத் தயாரித்துக் கொடுப்பார். பாம்புகடித்த காயத்திலும் மருந்துவைத்துக் கட்டுவார். பொழுதுபுலர்வதற்கு முன்னதாகவே துரை ராஜா அண்ணர் எழுந்து குடும்பத்தாருடன், சற்றுத் தொலைவிலுள்ள தனது வீட்டைச் சென்றடைவார்.

ஒரு தடவையல்ல; இரு தடவைகள் அவருக்கு நாகபாம்பு தீண்டியிருக்கிறது. இருப்பினும் அவருக்கு எந்தவிதமான ஆபத்தும் நேர்ந்ததில்லை. நாகபாம்பு தீண்டி உயிர் பிரியாமல் தப்பிப் பிழைத்த எவராவது இருப்பார் என்றால், அவர் துரைராஜா அண்ணராகத்தான் இருக்க முடியும்.

நாகபாம்பிடம் கடிவாங்கி அவர் உயிருடன் தப்பிப் பிழைத்ததற்கு அவருடைய கையிலிருந்த அந்த மரவேர் காப்பு தான் காரணமாக இருக்கக் கூடுமென்று கருதக் கூடியதாக இருந்தது. ஆனால் அவரிடம் காரணம் கேட்ட போது, தன்னுடைய வயிற்றில் நிரம்பியிருந்த கள்ளுதான் காரணமென்று கூறுவார்.

இலங்கை சுதந்திரமடைந்த 1948ம் ஆண்டு 'கமலா சர்க்கஸ்' இலங்கைக்கு வந்து பல நகரங்களிலும் விடுதியிட்டு சாகச விளையாட்டுக்கள் காட்டப்பட்டன. உலகப்புகழ் பெற்ற கமலா சர்க்கஸ் மட்டக்களப்பு நகருக்கும் வந்திருந்தது இப்பொழுது நகரமண்டபம் இருக்கும் இடத்தில்தான் கொட்டகை போடப்பட்டு காட்சிகள் நடை பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டம் எங்கணுமிருந்து திரள்திரளாக மக்கள் வந்து காட்சிகளைப் பார்த்து மகிழ்ந்து சென்றனர்.

துரைராஜா அண்ணரின் ஒரே மகன் மாணிக்கராஜாவுக்கும் எனக்கும் ஒரேவயது. எங்களை ஒத்த பிள்ளைகளுடன் நாங்கள் சேர்ந்து திரிவோம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. மாணிக்கராஜாவைப் பார்ப்பதற்காக அவர் வீடு சென்றிருந்தேன். எங்கள் நண்பர்கள் பலரும் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

ஓய்வு நாள் என்பதனால் துரைராஜா அண்ணர் அவர்கள் வீட்டிலேயே இருந்தார். அவர் காலையிலேயே சீலாமுனை சென்று வழமையான பானத்தைப் பருகி விட்டுத்தான் வந்திருந்தார்.

எங்கள் அனைவரையும் மண்டபத்தில் ஒன்றாக அமர்ந்திருக்கும்படி கூறிய துரைராஜா அண்ணர் அவர்கள், "கமலா சர்க்கஸ் பார்த்தீர்களா என்று கேட்டார்!." நாங்கள் எல்லோரும் ஆமாம் என்று சொன்னோம்.

"அந்தரத்தில் கர்ணம் அடிக்கிறார்களே அது எப்படி இருக்கிறது?" என்று கேட்டார். நாங்கள் எங்களுடைய ரசனை பற்றி விவரித்தோம். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, "இது என்ன பிரமாதம்? அவர்களுடைய கர்ணத்தைப்பார்க்கிலும் நான் மிகத் திறமையாக கர்ணம் அடித்துக் காட்டுகிறேன் பாருங்கள்!" என்று கூறியவர் மண்டபத்திலிருந்த மூன்று மேசைகளை எங்களுடைய உதவியுடன் ஒன்றின் மேல் ஒன்று வைத்துக் கொண்டார்.

இதனைக் கண்ணுற்ற துரைராஜா அண்ணரின் மனைவி ஓடோடி வந்து, "இதென்ன விளையாட்டு, விழுந்து முறியப் போகிறீர்கள். தயவு செய்து சும்மா இருங்கள்". என்று மன்றாடினார். அவரை அப்பால் போகும்படி துரைராஜா அண்ணர் அதட்டினார். அந்த அம்மையார் அசையாமல் நின்று அழுது கொண்டிருந்தார். அவருடைய இரு கைகளையும்பற்றிய துரைராஜா அண்ணர், "தாயணே, நான் என்ர பிள்ளைகளுக்கு முசுப்பாத்தி காட்டு

**இரா. பத்மநாதன்**

கிறேன். நீயேன் பதறுகிறாய்? பேசாமல் உன்னுடைய வேலையைப் பார்த்துக் கொண்டிரு", என்று கூறிய வண்ணம் அவருடைய கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் அவரை அறைக்குள் விட்டு அறைக் கதவையும் பூட்டிவிட்டார்.

திரும்பிவந்த துரைராஜா அண்ணர் எங்களை நோக்கி, "இப்போ பாருங்கள். கமலா சர்க்கஸில் கர்ணமடிப்பதை விட நான் திறமாக கர்ணமடிக்கிறேன் பாருங்கள். எல்லாரும் கைதட்டவேண்டும்!" என்று கூறினார். ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த மேசை மேல் ஏறிநின்று மண்டபத்தின் முகட்டுவளையை இருகைகளாலும் பிடித்துத் தொங்கினார். அவ்வாறே அவர் பிடித்திருந்த வளையிலிருந்து சுமார் 8 அடிகளுக்கு அப்பாலுள்ள மற்றுமொரு வளையைப் பிடிப்பதற்காகத் துள்ளிப்பாய்ந்தார். அவ்வளவுதான்.

அவர் வளையைப்பிடிக்கவில்லை, நேராக தரையில்தான் மோதி வீழ்ந்தார். விபரமறியாத நாங்கள், அவர் கூறியது போல் கைகளைத்தட்டி ஆரவாரம் செய்தோம். கீழே வீழ்ந்த துரைராஜா அண்ணரின் வலது முன்னங்கையின் இரு எலும்புகளும் முறிந்துவிட்டன என்பதனைப் பின்னர்தான் அறிந்தோம். இச்சம்பவத்தைத் தொடர்ந்து விபரீதத்தை உணர்ந்து நாங்கள் கூச்சலிட்டோம். மாணிக்கராஜா சாவியை எடுத்து அவருடைய தாயாரை வைத்துப் பூட்டப்பட்டிருந்த அறையை திறந்து விட்டார். உறவினர்கள் அங்கு வந்து மயக்கமுற்றிருந்த துரைராஜா அண்ணரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். அவருடைய கை உடைவுகள் சீரடைய ஏறத்தாழ 3 மாதங்களாகி விட்டன.

சில ஆண்டுகள் கழித்து இந்தியாவிலிருந்து ஓர் இளைஞர் மட்டக்களப்புக்கு வந்திருந்தார். மட்டக்களப்பு முற்றவெளியைச் சுற்றியிருந்த தெருவில் அந்த இளைஞர் மூன்று நாட்கள் இரவு பகலாகத் தொடர்ந்து சைக்கிள் ஓடினார். அவருடன் சேர்ந்து உள்ளூர் இளைஞர் சிலரும் சைக்கிள் ஓடினார்கள். இதனால் இரவு வேளைகளிலும் மட்டக்களப்பு முற்றவெளி மக்கள் கூட்டத்தால் கலகலப்பாகவே காட்சியளித்தது.

இந்தச் சம்பவத்தால் உந்தப்பட்ட மட்டக்களப்பு இளைஞர்கள் பலர் சிறுசிறு குழுக்களாகவும், தனிப்பட்ட வகையிலும் வார இறுதி நாட்களில் முற்றவெளியைச் சுற்றி தொடர் சைக்கிளோட்டங்களில் ஈடுபட்டனர்.

இவற்றையெல்லாம் பார்த்த துரைராஜா அண்ணருக்கு குஷி பிறந்து விட்டது. "முற்றவெளியைச் சுற்றி இரவு பகலாக சைக்கிள் ஓடுவதில் என்ன பெருமை இருக்கிறது? இதை விட நான் ஒரு மகத்தான சாதனையை நிலைநாட்டப் போகிறேன்!" என்று சவால் விட்டார்.

மட்டக்களப்பு கச்சேரி, 18ம் நூற்றாண்டில் அங்கு வந்து சேர்ந்த டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட கோட்டையினுள் தான் இயங்கி வருகிறது. இக்கோட்டையில் கருங்கற்களாலான சுற்றுமதிலுண்டு. சுற்று மதிலின் உட்புறமாக மண்ணாலால் நிரப்பட்ட மேடையொன்று அமைக்கப்பட்டுள்ளது. கோட்டையின் நான்கு புறமும் இம்மேடை நீண்டு செல்கிறது. அக்காலத்தில் கோட்டையைத் தாக்குவதற்கு எதிரிகள் எவராவது வருகிறார்களா, என்பதை அவ தானிக்கவே இந்தமேடை அமைக்கப்பட்டுள்ளது. மதிலில் இடைக்கிடை 'ப' வடிவமான வெட்டுகள் காணப்படுகின்றன.

துரைராஜா அண்ணர் அவர்கள் ஒரு சாதனையை நிலைநாட்டத் திட்டமிட்டார். நிலத்திலிருந்து சுமார் 22 அடி உயரம் கொண்டது கோட்டை மதில். இந்த மதிலின் மேல் இருந்து கீழே தரையில் குதித்து சாதனையை நிலை நாட்டுவதே தனது திட்டம் என்று ஆராச்சியார் தனது திட்டத்தை வெளியிட்டார்.

இதற்கு அப்போது அரசாங்க அதிபராக இருந்தவரிடம் அனுமதி கேட்கச் சென்றார். ஆராச்சியாரின் கூற்றை அரசாங்க அதிபர் நம்பவில்லை.

**(இன்னும் வரும்)**

# கலை உலகில் கருணாநிதி 02

தந்தையும் அதனை மந்திரச் சொல்போல் ஏற்று படிக்கவிட்டார். குழந்தை படித்தது.

'ஆசிரியருக்கு தட்சிணையாக மாணவன் வீட்டிலிருந்து வாத்தியார் வீட்டிற்கு பால், பழம், நெய், காய்கறி; வயலில் அறுவடையாகும்போது நெல் மற்றும் இதரப் பண்டங்கள் சென்று கொண்டிருந்தன.

'ஓராண்டு கழித்து ஐயர் தயவால் பையன் படித்துவிட்டான். திருவாரூரிலே பெரிய பள்ளியிலே சென்று, சேர்த்து விடலாம்' என்று எண்ணி அழைத்துச் சென்று "என் மகன் ஐயரிடம் கற்று, எட்டாம் வகுப்பிலே சேரத்தக்க அளவுக்குக் கற்றிருக்கிறான்," என்று தந்தையர் பெருமிதத்துடன் கூறினார். தலைமை ஆசிரியரும் பையனைப் பரிசோதிக்கும்படி கூறினார். பரிசோதனையில் பையனின் படிப்பில் 'கோழி முட்டை' இருக்கவே, எட்டாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று அறிவிக்கப்பட்டது.

"தன்னைப்பள்ளியில் சேர்த்துக் கொள்ளவில்லை என்றால் தியாகேசா குளத்தில் விழுந்து செத்துப் போவேன" என்று கருணாநிதி அழுதார். பையனின் படிப்பு ஆர்வத்தைக் கண்ட தலைமை ஆசிரியர் அவரை ஐந்தாவது வகுப்பில் சேர்த்துக் கொண்டார். படித்தார் கலைஞர்.

இந்த வயதில் தான் கருணாநிதிக்கு நாடகம் பார்ப்பதில் ஆர்வம் அதிகரித்தது. அடிக்கடி டிராமா கொட்டகைக்கு ஓடிவிடுவார். அவருக்குப் பிடித்த வேடங்கள் கிருஷ்ணனும், அர்ஜுனனும் தான்!

இப்படி இருந்த கருணாநிதியை ஜஸ்டிஸ் கட்சியின் பக்கம் இழுத்தது ஒரு சம்பவம். என்ன அது?

திருவாரூரில் நீதிக் கட்சியின் (ஜஸ்டிஸ் பார்ட்டி ) சார்பில் 1938ம் ஆண்டு நின்ற வேட்பாளருக்கு ஆதரவு தேடி, 'அஞ்சா நெஞ்சன்' என்று சுயமரியாதை இயக்கக் காரர்களால் அழைக்கப்படும் பட்டுக் கோட்டை அழகிரியின் சொற்பொழிவு நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு, பள்ளி மாணவரான கருணாநிதியும் போனார். அழகிரியின் பேச்சு, கருணாநிதியை நீதிக்கட்சியின் பக்கம் இழுத்தது. அந்தநாள் முதல் கருணாநிதி அந்த இயக்கத்திற்காக தொண்டாற்றத் தொடங்கினார். (இந்தச் சம்பவ நினைவாகத்தான் கருணாநிதி பின்னாளில் தன் மகனுக்கு அழகிரி என்று பெயரிட்டார் போலும்) கருணாநிதியை 'கலைஞர் கருணாநிதி' என்று அடைமொழியிட்டு பேசி, கலைஞர் என்ற பட்டத்தை கொடுத்தவரும் அழகிரிதான்.

அழகிரியின் பேச்சால், கருணாநிதி இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் குதித்தார். இந்தி எதிர்ப்பு துண்டறிக்கைகளை வெளியிட்டு, விநியோகித்தார். பள்ளியில் நடந்த விழா ஒன்றில் "சமஸ்கிருதம் ஒரு செத்த மொழி" என்று பேசி, தமிழாசிரியர்களின் அன்பையும் மற்ற ஆசிரியர்களின் கோபத்தையும் சம்பாதித்துக் கொண்டார்.

சிறுவயதிலேயே 'சிறுவர் சீர்திருத்த சங்கம்' ஒன்று ஆரம்பித்தார். சங்கத்தை நடத்த எந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார் தெரியுமா? பஜனை மடமாக இருந்து வந்த அனுமார் கோயிலைத்தான்! கோயில் நிர்வாகிகளும் ஏதோ கோயில் திறந்து கிடந்தால் போதும்; விளக்கெரிந்தால் போதும் என்று அனுமதித்தனர்.



வாரா வாரம் அனுமர் கோயிலில் 'சிறுவர் சீர்திருத்த சங்கம்' கூடும். வாரத்துக்கு ஒரு பைசா உறுப்பினர் சந்தா என்று மற்ற பையன்களிடம் வசூலிக்க ஆரம்பித்தார் கருணாநிதி. சங்கத்தில் யாரும் பேசலாம். பேச்சைக் கேட்பவர்களுக்கு மிட்டாய் என்று கூறினார்.

சங்கக் கூட்டத்தில் கருணாநிதி தன் கைப்பட அறிக்கைகள் எழுதி 'சேரன்' என்ற புனைப்பெயரில் வெளியிடுவார்.

இந்த சிறுவர் சீர்திருத்த சங்கம், பிறகு 'மாணவர் ஒற்றுமைக் கழகம்' என்று புதுப் பெயர் பெற்றது.

பள்ளியில் 'மாணவநேசன்' என்றொரு கையெழுத்துப் பத்திரிகையை தொடங்கினார். தன் சக மாணவர்கள் பெயர்களை எல்லாம் நல்ல தமிழ்ப் பெயர்களாக மாற்றினார் கருணாநிதி. சண்முகம் என்பவருக்கு 'மாவெண்கோ' என்று பெயரிட்டார். சாமிநாதன் என்பவரை 'செம்மல் தங்கோ' வாக்கினார். 'ரங்கசாமி' யை 'அரங்கிறை' ஆக்கினார்.

அரங்கிறை என்பது ஏதோ அரைக்கீரை என்பதுபோல் இருக்கிறதே... என்று வருத்தப் பட்டேன். அதனால், பிறகு 'அரங்கண்ணல்' என்று மாற்றி வைத்தார், என்று குறிப்பிடுகிறார் அரங்கண்ணல். 'கருணாநிதி கூட தமது பெயரை 'அருட்செல்வம்' என்று 'மாணவ நேசன்' மூலம் மாற்றிக் கொண்டு உலவினார். பிற்பாடு அருளையும் செல்வத்தையும், பெருக்கி தோழர்களுக்கு விட்டு விட்டு கருணாநிதியாகவே உலவலானார்.'

1942ல் அண்ணா திராவிட நாடு ஏட்டைத் துவக்கினார். அதற்கு 'இளமைப்பலி' என்றொரு கதையை எழுதி அனுப்பிவைத்தார் கருணாநிதி. திராவிட நாடு எட்டாவது இதழில் அந்தக் கதை 'திருவாரூர் எம்.கருணாநிதி' என்ற பெயரில் வெளியாயிற்று.

கருணாநிதி துடிப்புமிக்கவராகவும், மற்ற மாணவர்களுக்கு தலைமை தாங்கும் தன்மை கொண்டவராகவும் இருப்பதைக் கண்ட திருவாரூர் கம்யூனிஸ்ட் கட்சிக் காரர்கள், 'மாணவர் சம்மேளனம்' என்ற அமைப்பைத் தொடங்கி அதில் கருணாநிதியை இழுத்துப் போட்டனர். என்ன காரணத்தாலோ கருணாநிதியால் அவர்களுடன் ஒட்ட முடியவில்லை. அதிலிருந்து விலகி, 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

இந்த அமைப்பின் ஆண்டு விழாவில் பேசுவதற்கு, அப்போது அண்ணாமலை

**ஆர்.சி.சம்பத்**

பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த நாவலர் நெடுஞ்செழியனையும், பச்சையப்பன் கல்லூரியில் வாத்தியாராக வேலை பார்த்து வந்த பேராசிரியர் க.அன்பழகனையும் கூப்பிட்டு சொற்பொழிவாற்ற வைத்தார். இருவருக்கும் வழிச்செலவுக்கு பணம் தர, கருணாநிதியிடம் பணம் இல்லை

*(வருவார்)*

# நினைவஞ்சலி



**வீணைவேந்தன்**

"அன்புள்ளங் கொண்ட கலை இலக்கிய நெஞ்சங்களே!

எமது நாட்டின் முதுபெரும் எழுத்தாளரும், இலக்கியவாதியுமான அமரர் அ.ச.முருகதாசனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில், அவரின் எழுத்தாற்றல் பற்றியும், அவர் தொட்ட துறைகளான கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம் ஆகியன பற்றிய தெளிவான-விரிவான உரைகளையும் இதுவரை பலர் கூறக் கேட்டோம்.

ஓர் எழுத்தாளனின் படைப்பைக் கண்டு-வாசித்து களிகொள்ளும் இலக்கிய ரசிகர்கள்-வாசகர்கள், அந்தப் படைப்பாளி யின் படைப்புக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் சோகவாழ்க்கையை-வேதனை உணர்வுகளைக் காண விளைவதில்லை-முடிவதில்லை. அறியமுனைவதும் இல்லை. அது தேவையான ஒன்றாக நினைப்பதும் இல்லை. எல்லா படைப்பாளிகளும் வச தியோடும் வளத்தோடும் வாழவில்லை. ஒரு சிலர் இருக்கலாம். ஆனால் பலர் வாழ்க்கை....? அவர்களின் கடைசிக்கால வாழ்க்கை-நிலை? எந்தவிதமான துன்பகர மான சூழ்நிலையில் வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறியோம்.

ஒரு காலத்தில், இலக்கிய வானிலே கொடிகட்டிப் பறந்த அமரர் அ.ச.முருகதாசன் அவர்களின் கடைசிக்கால வாழ்க்கை எவ்விதம் ஆனது என்பது எங்களில் யாருக்காவது தெரியுமா? இல்லை. அவர் எப்போ மறைந்தார்? எப்படி மறைந்தார் என்பதைத் தான் நாம் அறிவோமா? அண்மையில் நண்பர் தேசிகர் ஐயா அவர்களின் மறைவைப் பற்றிக் கூறியபோது தான் திகைத்தோம். அதன் பின்பே இந்நிகழ்வை நடாத்த எம் மன்றம் முடிவெடுத்தது.

நண்பர் தேசிகர், அமரர் அ.ச.முருகதாசனின் தூரத்து உறவினர் முருகதாசன் ஐயா அவர்களின் கடைசிகாலத்தில், அவரைப் பராமரித்துவந்தவர். ஐயா அவர்களின் கடைசிப்பயணத்தை நிறைவேற்றிவைத்த பெருமகனார்.

ஒரு சிறந்த எழுத்தாளனுக்கு இந்த நிலை வரக்கூடாது. வரவிடவும் கூடாது. யாரும் அறியாத வகையில் ஒரு கலை இலக்கியவாதி அனாதையாக மறையக் கூடாது. இந்த நிலையை நாம் மாற்ற வேண்டும். இதற்கு நாம் ஒரு புதுவழி சமைத்தே ஆகவேண்டும். அதற்குமுன்பாக, அமரர் அ.ச.முருகதாசனின் கடைசிகால வாழ்க்கையில் தன்னை அர்ப்பணித்த, அமரர் அ.ச.முருகதாசனின் நண்பரும், உறவுக்காரருமான திரு.தேசிகர் அவர்கள் ஐயா பற்றி கடைசிகால அனுபவத்தைக் கூறுமாறு அன்போடு அழைக்கின்றோம்!."

தலைவர் பேசி அமர்ந்தார்.

கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு நண்பர் தேசிகர் எழுந்தார். ஒலிவாங்கி முன் சென்றார். பேச ஆரம்பித்தார். வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கித் திணறின. தொண்டையைச் சிறிது கனைத்துக் கொண்டார். சிறிது கரகரத்தபடி வார்த்தைகள் வெளிவந்தன. பேசினார்.

"அன்பர்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள்.

முதுபெரும் எழுத்தாளரான அமரர் அ.ச.முருகதாசன் அவர்கள் ஒரு வகையில் என் உறவுக்காரர். இருந்தபோதும் ஆரம்ப காலத்தில்-அதாவது அவர் எழுத்துலகில் பிரகாசித்த காலத்தில் எங்களோடு நெருக்கம் கிடையாது. அவரது எழுத்துக்கிருந்த செல்வாக்கில் அவர் செருக்குற்றே வாழ்ந்திருந்தார். எனவே நாம் அவரை ஒருபோதும் எதிர்பார்த்ததே இல்லை. ஆனால் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்குமுன், ஒரு நாள், மாலை நேரம் ஓர் ஆட்டோவில் ஒரு

மெலிந்த உருவம் சிறிது நோய்வாய்ப்பட்ட நிலையில் என் இல்லத்தின் முன்வந்து இறங்கியது. முதலில் என்னால் அடையாளம் காண முடியவில்லை. நான் அவரை அங்கு எதிர்பார்க்கவும் இல்லைத்தான். தான் இன்னார் என்று அறிமுகப்படுத்தியதும் திகைத்து விட்டேன். அவர் வேறுயாருமல்ல எழுத்தாளர் அ.ச.முருகதாசன்தான்.

இந்த நிலையில் என் வீடுதேடிவந்த ஐயா அவர்களை வரவேற்பதா? இல்லையா என்று முதலில் தடுமாறினேன். இருந்தும் ஒரு தைரியத்தில் அவரை உள்ளே அழைத்துச் சென்றேன். ஒரு இருநாள் இருப்பார் என்றுதான் நான் எதிர்பார்த்தேன் ஆனால்....

என் மனைவிக்கு அவரைக் கட்டோடு பிடிக்கவில்லை. உண்மைதான் "காசு பணம் இருக்கும்போது கண்தெரியவில்லை. இப்ப எப்படித் தெரிஞ்சுது?" என்று சீறுவாள். அதுமட்டுமன்றி எனது வருமானத்தில் "நாங்கள் இருவர். அத்தோடு ஒரு குழந்தைவேறு. இதற்கே பெரும்பாடாக இருக்கும்போது இது ஒரு கேடா?" என்று கேட்பாள்.

என் மனைவியைப் பொறுத்தமட்டில், அவள் கேட்பதில் ஞாயம் இல்லாமல் இல்லை. காரணம், வீட்டுச்சுமையைச் சுமப்பவள் அவள். அதுமட்டுமன்றி அவள் குழந்தையைப் பற்றி பெரிய கனாக் கண்டுகொண்டிருந்தாள். எனவே அவள் தாய்ப் பாசம் மேலதிக செலவை வெறுத்தது. இதனால் அடிக்கடி எங்களுக்குள் தகராறு வளரத் தொடங்கியது.

அதே நேரம் ஐயா அவர்கள் உடல் நிலை மோசமடையத் தொடங்கியது. வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று பரிசோதித்தபோது ஒரு பேரிடி என் தலையில் வீழ்ந்தது.

ஐயா அவர்களுக்குக் கான்சர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதை அறிந்த என் மனைவி வீட்டில் அவர் இருக்கும் வரை தான் இருக்கமாட்டேன் என்று கூறி தன் தாய்வீட்டிற்குச் சென்றுவிட்டார்.

இப்போது ஐயா அவர்களை தனியே விடவும் முடியாமல், வைத்திருக்கவும் முடியாமல் தடுமாறினேன். முடிவில் உறுதிபூண்டேன். எது வந்தாலும் ஐயா அவர்களை கடைசிவரை நானே கவனிப்பது என்று.

என்னால் இலக்கியம் படைக்க முடியாவிட்டாலும், ஒரு படைப்பு இலக்கியவாதியைக் கடைசி நாள்வரை பராமரித்து வந்தேன் என்ற ஆத்ம திருப்தியைப் பெரிதும் விரும்பினேன்.

ஐயா அவர்களின் சுகயீனம் நாளுக்கு நாள் அதிகரித்ததேயன்றிக்குறைந்த பாடில்லை. இதனால் நான் ஐயாவின் அருகிலிருந்து அவரைப் பராமரிக்க வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டேன். இதன் விளைவு என் வேலை போனது. இருந்தும் நான் கவலைப் படவில்லை. முல்லைக்குத் தேர்கொடுத்தான் பாரி. புறாவுக்காகத் தன் தசையைக் கொடுத்தார் சிபி. பசுக்கன்றிற்காக தன் மகனையே தேர் சில்லில் ஏத்தினார் மனுநீதிச்சோழன். இப்படியொன்றும் என்னால் செய்ய முடியாதென்பது உண்மை. ஆனால் இந்த மண்ணின் ஒரு முதுபெரும் இலக்கிய-படைப்பாளி மைந்தனின் இறுதிக் கால வாழ்வில் என் ஆத்மார்த்த உதவியை செய்யும் வாய்ப்பு கிடைத்ததே. அது ஒன்றே போதும். என்வாழ்நாளில் பெரும்பேறாகவே கருதுகின்றேன்.

நான் ஒரு பெரிய இலக்கியவாதியுமில்லை. பெரியவாசகனும் இல்லை. ஆனால் என்னிடத்தில் ஒரு கெட்டபழக்கம். எந்த கஷ்டமான சூழ்நிலையிலும் ஒரு இலக்கிய படைப்பை அதாவது ஈழத்து இலக்கியப் படைப்பைக் கண்டால் வாங்குவது. என்னைப் பொறுத்தமட்டில் ஈழத்து இலக்கியம் தாயில்லாப் பிள்ளையொன்றுதான். பரந்துபட்ட அளவின் வளர்ச்சி இல்லாதது. தனித் தனிவட்டங்களாக அந்தந்த வட்டங்களுக்குள்ளே வளர்ந்து கொண்டிருக்கின்றது. பரந்து பட்ட ஒரு களமில்லை. எனவேதான் என் செலவில் ஒருவிதமாவது ஒரு இலக்கிய வளர்ச்சிக்குப் போகட்டும் என்ற நோக்கில்.

சாதாரணமாக ஒருவன் ஒரு நாளைக்கு ஒரு தேனீரும் ஒரு சிகரட்டும் குடிக்கிறான். ஆகக்குறைந்தது 10 ரூபாய் செலவாகும். ஒருமாதம் முன்னூறு ரூபா. எனக்கு இந்த இரண்டு பழக்கங்களும் இல்லை. அத் தொகையை நூல்களுக்குக் கொடுக்கின்றேன். அதுமட்டுமல்லாது எங்கோ ஒரு மூலையில் ஓர் உண்மையான வாசகன் இவற்றிக்காகக் காத்திருக்கின்றான். அவனுக்கு இவை கிடைக்க வேண்டுமானால் என்போன்ற பலர் இதை வாங்கவேண்டும் என்பதே. அந்த வகையில் ஐயாவினுடைய சகல படைப்புகளையும் நான் வாங்கியிருந்தேன்.

எந்த இலக்கியங்களுக்காக-படைப்புகளுக்காக ஐயா உயிர் கொடுத்து வாழவைத்தாரோ, அந்த இலக்கியங்கள்-படைப்புகள் ஐயாவின் கடைசிகாலத்தில் அவர் உயிரைக் காப்பாற்ற தங்களையே சந்தைப்படுத்தியது. ஆம் என் சிறிய நூல் நிலைய நூல் அனைத்தையும் விற்றேன். ஆனால் தோற்றுவிட்டேன் ஐயாவை இழந்துவிட்டேன்."

குழந்தையைப் போல் குமுறிக் குமுறி அழுதார் தேசிகர்.

சபையில் சிலர் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள்.

சிறிது நேர அமைதிக்குப்பின் கண்களைத் துடைத்துக் கொண்டு தேசிகர் பேசினார்.

"அமரர் அ.ச.முருகதாசன் ஐயா அவர்கள் தன் பயனத்தின் கடைசி நேரத்தில் என் கைகளை இறுகப் பற்றியவாறு, ஒரு வேண்டுகோளை விட்டார். ஆனால் அதை என்னால் நிறைவேற்றி வைக்கமுடியவில்லையே என்று நினைக்கும் போது என்னால் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லையே!" என்று கூறி மீண்டும் கண்களைக் கைக்குட்டையால் முடியவண்ணம் விம்மினார்.

அலைபுரண்ட கூட்டத்தில் ஒரு சலசலப்பு. அது என்னவாக இருக்க முடியும் என்பதுதான். தலைவரே மெதுவாக தேசிகரிடம் கேட்டார்.

கைக்குட்டையால் கண்களையும், மூக்கையும் துடைத்துவிட்டுக் கொண்டே தேசிகர் சொன்னார்.

"ஐயா அவர்கள் தன் நூல்களை மீள் பிரசுரம் செய்து வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டது தான்!" என்றார்.

உணர்ச்சிவசப்பட்ட கூட்டத்தில் இருந்து ஒருவன் எழுந்து நேரே மேடைக்கு வந்தான். எதிர்பாராதவகையில் ஒலிவாங்கிமுன்வந்து அதைக் கைகளால் பற்றிக் கொண்டு,

"அமரர் அ.ச.முருகதாசன் அவர்களின் நூல்கள் மீள்பிரசுரம் செய்யப்பட வேண்டும். அதற்கு இவ்விடத்திலேயே ஒரு நிதி திரட்டி ஆக வேண்டும். அந்த நிதியின் முதல் பங்காக நான் பத்து ரூபா அன்பளிப்புச் செய்கிறேன்!" என்று கூறித் தலைவரிடம் பத்து ரூபாவைக் கொடுத்துவிட்டு இறங்கினான்.

அவ்வளவுதான் அக் கூட்டத்தில் ஒருவித ஆவேச அனுதாப அலை எழுந்தது.

உணர்ச்சிப் பெருக்கால் மக்கள் மந்தை ஆனார்கள்.

அரை மணி நேரம் தான். நான் முந்தி நீ முந்தி என்று ஒரு வித வெறியில் ஐந்தும், பத்தும் ஐம்பதுமாக நிதி குவிந்தது. மேடையில் இருந்த அனைவருமே அசந்துவிட்டார்கள்.

அன்பளிப்புக்கள் ஒய்ந்தன.

தலைவர் எழுந்தார்.

"என் பெருமதிப்பிற்குரிய இலக்கிய இதயங்களே. உங்கள் எழுச்சிகண்டு நான் அகமகிழ்கின்றேன். அமரர் அ.ச.முருகதாசன் அவர்கள் மேல் கொண்டுள்ள பற்றையும் பாசத்தையும் கண்டு பெருமைப்படுகின்றேன். அகம் மகிழ்ந்து மனம் நிறைந்து அள்ளித்தந்த அன்பளிப்புக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். இந்த நிதி அமரர் அ.ச.முருகதாசன் அவர்களின் நூல்களை மீள்பிரசுரம் செய்வதற்காக நண்பர் தேசிகர் அவர்களிடமே கையளிக்கப்படும். சிறிது நேரத்தில் நிதியின்தொகை அறிவிக்கப்படும். அதேநேரம் அத்தொகை எமது நகரபிதா அவர்களால் தேசிகரிடம் கையளிக்கப்படும். இப்போ நன்றி உரை"

சனத்திரளை விலக்கிக்கொண்டு ஒருவன் ஓடிவந்தான். நன்றி உரை கூற எழுந்த செயலாளரிடம் ஒரு தந்தியைக் கொடுத்தான். பதறிய இதயத்தோடு தந்தியைப் பிரித்தார். படித்தார். அவருக்குத் தலை சுற்றுவதுபோல் இருந்தது. தலைவரிடம் தட்டுத் தடுமாறித் தந்தியைக் கொடுத்தார். இதை வாசித்த தலைவர் அசைவற்றுக் கதிரையில் அமர்ந்து விட்டார். அனைவரும் விபரமறியாமல் முழித்தனர். தந்தியில்,

"அ.ச.முருகதாசன் திருக்கோணமலையில் முதியோர் இல்லத்தில் இருக்கின்றார்."

# காத்திருக்கிறாள்

தலைநகரில் இரவுநேர பரபரப்புக்குள் அந்த பஸ்தரிப்பு நிலையமும் ஆட்பட்டுக்கிடந்தது. மட்டக்களப்பு செல்லும் சொகுசு பஸ்வண்டியில் யன்னலோரமாய் அமர்ந்திருந்தான் சிவா. மூன்று வருட சிறை வாழ்க்கையிலிருந்து மீண்டு வெளியுலகுக்கு வந்தவன் அவன். தவறேதும் செய்யாமல் தண்டிக்கப்பட்ட கோவலன் போல தமிழன் என்ற காரணத்துக்காகவே மூன்றாண்டு சிறை வாழ்ந்த மனிதவுரிமைக் குழுக்களின் மன்றாட்டத்தால் மீண்டவன். ஊர் போய் உறவுகளைக் கண்டு உவகை கொள்ளும் எண்ணத்தில் மூழ்கியிருந்தவன், அன்புக்காதலி பவித்திரா வாரமொரு மடலாய் வண்ணத் தமிழில் தன் எண்ணக் குமுறல்களையும் ஏக்கங்களையும் வடித்தனுப்ப, படித்து, அழுது, பத்திரப் படுத்தி வைத்திருந்த கடிதமொன்றை பையிலிருந்து மெல்ல எடுத்துப் படிக்கிறான் சிவா.



**ஆரையம்பதி-பூ.இதயரெத்தினம்**

"என்னுயிர் சிவாவுக்கு! நான் நலமென்று பொய் கூற விரும்பவில்லை. உங்கள் நலமறியத் தவிக்கிறேன். காடையர்களால் கலுத்துறை சிறையில் கைதிகள் தாக்கப்பட்டதாக செய்தியறிந்து துடித்துப்போனேன். தவறேதும் செய்யாத உங்களுக்கு ஏனிந்த தண்டனை? தமிழனாய்ப் பிறந்தது யார் செய்த தவறு? ஆண்டவனுக்கு கூட எம்மினத்தின் மேல் கருணை இல்லையா? தினமும் உங்கள் நலத்துக்காகவும் விடுதலைக்காகவும் கண்ணீர் விட்டுப் பிரார்த்திக்கிறேன். அங்கு வந்து உங்கள் அழகு வதனத்தைக் கண்டு ஆனந்தம் கொள்ளமுடியாத அபாக்கியசாலி நான். தினமும் உங்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் உங்கள் உயிர் பவித்திரா!" படித்து முடித்தவன் அவள் அன்பையெண்ணி தனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டான். என் மனைவியாய் இவளை அடைய இறைவன் வரம் கொடுத்ததாய் எண்ணினான். திடீரெனப்போய் அவள் முன் தரிசனம் கொடுக்கப்போவதையெண்ணி மனதுக்குள் மகிழ்ந்து கொண்டவன், காலைப்பொழுதுவரை காத்திருக்க வேண்டிய இன்ப அவஸ்தைக்குள்ளானான்.

எண்ணத்தை திசைதிருப்ப எண்ணியவன் பக்கத்து சீற்றிலிருந்த பெரியவரிடம் அன்றைய தினசரியை வாங்கிச் செய்திகளை மேலோட்டமாய் பார்த்தான். 'இலக்குத்தவறிய எறிகணை வீச்சில் இரு விடுகள் சேதம். இளம் யுவதி பரிதாப மரணம். மட்டக்களப்பில் சம்பவம்.' கட்டம் போட்ட அந்தச் செய்தியை படித்தவனை கவலையாக்கியது. மேற்கொண்டு படிக்க மனமில்லாது பத்திரிகையை மடித்து வைத்து விட்டு "நம்மணினின் தினசரி அவல வாழ்வுக்கு எப்போதுதான் முடிவு கிடைக்குமோ? ஆண்டவா உனக்குத்தான் வெளிச்சம்" என முணுமுணுத்தவன் தெருவாய் பின்சீற்றில் தலை சாய்த்தான். மீண்டும் அவன் பவித்திராவின் நினைவு, 'உங்கள் வரவுக்காக காத்திருப்பேன்' என அவள் காதுக்குள் கூறுவதுபோல் இருந்தது. ஆம்! அவன் வரவுக்காக காத்திருக்கிறாள் அவள். செல் வீழ்ந்து தேகம் சிதைந்து நிரந்தரமாய் கண் மூடிப் படுக்கையில் காத்திருக்கிறாள் அவன் வரவுக்காக. பத்திரிகை செய்தியில் பரிதாபமாகமரணமான யுவதி தன் பவித்திரா என்பதை அவன் அறிந்திருக்க நியாயமில்லை தானே? ●

# அழகு என்பது...!



**க.ராகுலன்-வெள்ளவத்தை**

"என் தம்பி, இண்டைக்கு லேட்?", கண்ணா கேட்டான்.

"புத்தகமொண்டு வாங்கப்போனன், ஏறாத கடையில்லை; அவ்வளவு டிமாண்ட்!"

"என்ன புத்தகம் பாப்பம்!" கண்ணா சக்கர இருக்கையில் இருந்தவாறே கையை நீட்டினான். "பாத்திபா தலைப்பு, 'அழகு', உனக்கு துரும்பளவும் தொடர்பில்லாத மற்றர்!" அலட்சியமாகக் கூறிவிட்டு மாடிப் படிகளில் ஏறினான் பரமேஸ். அந்த பூட்ஸ் சத்தம் சுருதிகுறைய அம்மாவின் குரல் அடுப்படியிலிருந்து வந்தது.

"தம்பி வந்திட்டான் போல.... பிடி இந்த ரீயைக்குடி!" சிறிய மௌனத்தின் பின் அவளே தொடர்ந்தாள்.

"கண்ணா, கல்யாண விஷயமா விடியவும் புறோக்கர் வந்திட்டுப் போனவர்!"

"அம்மா, அதுகென்ன அவசரம்?"

"உனக்கு அவசரமில்லாட்டியும் எனக்கு அவசியமிருக்கடா!" அம்மா செல்லமாகக் கோபித்தாள்.

"அம்மா உங்களுக்கு மருமகளப் பாக்கவேணும் அவ்வளவுதானே....., முதல்ல இவன் தம்பிக்கு குடிக்க ஏதாவது குடுங்கோ!"

"படுவா, கதமாத் திறதில உன்னக்கேட்டுத்தான்டா!" சிரித்துக் கொண்டு அவள் மாடிப்படிகளில் ஏறினாள்.

"தம்பி, தேத்தண்ணி.....!" "அதில வையுங்கோமா!" மேசையைக்காட்டிவிட்டு அவன் அதன்முன் அமர்ந்து கொண்டான். 'அழகு' புத்தகத்தின் அட்டையும் அழகாகவே இருந்தது. அவன் ஏதேச்சையாக ஒரு பக்கத்தைப் புரட்டினான்.

"அழகு, நாம் அன்றாடம் பயன்படுத்தும் வார்த்தைகளிலொன்று. அது மிகவும் பிரத்தியேகமானது; வரையறைக்கு அப்பாற்பட்டது. ஆனாலும் 'அழகு என்றால் என்ன?' என்ற கேள்விக்கு விடைகாண முயல்வோமானால், 'ஒருவருக்கு எந்த ஒன்று சாந்தியை, சந்தோஷத்தை கொடுக்கின்றதோ அது அவருக்கு அழகுதான். உதாரணமாக காதலர்களுக்கு காதல் அழகாகிறது. பசித்தவனுக்கோ உணவு அழகாகிறது....."

"பரமேஸ், சனிக்கிழமையும் கையமா எங்க வெளிக்கிட்டிட்டாய்?" அம்மா கேட்டாள்.

"ஒரு சின்ன வேலையம்மா!"

"ஹேரால உன்ர அண்ணியிருக்கா. கதைச் சிற்றுப்போ!"

"ஓ என்ர வருங்கால அண்ணியா?" ஆவலாக ஹோலிற்குள் நுழைந்தவனுக்கு ஏமாற்றம். மெலிவிய உருவம் பருவத்திற்கும் நெற்றிக்குமே நிறத்தில் வித்தியாசமிருக்கவில்லை. அந்த ஒட்டிய முகத்தோடு சிரித்து கதைத்துக் கொண்டிருந்த கண்ணா,

"இதுதான் என்ர தம்பி பரமேஸ், தம்பி வடிவாய்ப் பார்த்துக்கொள் உன்ர அண்ணியை!" என்றான். "வணக்கம், நான் காயத்திரி, அண்ணாவின்ர ஃபேமிலதான வேக் பண்றன்!" அண்ணி தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள். 'இந்த முகத்துக்கு ஒரு சிரிப்புவேற, அண்ணை உன்னமாதிரித் தான் உன்ர ரசனையுமிருக்கு!' உள்ளுக்குள் நினைத்துக் கொண்டவன் அண்ணாவைப் பார்த்தான் பரமேஸ்.

"ஒரு வேலையிருக்கு சீக்கிரமாப் போட்டு வாறன்!" என்று செயற்கையான சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு அவன் வெளியேற அம்மா ஹோலிற்குள் நுழைந்தாள். "பிள்ளை என்ர மகன் ஊனமெண்டு....!" முடிக்கு முன் காயத்திரி குறுக்கிட்டாள். "அத்தை அதுதானே நான் வந்திட்டன். இனிமே மன சாலையும் அவரை அப்படி நினைக் காதைங்கோ!" என்றவாறு தன் அத்தையின் கன்னங்களில் வழிந்திருந்த கண்ணீரை துடைத்தாள் காயத்திரி.

கடிகாரத்தின் சிறிய முள் மூன்றை முத்தமிட்டுக் கொண்டிருந்த: பரமேஸ் வீட்டுக்குள் நுழைய, அண்ணி எதிர்ப்பட்டாள். அப்போது அவள் அவனுக்கு அழகாகத் தெரிந்தாள். அம்மாவின் உதடுகள் அசைவது தெரிந்தது. வார்த்தைகள் கேட்கவில்லை. அண்ணாவின் கால்களில் விழுந்து அழ வேண்டும் போலிருந்தது. அவன் அறைக்குள் நுழைந்தான். வாழ்க்கையே சூனியமாகத் தெரிந்தது. "எப்படி அவளால முடிஞ்சுது? என்ன மறுநாளு வேறொருத்தனுக்கு கழுத்தை நீட்ட...... அப்போ அவள் என்னோட இவ்வளவு காலமும் பழகினதெல்லாம்....!" அவனால் விடைகாணமுடியவில்லை. கையில் அகப்பட்டதை தூக்கி எறியவேண்டும் போலிருந்தது. ஒரு கணம் நிதானித்தான். கையில் அகப்பட்டுத்தகும் புதுகைக்காட்டிய வாறு அழகாய்ச் சிரித்துக் கொண்டிருந்தது.

"மனிதர்கள் ஒவ்வொருவரிலும் ஒவ்வொரு அழகிருக்கும். அது பார்க்கிறவரின் மனதைப் பொறுத்து வெளிப்படும். இவையெல்லாம் உடல் சம்பந்தப்பட்டவையே. உள்ளத்தின் அழகு என்பது செயல்கள் மூலம் வெளிப்படுபவது. அந்த உள்ளழகு உள்ளவர்கள் ஒரு சிலரே!" ■

# கரைசேரத் தோணியில்லை!



தோட்டத்து முலையில்
தூங்காது படுத்திருந்தான் கபிலன்.
மரநிழலொன்றுக்குள்
மறைந்தவன் கிடந்தாலும்
இரவின் கொடுமைக்காரன்
இலைகளினூடே எட்டி
கசிந்திடும் கதிர்களால்
கபிலனின் தனியுடல் தீண்டினான்.
தமியனின் உயிரைத் தீயாக்கினான்.
தேனிறைக்கும் சந்திரன் நின்று
தீயிறைத்துச் சுட்டான்.

மென்மையாய்த் தவழும் தென்றலும்
மேனியைக் குத்திச் சென்றது.
மூளைக்குள் புகுந்த தீ
வழிந்தது உடலெங்கும்.
கொதிக்கும் சதைக்குள்
ஊர்ந்த காமம்
நரம்புகளில் பாய்ந்த

## இலக்கிய நயம்

செந்நீரை வெந்நீராக்கிப்
பரவியது.

புடைத்த நரம்புகள் அதிர்ந்தன.
சடைத்தெழுந்த அவள் நினைவு
சர்ப்பமெனச் சீறியது.

தவளைக்குப் பாம்பின் வாய்விரிப்பாய்
அவள் வியப்பின் விழிவிரிப்பில்
வீழ்ந்தவன் இவன்!
அவளை முதல் பார்த்த நாளை
நெஞ்சில் மீட்டான்
அசை போட்டான்.

சிறு தேளைக் கண்டு அந்த
நறுங்குமரி மருண்டு நின்றாள்.
சென்றான்
தடியெடுத்து வென்றான்.
தேள் வாலைக் கரம் தூக்கி
எறிந்தான்.
மீண்டு திரும்பினான்-
களிறெறிந்து பெயர்ந்த
காளையென.

அவள்
விழிகளில் சமுத்திரத்தை விரித்தாள்.
இவன் வீழ்ந்தான்.
முக்குளித்து மீள்வதற்குள்

முறுவலால் அம்பெய்தாள்.
கணை முனையில் தேன் தடவி
கண்ணிமைத்த பொழுதுக்குள்
நெஞ்சுருவிப் பாய்ந்தாள்.
நிறையழித்தாள்.

முன்னிருக்கும் எழிலமுதம்
விழியள்ள
பின்னிருக்கும் நாகம்
கூந்தலென அசைய
இடமும் வலமுமென அடி நகர
இடம் பெயரும் மருங்கசைய
'பாம்புரித்தன்ன', 'காம்புசொலித்
தன்ன'
இடைச் சேலை சரசரக்க
'முள்ளெயி றிலங்கச் செவ்வாய்
முறுவல் தாதியாக
அள்ளிக்கொண்டுண்ணக் காமம்
கனிவி'த் துய்ய நோக்க,

தயங்கிப் பின்தங்கி
மெல்ல மெல்ல இட்ட அடியும்
எடுத்த அடியும் கொப்பளிக்குமோ
எனப் பயந்து தளர
நெளிந்தே குலையும் பின்னழகும்
எடுத்துவிட எடுத்துவிடச்
சரிந்தே மனங்குலைக்கும்

முந்தானை மறைக்க வொண்ணா
முன்னழகும்
விழியிழக்க வெறித்து
நோக்கி விருந்துண்டு
காமனார் அம்பு தாக்கி
அகமும் முகமும் களியேற
அவள் 'அணிமயில் அசை நடை'
கண்டிருந்தான் கபிலன்.

அருகில் வந்தாள்.
இவன் உருகி நின்றான்.
கண்ணில் ஈரம் பளபளக்க

கனிவாய் திறந்து "நன்றி!" என்றாள்.
அந்தச் சொல்லில் தேனைச்
சொட்டினாள்.
நெஞ்சினுள்ளே யாழை
மீட்டினாள்.
பயத்தில் வெளுத்த முகம்
பனித்துளியாய்ப் பளபளத்த
வியர்வை முத்து
முறுவல் கிளறும் தலையசைப்பு
கழுத்தணைத்த அணிமின்னல்
அதை ஏற்றியிறக்கும் மூச்சிழுப்பு
அலையலையாய்ப் புரண்டும்
முன் விழுந்து
பிறை நிலவில் சுருண்டும்
அடங்காத் தனி இழைகள் காற்றில்
அலைந்தும் குழல் நீட்டம்.
இடுப்பில் இன்னொரு நிலவு

தருவது
முழடில்யன்

எறிந்தது கதிர்களை.
அந்த மடிப்பில் சிக்கிய கண்கள்
திரியாகிச் சீற
வெடித்தது இதயம்.

எப்படிப் படைத்தான் பிரம்மன்
இப்படி ஒரு வடிவை?

சிரித்தாள், சிறக்கணித்து
நோக்கினாள்.
நன்றி சொன்னாள். இதயத்தைத்
துண்டு துண்டாய் நறுக்கினாள்

நின்று தயங்கி
நடந்தாள் உயிர்பிரித்து.

கபிலன்
கடலில் சிக்கிய தோணியானான்
காற்றில் சூழலும் சருகானான்
ஆசைக்குத் தணிவேது?
அள்ளி அள்ளிக் குடிக்க
அடங்காக் கடல்நீர்த் தாகம் போல
வெட்ட வெட்ட அடர்ந்து சடைத்தது.
எத்தனை தலைமுறை வேட்டையின்
வளர்ச்சி!
உண்ண உண்ண நிறையாத
ஓநாய்ப் பசி!

இரக்கமின்றிப் பிணங் கொத்தும்
கழுகாக அவள் நினைவு!

கண் இமை பொருந்தவில்லை.
காற்றுக்கும் இரக்கமில்லை
படுக்கை நொந்து பஞ்சணை உறுத்த
விட்டத்திலிருந்தும் அவள்
விழி நெருப்பே வறுத்தெடுக்க
வீட்டினுள்ளிருக்கப் பிடிக்காமல்
வெளிக்கிட்டான்.

எங்கும் நிறைந்திருந்த
இரவின் அமைதி அவன்
தனிமைத் தணலை ஊதிக்
கொழுந்துவிடும் நெருப்பில்
நெஞ்சவிய
தோட்டம் வந்தான்,
தூங்காமல் படுத்திருந்தான்.
காதல் கடலிலே வீழ்ந்துவிட்டான்
கரைசேரத் தோணியில்லை.

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.

(குறள் : 1164)

# ஸ்போர்ட்ஸ்

## சச்சின் - லாரா தலைமையில்
## ஆசிய - உலக அணிகள் மோதல்





இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான ஆசிய அணியும், மேற்கிந்தியத் தீவு களின் பிரையன் லாரா தலைமையிலான உலக அணியும் வரும் நவம்பர் 3ம் திகதி ஓமான் தலைநகர் மஸ்கட்டில் மோதவுள்ளன.

'மஸ்கட் சலன்ஞ் 2000' கோப்பைக்காக மோதும் இந்தப் போட்டி பகல் இரவுப் போட்டியாக ஓமான் பொலிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஓமானின் 30வது குடியரசு தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இந்தப் போட்டியில் முதலில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதுவதாக இருந்து பின்னர் கைவிடப்பட்டது.

வாஸிம் அக்ரம், இன்ஸமாம்-உல்-ஹக், ஷஹீட் அஃப்றிடி (பாகிஸ்தான்) சனத் ஜயசூரிய, முரளிதரன் (இலங்கை), சௌரவ் கங்குலி, அனில் கும்ளே (இந்தியா) ஆகியோர் சச்சின் தலைமையிலான ஆசிய அணியில் இடம்பெறும் முக்கிய வீரர்களாவர்.

கொட்னி வோல்ஷ், ரிக்கார்டே பொவல் (மே.இ.தீவுகள்), கிறிஸ் கென்னஸ் (நியூஸிலாந்து) அடம் பெலியாக், மார்க் ராம் பிரகாஷ் (இங்கிலாந்து) டரன் லீமன் (அவுஸ்திரேலியா) ஆகியோர் உலக அணியில் இடம் பெறுபவர்களில் முக்கியமானவர்கள்.

## காத்திருக்கும் பரிசு மழை

கென்யத் தலைநகர் நைரோபியில் நடைபெறவிருக்கும் நொக்-அவுட் முறையி லான மினி உலகக்கோப்பை போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு பரிசுமழை காத்திருக்கிறது.

இப்போட்டியில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் (கிட்டத்தட்ட 7 கோடியே 50 இலட்சம் ரூபாய்) பரிசாக வழங்கப்பட இருக்கிறது.

இந்தப் பரிசுப்பணம் கோப்பையை வெல்லும் அணிக்கு மட்டுமன்றி கால் இறுதி, அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெறும் அணிகளுக்கும் கிடைக்கவிருக்கிறது.


டெஸ்ட்போட்டிகளில் விளையாடும் அந்தஸ்தைப் பெற்ற 10 அணிகள் மோதும் இந்தப் போட்டிகளை கென்யா நடத்துகிறது. இப்போட்டிகள் ஒக்டோபர் 3ம் திகதி ஆரம்பமாகின்றன.

இப்போட்டிகளின் போது சர்ச்சைக்குரிய சம்பவம் ஒன்று நடந்தாலும் நடைபெறலாம். சுமார் 5 வருடங்களுக்கு முன், இலங்கை வீரர் முரளிதரன் தவறாகப் பந்தை வீசுவதாகக் குற்றஞ்சாட்டிய அவுஸ்திரேலிய நடுவர் டரில் ஹெயார் மினி உலகக் கோப்பை போட்டித் தொடரில் நடுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தான் நடுவராகக் கடமையாற்றும் போட்டிகளில் முரளிதரன் பந்து வீசினால் 'நோ போல்' என்று தீர்ப்பளிப்பதாக ஒரு முறை கூறியிருந்தார். மேற்கிந்தியத் தீவு களுக்கெதிரான முதல் சுற்றுப் போட்டியில் இலங்கை வென்றால் கால் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானைச் சந்திக்க வேண்டும். இந்தப் போட்டிக்குத் தான் டரில் ஹெயார் நடுவராக இருக்கிறார்.

மறுபடி முரளி-ஹெயார் பிரச்சனை வருமா?

### இவர்தான் அவர்



எஸ். ஜானகி

# சிந்தியா பதில்கள்

**நகரசபை காரியாலயங்களில் எழுதியிருக்கும் '2000ஆம் ஆண்டில் யாவருக்கும் புகலிடம்' என்பதன் அர்த்தம் என்ன?**
வ.இளங்கோவன், டெம்பல்ஸ்டோ.

அதன் நாயகர் மறைந்துதான் ஏழு ஆண்டுகளாகிவிட்டனவே! ம்... இன்றைக்கு நானும் ஒரு சொந்த வீட்டில் குடியேறி விடுவேன் என்றுதான் நம்பிக்கொண்டிருந்தேன். ஒரு சைக்கிள் குண்டுக்காரர் கெடுத்துவிட்டார்.

**ஆனந்த விகடனுக்கு மதன் போல... தினமுரசுக்கு சிந்தியா என்று சொல்லலாமா? (என்ன, உச்சி குளிர்ந்து விட்டதா?)**
பீற்றர் ஜோன்தாஸ், பெரியகடை, மன்னார்.

விகடனில் 'மதன் பதில்கள்', தினமுரசில் 'சிந்தியா பதில்கள்' வருகிறது சரிதான். அடைப்புக்குறிக்குள் நீங்கள் மதனிடம் கேட்டிருப்பதற்கு, அவர் என்ன சொல்கிறார் என்று தெரியவில்லை.

**கண்டதும் உடனே காதல் உருவாவதற்குக் காரணமாக இருப்பது எது?**
மார்க்கண்டு வாணி, கிரான்.

கண்தான்!

**ஏன்தான் இந்த ஆண்டவன் இப்படி ஒரு சிலருக்கு அறிவையும் அழகையும் அதிகமாகப் படைத்திருக்கிறான் என்ற கேள்வி உங்கள் மனதில் எழுவதில்லையா?**
கௌரி, கொழும்பு-10.

எழாமல் என்ன? வீட்டிற்கு வந்து கண்ணாடியைப் பார்க்கும்போது இன்னும் பெரிதாக எழும். என்ன செய்ய?

**சிந்தியா! தீர்வு முயற்சிகள் எதனையும் பாராளுமன்றத்தில் ஆதரிக்கப் போவது கிடையாது. தனிநாட்டுக்கான போராட்டத்திற்காகவும் தங்கள் சார்பில் யாரும் பாராளுமன்றம் செல்ல வேண்டியதில்லை என இரண்டெழுத்தார் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். அப்படியிருக்க, த.வி.கூட்டணியினர் ஏன் பாராளுமன்றம் செல்ல வேண்டுமெனக் கேட்கிறார்கள்?**
வீ. நிர்மலன், யாழ்ப்பாணம்.

ஒரு பாராளுமன்றக் கதிரையின் மாத வருமானமும் ஏனைய வருமானங்களும் எவ்வளவு பெரிய தொகை என்பதைப் பத்திரிகைகளில் விலாவாரியாக எழுதியிருக்கிறார்களே... நீங்கள் பார்க்கவில்லையா? எவ்வளவு காலமாக அந்தக் கதிரைகளுக்குச் சொந்தம் கொண்டாடியவர்கள்... இலகுவில் விட்டுப் பிரிய எப்படி மனம் வரும்?

என்றாலும், இந்தமுறை அவர்கள் பாராளுமன்றம் செல்வதற்கான சகல வாய்ப்புகளையும் சங்கரியார் தனது அறிக்கைகளால் அழித்து வருகிறார் கவலையை விடுங்கள்!

**அன்பின் சிந்தியா! என் காதலை அவளிடம் பல தடவைகள் வெளிப்படுத்தி விட்டேன். ஆனால் அவளோ சிரிப்புடன் மௌனமாகிறாள். ஏன்? அவள் மௌனம் மறுப்பா? சம்மதமா?**
ஜி.எச்.கே.அஜந்த, அக்கரைப்பற்று-08.

மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அந்தச் சிரிப்புதான் உதைக்கிறது! அது சந்தோஷமா, ஏளனமா என்றறிய இன்னும் சில தடவைகள் முயன்றால்தான் உண்டு. (ம்... ஒரே சிற்றிங்கில் பாஸாகி விட இதெல்லாம் குதிரை ஓடக்கூடிய சமாச்சாரமா, என்ன?)

**House Wife என்று அழைக்கிறார்களே அவர்கள் வீட்டுக்கு மனைவியா இல்லை கணவனுக்கு மனைவியா?**
மீ.மு.இர்ஷாத், பண்டாரவளை.

Camera man என்றால் கமெராவுக்கு மனிதன் என்றா எடுத்துக் கொள்கிறீர்கள்?

**பெண் என்றால் ஏன் இவ்வளவு சுவாரஷ்யம்?**
எஸ்.பிரகாஷ், நாவலப்பிட்டிய.

நீங்கள் ஆண் என்பதால் அப்படித்தான். 'ரிதம்' படம் பார்த்தீர்களா? பெண்கள் அதிகமாக வேலை செய்யும் வங்கிக்கு அர்ஜுனை அழைத்துப் போகையில் மணிவண்ணன் சொல்கிறார். "மற்ற வங்கிகளில் பணத்தைப் போட்டால்தான் Interest, இந்த வங்கியில் பணம் போடப் போவதே Interest....."

**அன்பின் சிந்தியா! 'கண்ணே கலைமானே' பாடல் எந்தப் படத்தில்? யார் பாடியது? (தயவு செய்து பதில் தந்து என் குழப்பம் தீருங்கள்)**
ஏ.ரமணன், உப்புக்குளம்.

'மூன்றாம் பிறை'யில் கே.ஜே.ஜேசுதாஸ். (இந்த வாழ்க்கையின் கொடுமையைப் பாருங்கள். எப்படி எப்படியெல்லாம்தான் குழப்பம் வருகிறது!)



'மூன்றாம் பிறை' படத்தில் கமல்-ஸ்ரீதேவி

**எனது அபிமான நடிகர் விஜய்யின் விலாசத்தைத் தரமுடியுமா?**
ஜே.ஜெஸ்மின், அநுராதபுரம்.

**நடிகர் விஜய்யின் முகவரி என்ன?**
எ.ஃப.சுல்பி, கதுருவெல.

இல. 64, காவேரித் தெரு, சாலிக்கிராமம், சென்னை 600 093.

**'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதென்றால்' என்ன சிந்தியா?**
மொஹமட் இர்ஹாம், காத்தான்குடி-05.

இரண்டெழுத்தாரிடமிருந்து உயிரைப் பாதுகாத்துக்கொள்ள அரசாங்கப் பாதுகாப்பும் வேணும்... அரசாங்கத்தை அறிக்கைகளால் எதிர்த்து, "போராடும் தம்பிமாருக்காகத்தான் பாராளுமன்றம் போகிறோம் என்றும் சொல்ல வேணும். ஆயுதங்களோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளாத எங்களுக்கு வாக்குப் போடுங்கள் என்றும் கேட்கவேணும்... ஆயுதப் போராட்டம் வெற்றி பெற எங்களுக்குப் போடுங்கள் என்றும் சொல்ல வேணும். இந்த அவஸ்தையைத் தானே இர்ஹாம் கேட்கிறீர்கள். நேரடியாகக் கேட்க வேண்டியது தானே?

**நான் உங்களிடம் கேள்வி கேட்க மாட்டேனே, எப்படி பதில் தரப் போகிறீர்? ஹி... ஹி.. ஹி...**
எம்.எச்.எம்.இர்பான், பொகவந்தலாவ.

பதில் தர முடியாது என்றுதான். ஹி... ஹி... ஹி....

**வாழ்க்கை இன்பமானதா, துன்பமானதா? மழுப்பாமல் ஒழுங்கான பதில் கூறுங்கள்?**
ஏ.ஆர்.ஹலீமா, புதிய காத்தான்குடி-02.

இதில் மழுப்ப என்ன இருக்கிறது? இதற்கு அருமையான பதிலை ராமகிருஷ்ண பரமஹம்சர் குட்டிக்கதை ஒன்றின் மூலம் சொல்லியிருக்கிறார். எடுத்து விடுகிறேன்:

மேற்படி கேள்வியை ஒரு பெரியவரிடம் கேட்டபோது, "பூனைக்குப் பல் இருக்கே அது நல்லதா கேட்டதா?" என்று திருப்பிக் கேட்டார் அவர்.

முதலில் கேள்வி கேட்டவர் குழம்பினார். பெரியவர் விளக்கமளித்தார்.

"ஒரு பூனைக்கு இருக்கிற பல் நல்லதா கெட்டதா என்று கேட்டால் என்ன பதில் வரும். அது யாரிடம் கேட்கிறோம் என்பதைப் பொறுத்தது. அந்தப் பூனையின் குட்டியிடம் கேட்டால், என் அம்மாவிடம் இருப்பது வெறும் பல் இல்லை. அது கருணையின் வடிவம். அந்தப் பல்லாலேதான் அம்மா என்னைக் கவ்வித் தூக்குவா. பாதுகாப்பான இடங்களுக்கு என்னைத் தூக்கிச் செல்வது அம்மாவின் பல்தான். அந்தப் பல்தான் என்னைக் காப்பாற்றுகிற தெய்வம் என்று சொல்லும்.

ஆனால், இதே கேள்வியை ஒரு எலியிடம் கேட்டால், அது என்ன சொல்லும்?

"பல்லா அது? எமன்! கடவுள் பூனையைப் படைச்சது கூடப் பரவாயில்லை. குத்தூசி மாதிரிக் குத்துகிறது. அந்தப் பல்லையும் ஏன் படைச்சார்? அந்தப் பல்லின் கொடுமை கடிவாங்குகிற எனக்குத்தானே தெரியும்" என்று புலம்பும்!

அதே மாதிரித்தான், இந்த வாழ்க்கை இன்பமானதா, துன்பமானதா என்று கேட்டால், இந்த வாழ்க்கையைப் பார்க்கிறவர்களின் தன்மையைப் பொறுத்தது தான் அது!

# மன்னாதி மன்னன் 25

விக்கிரமாதித்த மன்னனின் முதுகில் ஏறி இருந்த வேதாளம் தனது இருபத்தி நாலாவது புதிர்க்கதையைக் கூற ஆரம்பித்தது.

கடுங்காபுரி என்ற நாட்டை ஆட்சி புரிந்து வந்த சேனாதிபதி என்ற அரசனுக்கு, தான் ஒரு நாட்டின் மன்னன் என்பதைக் காட்டிக் கொள்ளாமல் மாறு வேடத்தில் பல நாடுகளையும் சுற்றிப்பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. தன் விருப்பத்தை பட்டத்து ராணியிடமோ மந்திரி பிரதானிகளிடமோ தனது ஒரே மகளிடமோ அவன் கூற விரும்பவில்லை. தனது ஆசையை எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டுமென்ற நோக்கத்தில் ஒருநாளிரவு அரண்மனையை விட்டு வெளியேறினான். ஒரு குடியானவன் மாதிரி வேடம் புனைந்து கொண்டு தலை நகரத்தின் வீதிகளில் சென்ற மன்னனை எவரும் அடையாளம் கண்டுபிடிக்க முடிய வில்லை.

மகாராணியும் மகளும் அடுத்த நாட் காலையில் கண்விழித்துப் பார்த்தபோது, மன்னனின் படுக்கை காலியாக இருந்தது. அரண்மனை முழுவதும் இருவரும் தேடினார்கள். அரசன் அகப்படவில்லை.

மன்னரைக் காணவில்லை என்ற தகவல் மந்திரி, பிரதானிகளுக்கும் எட்டியது. அவர்களும் நாலா திக்குகளிலும் தேடி அலைந்தார்கள். பல வீரர்கள் குதிரைகளில் சவாரி செய்து அயலூர்களிலெல்லாம் தேடிப் பார்த்தார்கள். எதுவித பலனும் கிடைக்கவில்லை.

தன்னைத் தேடி பல வீரர்கள் குதிரைகளில் ஓடிச் செல்வதை மாறு வேடத்திலிருந்த மன்னன் சேனாதிபதி பல தடவைகள் கண்டான். தான் மாறு வேடத்தில் இருப்பதனால் அவர்களால் இலகுவில் அடையாளம் கண்டுபிடித்துவிட முடியாது என்ற துணிவுடன் மன்னன் தன் பாட்டுக்கு நடந்து சென்றான்.

பட்டத்துராணியும் இளவரசியும் மன்னனைக் காணாமல் கதிகலங்கிப் போனார்கள். ஆட்சியில் மன்னன் இல்லாமையினால் நாட்டைப் பரிபாலிக்க புதிதாக ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்க முயற்சிகள் நடைபெற்றன.

அரசனுக்கு ஆண் வாரிசு இல்லாமையால் அவருடைய மகளையே ஆட்சியில் அமர்த்த சில அமைச்சர்கள் முடிவெடுத்தனர். இம் முடிவினை மகாராணியோ இளவரசியோ விரும்பவில்லை. "எப்படியும் மன்னர் வந்து விடுவார். அதுகாலம் வரை சற்றுப் பொறுத்திருக்கலாம்" என்று அவர்கள் அமைச்சர்களிடம் கூறிப் பார்த்தார்கள். மூன்று மாதங்கள் வரை மன்னருக்காகக் காத்திருப்பது என்று முடிவு செய்தார்கள். காத்திருந்தார்கள்.

கடுங்காபுரி நாட்டின் அரசன் காணாமல் போய் விட்ட கதை அயல்நாடுகளுக்கும் பரவிற்று. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டைக் கைப்பற்றி விடலாம் என்று அயல் நாட்டு மன்னர்கள் சிலர் திட்டமிட்டனர். அவ்வாறு வேற்று நாட்டு மன்னர்கள் தங்கள் நாட்டைக் கைப்பற்றினால் பல தொல்லைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்ற அச்சத்தினால், மன்னரைத் தேடி மகாராணியும் இளவரசியும் தனியாகப் புறப்பட்டுச் சென்றனர். அவர்களும் சாதாரண குடிமக்கள் போன்றே தங்கள் உடையலங்காரங்களைச் செய்து கொண்டு சென்றனர். இவ்வாறு இவர்கள் இருவரும் அடுத்த ஊர் சென்றபோது பெருமழை பெய்யத் தொடங்கியது. இதனால் இரு பெண்களும் அங்கிருந்த ஒரு மண்டபத்தில் ஒதுங்கி நின்றனர்.

மழைவிட்டதும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

அவர்கள் இருவரும் மண்டபத்தை விட்டு அகன்றதும், அந்த இடத்துக்கு வழிபோக்கர்களான ஒரு தந்தையும் மகனும் வந்து சேர்ந்தனர்.

மண்டபத்தின் தரையிலே இரு பெண்களின் காலடையாளங்கள் பதிந்திருப்பதைக் கண்டனர். அப்பாதச் சுவடுகள் சில வினாடிகளுக்கு முன்னேதான் அவ்விடத்தில் பதிந்திருக்கவேண்டும் என்று அறிந்து கொண்டனர்.

அந்தப் பாதச் சுவடுகளைப் பார்த்ததும் பெரிய பாதங்களையுடைய ஒரு பெண்ணும் சிறிய பாதங்களுடைய ஒரு சிறு பெண்ணும் தான் அங்கு வந்திருக்க வேண்டும் என்று இருவரும் கருதினார்கள். தந்தைக்கும் மகனுக்குமிடையில் ஒரு முடிவுக்கும் வந்தார்கள்.

"பெரிய பாதத்தையுடைய பெண் எப்படியும் மூத்தவளாக இருக்கவேண்டும்; சிறிய பாதங்களை உடையவள் இளவயதினளாக இருக்கவேண்டும்" என்று கணித்துக் கொண்ட தந்தையும் மகனும் தங்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்தனர்.

பெரிய பாதங்களையுடைய பெண்ணை தகப்பனாரும், சிறிய பாதங்களையுடைய பெண்ணை மகனும் மணம்முடித்துக் கொள்வதாக தங்களுக்குள் உடன்படிக்கை செய்து கொண்டனர். எப்படியும் இரு பெண்களையும் அன்றைய தினமே கண்டுபிடித்து விடலாம் என்று கருதிய தந்தையும் மகனும் பாதையில் பதிந்திருந்த பெண்களுடைய பாதச் சுவடுகளைப் பின்பற்றி வேகமாக நடந்தார்கள்.

## முறை தெரியாக் கதை!

மாலையாவதற்குள், அடுத்த ஊரின் எல்லையில் இரு பெண்களையும் அவர்கள் கண்டு கொண்டனர்.

தந்தையும் மகனும் அப்பெண்களைக் கண்டதும் அவர்களுடைய இரு பாதங்களையுமே முதலில் கவனித்தனர். அவற்றைக் கண்டதும் இருவரும் திகைப்புற்றனர். அவர்களில் மகாராணியின் பாதம் சிறியதாகவும் இளவரசியின் பாதம் பெரிதாகவும் இருந்தமையே அவர்கள் வியப்புக்குக் காரணமானது.

இருப்பினும் தங்களுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டைப் பற்றி இரு பெண்களிடமும் தெரிவித்தனர். அவர்கள் இருவரும் அந்த உடன்பாட்டை ஏற்றுக் கொண்டனர். எனவே சிறிய பாதங்களை உடைய மகாராணியை மகனும் பெரிய பாதங்களையுடைய இளவரசியை தந்தையும் திருமணம் செய்து கொண்டனர்.



முறைகேடான இத்தகைய திருமணங்களை அவர்களுடைய ஊரவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதனால் தங்கள் மனைவியர் இருவரையும் தங்கள் ஊருக்கு அழைத்துச் செல்லாமல், இவர்கள் நால்வரும் சந்தித்துக் கொண்ட அதே ஊரில் தங்குவதென முடிவெடுத்தார்கள்.

இவ்வாறு சில வருடங்கள் இவர்கள் குடும்பமாக அதே ஊரில் தங்கியிருந்தனர். அவர்களுக்கும் குழந்தைகள் பல பிறந்தன.

இவ்வாறு கதையை முடித்த வேதாளம் விக்கிரமாதித்தனிடம், "விசித்திரமான இந்தத் திருமணங்கள் மூலம் பிறந்த குழந்தைகள் தங்களுக்குள் எவ்வாறு முறை சொல்லி அழைப்பார்கள்?" என்று கேட்டது வேதாளம்.

ஏற்கனவே வேதாளம் கூறிய இருபத்தி மூன்று கதைகளுக்கும் சரியான விடையளித்த விக்கிரமாதித்தன் இந்தக் கதைக்குரிய புதிரை விடுவிக்க முடியாமல் திணறினான்.

வேதாளம் வெகு நேரமாக விக்கிரமாதித்தனிடமிருந்து எத்தகைய பதில் வரப் போகிறது என்று எதிர்பார்த்து காத்திருந்தது. ஆனால் உரிய பதிலைக் கூற விக்கிரமாதித்தனால் முடியவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட வேதாளம், முன்புபோல் ஓடவில்லை. விக்கிரமாதித்தனுடைய முதுகிலிருந்து கீழே குதித்து, விக்கிரமாதித்தனைப் பார்த்து தன்னுடைய சொந்த வரலாற்றைக் கூறத் தொடங்கியது.

### வேதாளத்தின் கதை

"விக்கிரமாதித்த மாமன்னனே! இதுவரையில் மற்றவர்களுடைய கதைகளைக் கூறி வந்தேன். ஆனால் இப்பொழுது என்னுடைய சொந்தக் கதையைக் கூறப் போகிறேன்.

சோழநாட்டிலுள்ள திரிசிரபுரம் என்ற ஊரிலுள்ள சிவாலயத்தின் பூசகராக இருந்தவன் நான். காளத்தி ஐயன் என்பது என்னுடைய சொந்தப் பெயர். அன்றொருநாளிரவு ஆலயத்தின் பள்ளியறையில் சிவனுக்கும் அம்பாளுக்கும் உரிய சாமப் பூசையை முடித்துவிட்டு, களைப்பாக இருந்தமையினால் பள்ளியறையின் கதவைப் பூட்டிவிட்டு படிக்கட்டில் அமர்ந்து கொண்டேன். சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்தேன். அப்போது பள்ளியறையினுள் சிரிப்பொலியும் ஓர் ஆணும் பெண்ணும் பேசும் ஒலியும் கேட்டது. கதவிலிருந்த சாவித்துவாரத்தின் வழியாக உள்ளே பார்த்தேன். அப்போது சுவாமியும் அம்பாளும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். உரையாடலையும் காதுகொடுத்துக் கேட்டேன்.

அம்பாள் சிவபெருமானிடம், "ஈரேழு பதினான்கு உலகங்களிலும் தெரிந்திருக்காத கதை ஒன்றினைக் கூறுங்கள்!" என்று கேட்டார்.

பதிலளித்த சிவபெருமான், "ஒரு கதையல்ல. பல கதைகள்-யாவுமே புதிர்க்கதைகளாகக் கூறுவேன். கதையின் முடிவில் அக் கதையின் புதிரை நீ விடுவிக்க வேண்டும்!" என்ற நிபந்தனையுடன் இருபத்திநான்கு கதைகளை சிவபெருமான் கூறினார்.

இதுவரை நான் கூறிவந்த கதைகள் அத்தனையுமே உமாதேவியாரிடம் சிவபெருமான் கூறிய கதைகளாகும். ஒவ்வொரு கதையையும் சிவபெருமான் கூறி முடித்ததும், சிவபெருமான் புதிரை விடுவிக்குமாறு கூறுவார்.

நீர் எவ்வாறு பதில் கூறினீரோ அதே போன்றே உமாதேவியாரும் முதல் இருபத்தி மூன்று கதைகளுக்கும் விடையளித்தார். உம்மைப் போலவே இருபத்தி நான்காவது கதைக்குரிய விடையை அம்பாளால் விடுவிக்க முடியாமல் போய்விட்டது. அப்போது சிவபெருமான் "தேவி உம்மால் மட்டுமல்ல இந்தக் கதைக்கு எவராலுமே பதிலளிக்க முடியாது. ஆகவே இது முறை தெரியாக் கதை!" என்று கூறினார்.

சிவபெருமான் உமாதேவியாரிடம் கூறிக் கொண்டிருந்த கதைகள் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தமையினால், இரவு முடிந்து பொழுது புலரும் நேரம் வந்துவிட்டதைக் கூட என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவசர அவசரமாக எழுந்து வீட்டுக்கு ஓடிப் போனேன். வீட்டில் மனைவி, "நான் இவ்வளவு தாமதித்து வீடு திரும்பியதற்கான காரணத்தைக் கேட்டாள். அவளிடம், கோவிலில் நடந்த சம்பவத்தைக் கூறினேன் அவள் உடனடியாகவே சிவபெருமான் உமையவளிடம் கூறிய கதைகள் அனைத்தையும் தனக்குக் கூறியாக வேண்டும் என்று கேட்டாள்.

அப்பொழுது நான் "தெய்வ இரகசியத்தை வேறு எவரிடமும் கூறலாகாது. அது தெய்வ நிந்தையாகிவிடும்!" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். ஆனால் அவள் என் சொல்லைக் கேட்கவில்லை.

"உங்களுக்குத் தெரிந்ததை நான் தெரிந்திருக்கக் கூடாதா?" என்று என்னை பலவந்தமாகத் தெண்டித்தாள். வேறு வழியின்றி, "வேறு எவரிடமும் இதைப் பற்றிக் கூற வேண்டாம்" என்ற நிபந்தனையிட்டு சிவபெருமான் கூறிய கதைகள் அத்தனையும் என் மனைவியிடம் சொன்னேன்.

"வேறு எவரிடமும் இந்தக் கதைகள் பற்றியோ கோயிலில் நடந்த சம்பவம் பற்றியோ எதுவும் கூறக் கூடாது!" என்று பலதடவை அவளிடம் கூறினேன்.

*(மன்னன் வருவான்...)*

இராஜகுமாரன்

## தேர்தல் கால ஜோக்ஸ்

தேர்தல் என்று வந்துவிட்டால் தேர்தலில் குதித்துள்ள வேட்பாளர்களுக்கு மட்டும் கவலையா? வாக்காளர்களுக்கும் கவலைதான். வோட்டுக்கேட்டுவரும் வேட்பாளர்கள் கொடுக்கும் விளக்கங்களைக் கேட்டுக் கேட்டு அவர்களுக்கும் குழப்பமும் கவலையும் பிடித்திருக்கும்.


அத்தகைய பரிதாபகரமான வாக்காளர்களுக்குச் சற்றுக் கிளுகிளுப்பை ஊட்ட முரசு தேடி எடுத்த தேர்தல் கால ஜோக்ஸ் இவை. கவலையை மறந்து சற்றுச் சிரியுங்கள்.



"திடீர்னு கூட்டத்திலே ஏதாவது குழப்பம் கலாட்டான்னா மேடையோட அப்படியே மேலே பறந்துருவாங்களாம்."



"நடந்து கிட்டேதான் இவர் பேசுவாராம்."



"எதிர்க்கட்சிக்காரர்கள் சதி செய்து மைக் மாதிரி விஷப்பாம்பை வைத்திருக்கிறார்கள். இதை நாங்கள் விடமாட்டோம்."



"நான் அப்பவே சொல்லலை, அவர் தேன் ஒழுகப் பேசுவார்னு...."



அருள் ஜுவல்லர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


! ஆ... அவ்வளவு பசி!. மற்றையோரின் பசியைத் தீர்க்க உணவுக் கடை வைத்திருக்கும் இந்த மாது தன் பசியைத் தீர்த்துக் கொள்கிறார்.

'மத்யூஸ் வருடாந்த உணவு விழா'வில், உணவுக்கடை வைத்திருந்தார் இந்த மாது. தலையில் மக்காச்சோள வடிவில் ஒரு தொப்பி அணிந்திருக்கிறார்.

தனது உணவுக்கடையை நாடி வருவோரின் பசியைத் தீர்த்து வைப்பதில் நாட்டங் கொண்ட இவருக்கு ஆற அமர இருந்து உண்ண அவகாசம் இல்லை இதனால் நின்ற நிலையிலேயே தன் பசியைப் போக்கிறார்.

! விண்வெளியில் பிரம்மண்டமான ஒரு விண்வெளி மையத்தை அமைக்கும் பணியில் 16 நாடுகள் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

இதற்கான முதற்கட்டப்பணி சில மாதங்களுக்கு முன் ரஷ்யாவில் துவங்கியது. இந்த விண்வெளி மையம் விண்ணில் எப்படி வலம் வரும் என்பதை ரஷ்ய கம்பியூட்டர் வரைந்த படம் தான் இது.

இன்னும் 5 வருடங்களுக்குள் இந்த விண்வெளி மையம் முழுமையாக உருவாகிவிடும். இதற்காக 40 தடவைகள் விண்வெளி ஓடங்களை அனுப்ப வேண்டும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## விண் வலம்




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்


SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


## அகோரப் பசி







## குவாக் குவாக் குவாக்

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் அகாஷ்கன் 01.10.2000

சம்பூரைச் சேர்ந்த புவனேந்திரன்-ஷாலினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அகாஷ்கா (01.10.2000) தனது முதலாவது பிறந்தநாளை [illegible]

! கோழிக்குஞ்சுகளைப் பாதுகாக்க தாய்க் கோழி தேவை. நாய் அல்லது பூனைக்குட்டிகளைப் பாதுகாக்க அவற்றின் தாய் நாயோ தாய்ப் பூனையோ தேவை. ஆனால் பருந்து போன்ற பகைப் பறவைகளிடமிருந்து தங்களைப் பாதுகாக்க வாத்துக் குஞ்சிகளுக்கு அவற்றின் தாய்வாத்துதான் தேவை என்ற அவசியமில்லை.

நீரோடைகளில் வாத்துக்குஞ்சு ஒன்றை முன்னே நீந்திச் செல்ல வழிகாட்டி விட்டால், ஏனையகுஞ்சுகள் தாமாகவே பின் தொடர்ந்து செல்லும். அவற்றைப் பிடித்து உண்ண வரும் எதிரிகளைப் பற்றி பயம் அவற்றுக்குக் கிடையாது.

வியட்நாமில் படப்பிடிப்பாளர் ஒருவரின் கமராவுக்குள் நுழைந்த இக்காட்சியில் வியட்நாம் பெண்மணி ஒருத்தி வாத்துக்குஞ்சுகளைப் பின் தொடர்ந்து பாதுகாத்துக் கொண்டு ஒரு தோணியில் செல்கிறார்.

---

→ அண்மையில் கொரியாவில் ஏற்பட்ட புயல் காற்றுடன் கூடிய பெருமழை அங்கு பெரும் சேதங்களை ஏற்படுத்திருந்தது.

இதனால் ஏற்பட்ட சேதங்கள் அதிகமான விவசாயிகளைப் பாதித்து விட்டன.

அறுவடைக்குத் தயாராக இருந்த சுரக்காய்கள் கடும் மழையால் பாதிக்கப்பட்டிருப்பதையும், அவற்றைச் சோகத்துடன் பொறுக்கி எடுத்து அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறார் ஒரு விவசாயி.

சுரக்காய்கள் சந்தைக்குக் கொண்டு செல்லும் பருவம் வருமுன் பறிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது தான் அவரின் கவலைக்கான காரணம்.

இம்முறை இந்த விவசாயிகளுக்கு 'சோக அறு'வடை தான்.

(பட உதவி: அஹமட் நியாஸ், கொரியா)

## சோக அறுவடை

